
ISSN 1888-1246

# அகவிழி

ஆசிரியத்துவ நோக்கு...

விழி : 02 | ஆகஸ்ட் 2006 | பார்வை : 24 | விலை : ரூபா.25.00




30 AUG 2007
மாநகர சபை
யாழ்ப்பாணம்

உள்ளே....

- ஆசிரியர் திறன்களை மேம்படுத்துவதில் கற்பித்தல் மாதிரிகளின் பயன்பாடு
- ஆசிரியத் தொழில் ஒரு முழுமையற்ற வாண்மை உடையதா? ஒரு விமர்சன நோக்கு
- ஆசிரிய கல்வியும் முகாமைத்துவச் சூழல் பிரச்சினைகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அகவிழி வெளியீடு - 2**




# கல்வியில் புதிய சீர்திருத்தங்கள்

## ஒரு விளக்க நிலை நோக்கு

கலாநிதி சபா. ஜெயராசா
(பேராசிரியர், கல்வியியல் துறை,
யாழ். பல்கலைக்கழகம்)

**விலை : ரூபா . 50.00**

**அகவிழி வெளியீடு - 3**




# மனித உரிமைகளும் அபிவிருத்தியும்

க. சண்முகலிங்கம்

**விலை : ரூபா . 80.00**

**புது வரவு**




# கூடம்

**விலை : ரூபா . 100.00**

தொடர்புகட்கு

**அகவிழி**

**AHAVILI,**
***3, Torrington Avenue, Colombo - 07***
***Tel : 011-2506272***
***E.mail : ahavili@viluthu.org***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISSN 1888-1246

# அகவிழி

மாத இதழ்

**ஆசிரியர்:**
தெ.மதுசூதனன்

**ஆசிரியர் குழு :**
சாந்தி சச்சிதானந்தம்
ச.பாஸ்கரன்
காசுபதி நடராஜா

**நிர்வாக ஆசிரியர்:**
மனோ இராஜசிங்கம்

**ஆலோசகர் குழு :**
**பேரா.கா.சிவத்தம்பி**
(தகைசார் ஓய்வு நிலைப் பேராசிரியர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
**பேரா.சபா.ஜெயராசா**
(கல்வித்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
**பேரா.சோ.சந்திரசேகரன்**
(கல்விப்பீடம், கொழும்புப் பல்கலைக்கழகம்)
**கலாநிதி ஹூசைன் இஸ்மாயில்**
(துணைவேந்தர், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்)
**மா.சின்னத்தம்பி**
(தலைவர், கல்வித்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
**கலாநிதி ப.கா.பக்கீர் ஜஃபார்**
(கல்விப்பீடம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்)
**கலாநிதி மா.கருணாநிதி**
(கல்விப்பீடம், கொழும்புப் பல்கலைக்கழகம்)
**மா.செல்வராஜா**
(கல்விப் பிரிவு, கிழக்குப் பல்கலைக்கழகம்)
**தை.தனராஜ்**
(நிபுணத்துவ ஆலோசகர், தொலைக்கல்வி நவீனமாக்கற் செயற்றிட்டம் (DEMP/DEPP), கல்வி அமைச்சு)
**உ.நவரட்ணம்**
(பணிப்பாளர், தமிழ்த்துறை, தேசிய கல்வி நிறுவகம்)

**அச்சு :**
ரெக்னோ பிரின்ட், கொழும்பு - 06
தொலைபேசி: 0777-301920

**வெளியீடு மற்றும் தொடர்புகட்கு :**
**AHAVILI**
3, Torrington Avenue, Colombo - 07.
Tel : 011-2506272
E-mail : ahavili@viluthu.org

## ஆசிரியரிடமிருந்து...

அகவிழி ஆகஸ்ட் இதழுடன் 24வது இதழாக வெளிவருகிறது. ஆசிரியர்களுக்கென்று மட்டுமே தமிழில் தொடங்கப்பட்ட இதழ் தொடர்ந்து கிரமமாக வெளிவந்திருப்பது தமிழ் இதழியல் வரலாற்றில் முக்கியமான பதிவாகும். அந்த வகையில் அகவிழி மகிழ்ச்சி-யடைகிறது.

அதேநேரம் ஆசிரியர்கள் மத்தியில் அகவிழி முழுமையாக சென்றடைந்துள்ளதா? ஆசிரியர்களின் அறிவு, திறன், ஆளுமை விருத்திகளிலும் மற்றும் மனப்பாங்கு மாற்றத்திலும் எத்தகைய மாற்றங்கள் உருவாகக் காரணமாக இருந்துள்ளது? இவை குறித்து நாம் தெளிவான துலங்கல்களை இனங்காண முடியாமல் உள்ள-மையை இங்கு சுட்டிக்காட்டத்தான் வேண்டும்.

வகுப்பறைச் செயற்பாடுகளில் முழுமையாக ஈடுபடும் ஆசிரி-யர்களின் கருத்துகள் அனுபவங்கள் போதியளவு அகவிழியில் இடம் பெறவில்லை. குறிப்பாக தாம் எதிர்நோக்கும் கற்றல் - கற்பித்தல் தொடர்பான பிரச்சினைகளின் பன்முகத்தன்மைகளை வெளிக்-கொணரும் எழுத்துகள் வெளிவரவில்லை. இந்த நிலைமை மாற வேண்டும்.

மேலும் ஆசிரியவினையாற்றலில் காணப்படும் சிறந்த விடயங்-களையும் அவை அல்லாதனவற்றையும் அறிந்து கொள்ள வேண்டிய பெரும் பொறுப்பு நமக்கு உண்டு. இதற்கு ஆசிரியர் பணிகள் பற்றிய பலநிலை, பல தளப்பட்ட மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படுவது அவசிய-மாகின்றது. அவை குறித்து அகவிழி இனிவரும் இதழ்களில் கவனம் குவிக்கும். ஆசிரியர்களின் தொழிண்மை மேம்பாடு கருதி நிறுவன அடிப்படையிலான ஆசிரியர் கல்வி, குறுங்கால மற்றும் நீண்டகால பயிற்சிகள், செயலமர்வுகள் எனப்பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்-படுகின்றன.ஆயினும் இத்தகைய முயற்சிகளின் விளைவுகள் ஆசிரியரின் வினையாற்றலில் எதிர்பார்த்த பலாபலன்களைத் தராத நிலைமைகள் பெரிதும் அவதானிக்கப்பட்டுள்ளன. அகவிழி இந்த நிலைமைகளை மாற்றியமைக்கும் விதத்தில் மாற்றுச் சிந்தனைக்-கான மாற்றுச் செயற்பாட்டுக்கான விரிதளங்களை அகலிக்கவும் ஆழப்படுத்தவும் விரும்புகிறது.

ஆகவே அகவிழி தனது பயணத்தை இன்னொரு கட்டத்துக்கு முன்னோக்கி நகர்த்த விரும்புகிறது. இதனைச் சாத்தியப்படுத்தும் வகையில் அகவிழியின் உள்ளடக்கம் மாற்றங்களை வேண்டியுள்ளது.

இதனால் நாம் ஆசிரியர்களிடமிருந்து இன்னும் நிறைய ஆலோ-சனைகளை கருத்துகளை எதிர்பார்ப்பதில் தவறொன்றுமில்லையே...

நாம் எதிர்பார்க்கின்றோம். ❑

அகவிழியில் இடம் பெறும் கட்டுரைகளுக்கு அதன் ஆசிரியர்களே பொறுப்பு.
கட்டுரைகளில் காணப்படும் கருத்துக்கள் 'அகவிழி' யின் கருத்துக்கள் அல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் திறன்களை மேம்படுத்துவதில் கற்பித்தல் மாதிரிகளின் பயன்பாடு

மாணவர்கள் சூழலுடன் இடைத் தொடர்புபடக்கூடியதும், எவ்வாறு கற்பது என்பதை பயிலத்தக்க வகையில் மாணவர்களின் சூழல்களை ஒழுங்கு செய்வதே கற்பித்தல் செயன்முறையின் மையமாக உள்ளது.

(ஜோன் டூயி. 1916)


திரு.ப.மு.நவாஸ்தீன்
செயற்றிட்ட அதிகாரி
சமூக விஞ்ஞானத்துறை,
தேசிய கல்வி நிறுவகம்.


## 1.0 அறிமுகம்

இன்றைய நவீன காலத்தில் மாற்றம் என்ற ஒன்றைத் தவிர ஏனைய சகலதும் துரிதமாக மாற்றமடைந்து வருகின்றன. இத்தகையதொரு காலகட்டத்தில் ஆசிரியர்களின் பணிகள் சிக்கல் நிறைந்தகாகவும் அதிக பொறுப்பு வாய்ந்ததாகவும் மாறிவருவதுடன் ஆசிரியர்கள் மீதான எதிர்பார்ப்புகள் அதிகரித்தும் வருகின்றன. மாற்றங்களை வகுப்பறை மட்டத்துக்கு கொண்டு செல்லும் ஒரு முகவராகவும் ஆசிரியர்கள் இன்று நோக்கப்படுகின்றனர். வகுப்பறை அல்லது பாடசாலைகளுக்கு முற்றிலும் புறம்பான சூழல்களிலிலுருந்து திட்டமிடப்படும் கலைத்திட்டங்கள், பாடத்திட்டங்களினை வகுப்பறைகளுக்கு ஆசிரியர் கொண்டு செல்லும் போது பல்வேறு சவால்களை எதிர்நோக்குகின்றனர். பாடசாலைகளுக்கு வெளியே, உயர் மட்டத்தில் திட்டமிடப்பட்டு வடிவமைக்கப்படுகின்ற கலைத்திட்டங்களின் பாடத்திட்டங்கள், பாட நூல்கள், ஆசிரியர் வழிகாட்டிகள், கற்றல் சாதனங்கள், கற்றல் சந்தர்ப்பங்கள் என்பன ஒவ்வொரு மாணவனையும் கருத்திற் கொண்டல்லாது, பொதுமைப்படுத்தப்பட்ட நிலையில் வடிவமைக்கப்படுகின்றன. ஆனால் இவற்றை அடிப்படையாகக் கொண்டு ஆசிரியர் தமது மாணவர்களுக்குப் பொருந்தக் கூடிய வகையில் தனது தனித்தனி மாணவர்களுக்காக அல்லது மாணவர் குழுக்களுக்காகப் பொருத்தமான சிறந்த கற்றல் சந்தர்ப்பங்களை உருவாக்க வேண்டியவர்களாக உள்ளனர். இதனாலேயே பொதுக் கொள்கைகளின் அடிப்படையில் கலைத்திட்டங்கள் தயாரிக்கப்பட்ட போதிலும் அவை வகுப்பறை மட்டத்தில் விருத்தி செய்யக் கூடிய வகையில் நெகிழ்ச்சித்தன்மைகளை கொண்டிருக்கின்றன. இத்தகைய சவால்களை வெற்றிகொள்வதற்காக ஆசிரியர் தம் வாண்மையில் விருத்தியை ஏற்படுத்த வேண்டியவர்களாகின்றனர். வாண்மை விருத்தியினூடாகவே ஆசிரியர்கள் பல்வேறு கற்றல் சூழல்களையும் கற்றல் சந்தர்ப்பங்களையும் ஏற்படுத்தும் திறன்களைப் பெறுகின்றனர். இந்த வகையில் பல்வேறு கற்றல் சந்தர்ப்பங்களை உருவாக்குவதற்கும் விருத்தி செய்வதற்கும் கற்பித்தல் மாதிரிகளின் பயன்பாடு அதிகப்பயனுறுதி வாய்ந்ததாக உள்ளது எனக் கூறப்படுகின்றது. எனவே இக்கட்டுரையில் ஆசிரியர் பணியின் சிறப்பான தன்மை குறித்தும் கற்பித்தல் மாதிரிகளின் பற்றிய அடிப்படை விடயங்கள் மற்றும் பயன்பாடுகள் பற்றியும் எடுத்து நோக்கப்படுகின்றது.

## 2.0 ஆசிரியர் பணி — ஓர் உன்னதமான சேவை

இவ்வுலகில் அதிக பொறுப்பு வாய்ந்த சிக்கல் நிறைந்த ஆனால் மேன்மையுடையதுமாக விளங்குகின்ற பணி எதுவென எனது நண்பர் ஒருவரிடம் வினவினேன். சற்றும் தயக்கமின்றி ஆசிரியர் தொழில் என அவர் பதிலளித்தார். எந்தவொரு தொழிலும் முறையாக அல்லது முறையற்ற விதத்தில் மேற்கொள்ளப்படும் போது ஏற்படும் உடனடி விளைவுகள் நல்லதாகவோ தீயதாகவோ அமையலாம். ஆனால் ஆசிரியர் பணியில் மட்டுமே ஒரு மனிதனை வாழ்நாள் முழுதும் சிறந்த ஒரு பிரஜையாக அல்லது ஒரு நடைப்பிணமாக மாற்றும் நிலை காணப்படுகின்றது. இதனால் ஆசிரியர் தொழில் உலகில் அதி சிறந்த, அதே நேரம் மிகப் பொறுப்பு வாய்ந்த தொழிலாக விளங்குகின்றது என தனது பதிலுக்கான காரணத்தை நண்பர் கூறினார். இக்கூற்றையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கான காரணத்தையும் ஆழ்ந்து நோக்கும் போது ஆசிரியர் பணியின் உன்னத நிலையினை, அதிலுள்ள சிக்கல் வாய்ந்த தன்மையை விளங்கிக் கொள்ள முடியும். ஏனெனில் ஆசிரியர்கள் ஏற்படுத்துகின்ற தாக்கங்கள் ஒரு மனிதனிடத்தில் வாழ்நாள்பூராகவும் பிரதிபலிப்பதாகக் காணப்படும். நாம் அன்றாடம் காணும் பல நபர்கள் தமது வளர்ச்சிக்கு அல்லது வீழ்ச்சிக்கு தனது ஆசிரியரின் வழிகாட்டல்களைக் காரணமாகக் கொண்டிருப்பதனைக் காணலாம்.

## 2.1 ஆசிரியர் சேவையின் வளர்ச்சி

கற்றலில் ஈடுபடுவதற்கு உதவுபவரை நாம் ஆசிரியர் என அழைக்கின்றோம். அதுபோன்று மாணவர்களுக்கு பல்வேறு தகவல்களை, கருத்துக்களை, திறன்களை, நுட்பங்களை முறைமையான ஒரு வழியில் முன்வைப்பதை கற்பித்தல் எனவும் இதில் ஈடுபடுவோரை ஆசிரியர் எனவும் அழைப்பதுண்டு.

அண்மைக்காலங்களில் கற்றல் கற்பித்தல் செயன்முறையில் ஆசிரியரின் வகிபங்கு முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. புராதனக்காலங்களில் மனிதன் பகுத்தறிவு சிந்தனை யுடையவனாகக் காணப்பட்ட போதிலும் கற்றல் கற்பித்தல் செயன்முறை என்பது இன்றுள்ளது போன்று நிறுவனமயப்படுத்தப்பட்டதாகவோ ஆசிரியர்களுக்கான பயிற்சிகளையும் வழிகாட்டல்களையும் கொண்டதாக காணப்பட்டு இருக்கவில்லை. ஆரம்ப காலக்கல்வி விசேடத் தகைமைகளைப் பெற்ற, தமது மதத்தலைவர்களாலேயே மக்களுக்கு வழங்கப்பட்டு வந்தன. புராதன இந்தியா, சீனா, எகிப்து போன்ற பிரதேசங்களில் கல்விப் போதனை மதக்குருக்களால் அல்லது இறைதூதர்களால், அல்லது போதகர்களால் வழங்கப்பட்டதாக அறியப்படுகின்றது. இத்தகைய ஆசிரியர்கள் புனிதமிக்கவர்களாகவும் சுதந்திரமிக்கவர்களாகவும் கருதப்பட்டனர். சில மதங்களில் ஆசிரியர் என்பவர் விமோசனம் பெற வழிகாட்டுபவரென போற்றப்பட்டனர்.

புராதன, மத்தியக் காலப் பகுதிகளிலும் கூட கற்பித்தலில் மத நிலையங்களின் செல்வாக்கே மிகுந்திருந்தது எனலாம். மத்திய காலப்பகுதியில் கற்பித்தலுக்கான பொறுப்பினை சமய நிறுவனங்களே ஏற்றிருந்தன. இக்கல்வி நிலையங்களே படிப்படியாக பல்கலைக்கழகங்களாக படிப்படியாக வளர்ச்சியடைந்தன. இதற்கு உதாரணமாக பரீஸ், பொலக்னா (Paris and Bologna), அல் அஸ்ஹர் (எகிப்து), ஜாமியத்துல் கரவிய்யீன், ஜாமியத்துல் ஸைத்தூன் (டியுனிசியா) என்பவற்றைக் கூறலாம். 17ஆம், 18ஆம் நூற்றாண்டுகளில் சிறுவர்களை கல்வியூட்டுவது தொடர்பான சிந்தனைகள் வலுப்பெற்றன. பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த மதகுருவும் கல்வியாளருமாகிய சென் ஜோன் பப்டிஸ் டி லா ஸால்லி என்பவரும் பின்னர் ஜொகான் பெஸ்டலாஸி எனும் சுவிஸ் நாட்டு கல்வியாளரும் சிறுவர்களுக்கான மாதிரிப் பாடசாலைகளை அமைத்ததுடன் கற்றல் கற்பித்தல் தொடர்பான தமது சிந்தனைகள், கோட்பாடுகளை ஆசிரியர்களுக்கு வழங்கி அவர்களைப் பயிற்றுவிக்கவும் செய்தனர்.

கற்றலில் ஈடுபடுவதற்கு உதவுபவரை நாம் ஆசிரியர் என அழைக்கின்றோம். அதுபோன்று மாணவர்களுக்கு பல்வேறு தகவல்களை, கருத்துக்களை, திறன்களை, நுட்பங்களை முறைமையான ஒரு வழியில் முன்வைப்பதை கற்பித்தல் எனவும் இதில் ஈடுபடுவோரை ஆசிரியர் எனவும் அழைப்பதுண்டு.

இத்தகு பின்னணியில் பல்வேறு காலகட்டங்களினூடாக வளர்ச்சியடைந்த ஆசிரியர் பணி விரைவாக மாறிவரும் இன்றைய உலகில் மிகப்பொறுப்பு வாய்ந்த ஒரு கடமையாக மாறியுள்ளது. இப்பணி நாட்டுக்கு நாடு வேறுபடுவதுடன் ஒவ்வொரு நாட்டினது நிலையான ஆட்சி, பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றுடன் இணைத்து நோக்கப்படும் அளவிற்கு முக்கியம் பெற்றுள்ளது. மேலும் ஆசிரியர் பணியுடன் தொடர்புபான விடயங்கள் ஒரு நாட்டுக்குரியதாக மட்டுப்படுத்தப்படாமல், கற்பித்தல் தொடர்பான சிந்தனைகள், கோட்பாடுகள் போன்ற பல விடயங்கள் நாடுகளின் எல்லைகளைத் தாண்டியும் பரவக்கூடிய சர்வதேச விடயமாக விளங்குகின்றன.

## 3.0 கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளும் கற்பித்தல் மாதிரிகளும்

உலகெங்கிலும் நடைமுறைப்படுத்தப்படும் பல்வேறு விதமான கல்விச் செயன்முறைகளின் மிக அடிப்படையான விடயமாக கற்றல் கற்பித்தல் செயன்முறை விளங்குகின்றது. முறைமையான பாடசாலைக் கற்றல் கற்பித்தலில் ஆசிரியர்களும் மாணவர்களுமே நேரடியாகத் தொடர்புறுகின்றனர். கற்றல் கற்பித்தல் செயன்முறையினூடாக மாணவர்களின் முழுமையான ஆளுமை வளர்ச்சியையும் சமூகமயமாக்கலையும் ஏற்படுத்தி நாட்டிற்கும் சமூகத்திற்கும் உரிய தேர்ச்சி மிகு நற்பிரசைகளை உருவாக்குவதே இறுதி இலக்காகக் காணப்படுகின்றது. இத்தகைய உயரிய பணியை வெற்றிகரமாக்குவதில் ஆசிரியர்களின் பங்கு மிக மகத்தானது.

மாணவர்களின் செயலாற்றுகையினை விருத்தி செய்து சகல மாணவர்களினதும் கல்விசார் அடைவுமட்டத்தை உயர்ந்த தரத்திற்கு கொண்டு வருவதற்கு ஆசிரி-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யர்கள் வேண்டப்படுகின்றனர். இதனை ஆசிரியர்கள் தமது கற்பித்தல் செயற்றிறன்களை விருத்தி செய்யாமல் நிறைவேற்றிக் கொள்ள முடிவதில்லை.

ஆசிரியர்கள் கலைத்திட்ட விடயங்களை செயற்படுத்தும் போதும், கற்பித்தலில் ஈடுபடும் போதும் கணிப்பீடு மதிப்பீடுகளினை மேற்கொள்ளும் போதும் பல்வேறு விதமான உத்திகளை (Strategise) கையாள வேண்டியவராகின்றனர். ஆசிரியர்களின் ஒரே விதமான உத்திகள் சகல மாணவர்களிற்கும் சகல வேளைகளிற்கும் சிறந்த பயனைத் தருவதாக அமைந்து விடுவதில்லை. இதனால் வகுப்பறைக்குத் தேவையான வகையில் பாடத்திட்ட கற்றல் கற்பித்தல் முறைகளை பல்வேறு வழிகளில் மாற்றியமைக்கவேண்டியவர்களாகின்றனர். மேலதிக பாடக்குறிப்புகளைத் தயாரித்தல், கையேடுகளைத் தயாரித்தல், துறை வல்லுநர்களை வகுப்பறைக்கு வரச்செய்து கற்பித்தல், விளையாட்டுக்களை உருவாக்குதல், கற்றல் பொதிகளை வடிவமைத்தல், பாடத்துடன் தொடர்புடைய வகையில் களவேலைகளையும் சுற்றுலாக்களையும் திட்டமிடுதல், முடியுமாகும் போது உண்மையான காட்சிகளையும் பொருட்களையும் மாணவர்கள் காண்பதற்கு உதவுதல், தனியாள், குழுக் கற்றல்களை மேற்கொள்வதற்குத் திட்டமிடுதல், சிந்தனைகளை கிளரக்கூடிய வகையில் வினாக்களை உருவாக்குதல் என கற்றல் கற்பித்தலுக்காக ஆசிரியர்கள் முன்னாயத்தம் செய்ய வேண்டியுள்ளது. வகுப்பில் கற்கும் மாணவர்கள் ஒத்த தன்மையுடையவர்களாக தனியாள் வேறுபாடுகளின்றி காணப்படும் போது இத்தகைய பிரயத்தனங்கள் தேவையற்றதாகும். ஆனால் வகுப்பிலுள்ள மாணவர்கள் பல்வேறு அனுபவப் பின்னணிகள், அடைவு மட்டங்கள் கொண்டு பலதரப்பட்டவர்களாகக் காணப்படுவர். எனவே, மாணவர்களிடம் சிறந்த அடைவு மட்டத்தை ஏற்படுத்துவதற்கும் பல்வேறு விதமான உத்திகளை பிரயோகிக்க வேண்டியுள்ளது. ஆசிரியர்களுக்கு இவை சவால்மிகுந்ததாக விளங்குகின்றது. கற்றல் கற்பித்தலில் இத்தகைய சவால்களை வெற்றி கொள்வதற்காக கற்பித்தல் மாதிரிகளின் பிரயோகம் ஆசிரியர்களுக்கு உதவுகின்றன என ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. மாணவர்களிடம் சிறந்த அடைவு மட்டத்தை ஏற்படுத்தக் கூடிய பல்வேறு பிரயோகங்களை (Applications) சிறந்த வேலைத்திட்டங்களை (Programmes) ஆராய்ந்த பல கல்வி சார் வல்லுனர்கள் கற்பித்தல் மாதிரிகள் இவற்றை சிறப்பாக அடையக் கூடிய விதத்தில் சிறந்த பெறுபேறுகளை கொண்டிருப்பதாக உறுதிப்படுத்தியுள்ளனர். எனவே இத்தகைய கற்பித்தல் மாதிரிகளின்பால் ஆசிரியர்கள், கல்வியாளர்களின் கவனம் இன்று வெகுவாக ஈர்க்கப்படுகின்றது.

சிறந்த கல்வியினைப் பெறும் நோக்கில் பாடசாலைக்கு வரும் மாணவர்கள் தமது நினைவுகளில் பல்வேறு விதமான அனுபவங்களையும் அவர்களின் வயதுக்கேற்ற நடத்தைக் கோலங்களையும் கொண்டவர்களாக வருகின்றனர். இதனால் ஆசிரியர்கள் மாணவர்களிடம் எத்தகைய கற்றல் மேற் கொள்ளப்பட வேண்டும்? புதிய கற்றலிற்கு மாணவர்கள் தமக்குள் எத்தகைய தயார்நிலையைக் கொண்டுள்ளார்கள்? என இனங் காண்பது இன்றியமையாததாகின்றது.

### 3.1 கற்பித்தல் மாதிரி

ஒரு குறிப்பிட்ட தயாரிப்பின் வகை அல்லது வடிவமே மாதிரி எனப்படுகின்றது. அல்லது ஒரு முறைமையொன்றின் எளிமையான விவரணம், அல்லது ஒரு செயற்பாடு பற்றிய பிரதியே மாதிரி எனப்படுகின்றது. கட்டுமானம் ஒன்றை அமைக்கும் போது நாம் அதிகம் மாதிரியுருக்களை அமைத்து அவற்றின் பல்வேறு பொருத்தப்பாடுகளை பரிசீலிக்கின்றோம். இந்த வகையில் பூரணமான மனிதனை உருவாக்குவதில் ஈடுபடுகின்ற ஆசிரியர்கள், கற்றல் கற்பித்தலை மேற்கொள்ள முன் மாணவர்களின் அடைவு மட்டங்கள், அனுபவ பின்னணிகள், வகுப்பறைச் சூழல்கள் போன்ற பலவற்றைக் கருத்திற் கொண்டு சிறந்த கற்றல்களை முன்னெடுத்துச் செல்வதற்காக கல்விக் கோட்பாடுகள் சிந்தனைகளின் அடிப்படைகளில் உருவாக்கும் முன்திட்டமிடல்களே கற்பித்தல் மாதிரிகளாகின்றன. ஜோன் மெக் நீல் என்பவர் "கற்பித்தல் மாதிரிகள் கற்பித்தல் உத்திகளுடன், கலைத்திட்ட அமைப்புகளுடன், கல்வி இலக்குகளுடன் ஆசிரியர்களை தொடர்புபட வைக்க உதவுகின்றன" எனக் கூறுவது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

### 3.2 கற்பித்தல் மாதிரிகள் எவ்வாறு உருவாகின்றன?

சிறந்த கல்வியினைப் பெறும் நோக்கில் பாடசாலைக்கு வரும் மாணவர்கள் தமது நினைவுகளில் பல்வேறு விதமான அனுபவங்களையும் அவர்களின் வயதுக்கேற்ற நடத்தைக் கோலங்களையும் கொண்டவர்களாக வருகின்றனர். இதனால் ஆசிரியர்கள் மாணவர்களிடம் எத்தகைய கற்றல் மேற் கொள்ளப்பட வேண்டும்? புதிய கற்றலிற்கு மாணவர்கள் தமக்குள் எத்தகைய தயார்நிலையைக் கொண்டுள்ளார்கள்? என இனங் காண்பது இன்றியமையாததாகின்றது. ஆயினும் மாணவர்களின் உள்மனதில் இறங்கி அவற்றை கண்டறிவதென்பது இயலாத விடயமாகின்றது. மாணவர்கள் வெளிப்படுத்தும் நடத்தைகளைப் பார்த்தும் அவர்களிடமிருந்து வெளிப்படும் உணர்வுகளைக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டும் பெற்றுக் கொள்ளும் தகவல்களின் மூலம் இவற்றை அனுமானிக்க வேண்டியவர்களாக ஆசிரியர்கள் காணப்படுகின்றனர். இப் பணியானது கற்றல் கற்பித்தல் செயன்முறையில் தொடர்ச்சியாக மேற் கொள்ளப்படல் வேண்டும். இதன் மூலம் மாணர்கள் பற்றிய மனப்படங்களை (Mind Mapping) ஆசிரியர்கள் தம்முள் உருவாக்கிக் கொள்கின்றனர்.

சிறந்த கற்பித்தலில் ஈடுபடுவதென்பது ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் மாணவர்களின் மனங்கள் (Minds) குறிப்பாக எவ்வாறு கருத்துக்களும் மனவெழுச்சிகளும் சூழலுடன் தொடர்புறுகின்றன. பரிமாற்றப்படுகின்றன என்பன பற்றி தொடர்ச்சியாக ஆராயத்துணிதலையும் உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது. இவை கற்றல் மாதிரிகளைப் பயன்படுத்துவதற்கான தேவைகளை ஆசிரியர்களிடம் ஏற்படுத்துகின்றது.

கற்றல் கற்பித்தல் செயன்முறைகளில் ஆசிரியர்கள் தமது மாணவர்களுடன் நேரடியாகத் தொடர்புறுவதனாலும் மாணவர்களுக்கு கல்வியூட்டுவதற்காக வேண்டி கற்றல் சூழலை (Learning Environment) உருவாக்குபவர்களாகவும் இருப்பதால் சகல ஆசிரியர்களும் தமது கற்பித்தல் நடவடிக்கைகளின் திறன்களை மென்மேலும் விருத்தி செய்ய வேண்டியவர்களாக உள்ளனர். இவ்வாறு விருத்தி செய்வதற்காக ஆசிரியர்கள் கற்பித்தல் செயன்முறைகளில் குறிப்பிட்ட சில பயிற்சிகளை (Practices) உருவாக்குகின்றனர். இப்பயிற்சிகள் முறையான கற்கைகளின் நோக்கத்தை தோற்றுவிக்கின்றன. இவை மேலும் ஆராயப்பட்டு மெருகூட்டப்படும்போது அவை கற்பித்தல் மாதிரிகளாகுகின்றன. கற்பித்தல் மாதிரிகள், ஆசிரியர்களின் வாண்மைத் திறன்களையும் மேலும் விருத்தி செய்து விடுகின்றன.

## 3.3 கற்பித்தல் மாதிரிகளை கற்றல் மாதிரிகள் எனக் கூறமுடியுமா?

கற்பித்தல் மாதிரிகள், அடிப்படையில் கற்றல் சூழலை மேம்படுத்துவதையே இலக்காகக் கொண்டிருப்பதால் உண்மையில் கற்பித்தல் மாதிரிகளை கற்றல் மாதிரிகள் எனவும் கருத்திற் கொள்ளலாம். கற்பித்தல் மாதிரிகள் மாணவர்களை தகவல்கள், கருத்துக்கள், பெறுமானங்கள் தாமாக கருத்துக்களை வெளியிடும் திறன்கள், சிந்திக்கும் வழிகளை அடைந்து கொள்வதற்கு உதவுகின்றது. மாணவர்களுக்கு எவ்வாறு கற்பது (How to learn) என்பதை கற்பிப்பதற்கு வழிவகுக்கின்றது. உண்மையில் எதிர்காலத்தில் மாணவர்கள் அதிக இலகுவாகவும், பயனுறுதியுடையதாகவும் கற்பதற்கும் கற்றல் இயலளவை அதிகரித்துக் கொள்வதற்கும் கற்றல் செயன்முறையில் அதிக அறிவு திறன்களை மேலும் வளர்த்துக் கொள்வதற்குமான முயற்சிகளே கற்பித்தலின் நீண்டகாலப் பெறுபேறுகளாக விளங்குகின்றன. இத்தகைய பெறுபேறுகளை படிப்படியாக அடைந்து கொள்வதில் கற்பித்தல் மாதிரிகள் சிறப்பான பயன்களைக் கொண்டுள்ளன. மேலும் எவ்வாறு கற்பித்தலை மேற்கொள்வது என ஆசிரியர்கள் அறிந்து கொள்ள விழைவதானது. பெருமளவு மாணவர்களின் கற்றல் திறமைகளை வளர்த்தெடுப்பதில் குறிப்பிடத்தக்க தாக்கங்களைக் கொண்டிருக்கும். வெற்றிகரமான கற்பித்தலில் ஈடுபடும் ஆசிரியர்கள் தம்மை ஒரு போதும் கற்பித்தலை வழங்கும் போது தம்மை வெறுமனே கவர்ச்சிமிக்கவர்களாகவோ, செல்வாக்குடையவர்களாகவோ மட்டும் கருதிக் கொள்வதில்லை. மேலும் கற்பித்தலின் மூலம், சிறந்த கற்போர்களை உருவாக்குவதிலேயே அவர்களின் கவனம் அதிகம் காணப்படும். கற்பித்தல் மாதிரிகளின் பிரயோகத்தின் போது மாணவர்கள் தமது கற்றல் உத்திகளின் தன்மைகளையும் அதிகமதிகம் மாற்றுவர். அத்துடன் அதிக வினைத்திறன்களுடன் அதிக கற்றல் வகைகளை பெறுபவர்களாகவும் மாணவர்கள் மாறிடுவர். எனவே, எவ்வாறு மாணவர்கள் அதிக பயனுறுதியுடன் கற்பதற்கு கற்பிப்பதை அதிகரிக்கலாம் அதிக சக்திமிக்கவகையில் கற்பிப்பதற்கு எவ்வாறு சகல மாணவர்களையும் கற்பிக்கலாம் என்பதற்கு கற்பித்தல் மாதிரிகள் சிறந்த வழிகளைக் கொண்டுள்ளன.

எவ்வாறு கற்பது என்பதை அறியக் கூடியதும் மாணவர்கள் தமக்கிடையில் தொடர்புபடக்கூடியதுமான பொருத்தமான சூழல்களை ஏற்படுத்துவதே கற்பித்தல் செயன்முறையின் மையமாக உள்ளது என ஜோன் டூயி கூறுகின்றார். இந்த வகையில் கற்பித்தல் மாதிரிகள் கற்றல் சூழலின் விவரணமாகவே நோக்கப்படுகின்றது. பாட அலகுகளினை திட்டமிடுவதில் இருந்து கற்பித்தலில் பயன்படுத்தப்படும் பல்வேறு சாதனைகளை வடிவமைப்பது வரையிலான பல உபயோகங்களை இந்த கற்றல் விவரணம் உள்ளடக்கியுள்ளதாகக் கூறப்படுகின்றது. எனவே கற்பித்தல் மாதிரிகள் கற்றல் மாதிரிகளாகவும் நோக்கப்பட முடியுமாகின்றது.

சிறந்த கற்பித்தலில் ஈடுபடுவதென்பது ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் மாணவர்களின் மனங்கள் (Minds) குறிப்பாக எவ்வாறு கருத்துக்களும் மனவெழுச்சிகளும் சூழலுடன் தொடர்புறுகின்றன. பரிமாற்றப்படுகின்றன என்பன பற்றி தொடர்ச்சியாக ஆராயத்துணிதலையும் உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது. இவை கற்றல் மாதிரிகளைப் பயன்படுத்துவதற்கான தேவைகளை ஆசிரியர்களிடம் ஏற்படுத்துகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3.4 கற்பித்தல் மாதிரிகளின் அனுகூலங்கள்

கற்றல் கற்பித்தல் செயன்முறையில் கற்பித்தல் மாதிரிகளைப் பயன்படுத்துவதன் காரணமாக ஆசிரியர்கள் பல்வேறு விதமான அனுகூலங்களைப் பெறுகின்றனர்.


- ❖ கற்பித்தல் மாதிரிகள், கற்றல் கற்பித்தலை ஏற்படுத்துகின்ற பல தத்துவ, உளவியல் சிந்தனைகளின் படி உருவாக்கப்பட்டுள்ளன. இதனால் ஆசிரியர்கள் பொருத்தமான தத்துவ, உளவியல் சிநதனைகளினை தமது கற்பித்தலில் பிரயோகிக்க முடியுமானவராகின்றார்.
- ❖ கற்பித்தல் மாதிரிகள் யாவும் கல்வியுலகின் தகுதி வாய்ந்த கோட்பாட்டு அடிப்படைகளைக் கொண்டுள்ளன.
- ❖ கற்பித்தல் மாதிரிகள் தொடர்ச்சியான அனுபங்களினூடாக புதுப்பிக்கப்படுகின்றன.
- ❖ வகுப்பறைகளில் இவற்றைப் பயன்படுத்துவதில் பொருத்தமுடையது. இசைவானது.
- ❖ கற்பித்தல் மாதிரிகள் வகுப்பறைகளில் வினைத்திறன் மிகுந்ததாகக் காணப்படுகின்றன.
- ❖ ஏனைய கல்வியமைப்புகளில் இசைவானது, வினைத்திறன் மிகுந்ததாக உள்ளன.
- ❖ இவை எக்காலத்திற்கும் எப்பாடத்திற்கும் பொருத்தமுடையதாகவும் நெகிழ்ச்சி யுடையதாகவும் உள்ளன.

## 4.0 கற்பித்தல் மாதிரிகளின் வகைகள்

கற்பித்தல் மாதிரிகள் பற்றி நீண்டகாலம் ஆராய்ந்தவர்களுள் புரூஸ் ஜொய்ஸ் மற்றும் மர்ஷா வீல் என்போர் முக்கியம் பெறுகின்றனர். இவர்கள் கற்பித்தல் மாதிரிகள் தொடர்பாக எழுதியுள்ள Models of teaching என்ற நூல் கல்வியலாளர்கள், ஆசிரியர்கள் மத்தியில் பெரு வரவேற்பை பெற்றுள்ளது. புரூஸ் ஜொய்ஸ் மற்றும் மர்ஷா வீல் என்போர் கற்பித்தல் மாதிகளை பிரதான நான்கு வகைகளுக்குள் உள்ளடக்குகின்றனர். அவையாவன,

1. சமூக வகை மாதிரிகள் (Social Family models)
2. தகவல் - ஒழுங்குபடுத்துகை வகை மாதிரிகள் (Information - Processing models)
3. தனியாள் (தனிப்பட்ட) வகை மாதிரிகள் (Persoal Family models)
4. நடத்தை முறைமைகள் வகை மாதிரிகள் (Behavioural systems Family models)

இவ் ஒவ்வொரு பிரதான வகை மாதிரிகள் குறிப்பிட்ட சில உபமாதிரிகளை உள்ளடக்கியதாக உள்ளது. கற்றல் கற்பித்தலில் பிரயோகிக்கப்படும் கற்றல் மாதிரிகள் கொண்டுள்ள பொதுவான சில பண்புகளை அடிப்படையிலேயே கற்றல் மாதிரிகள் யாவும் 4 பிரதான வகைகளுக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளன.




## 4.1 சமூக மாதிரித் தொகுதிகள்

சமூக வகை மாதிரிகள் பொதுவாக கற்றல் சமூகங்களை கட்டியெழுப்புவதில் தனித்தன்மை வாய்ந்தவையாக இனங்காணப்பட்டுள்ளன. பொதுவாக, இவ்வகையில் உள்ளடங்கும் மாதிரிகள் ஒத்துழைத்துக் கற்றல், கூடிக்கற்றல், குழுக்கற்றல் சிந்தனைகளை அடிப்படையாகக் கொண்டுள்ளன. கற்றல் கற்பித்தலில் கற்றல் சமூகமொன்றை மாணவர் மத்தியில் கட்டியெழுப்புவது என்பது சற்று கடினமான காரியமாகவே உள்ளது. இதன்போது ஆசிரியர்கள் சமூக வகைத் தொகுதி மாதிரிகளை பயன்படுத்துவதனால் இது இலகுவாகின்றது. இம்மாதிரிகள் கற்றல் குறிக்கோள்களை, சமூக விழுமியங்கள், பொதுக் கொள்கை, முரண்பாடு தீர்வு என்பவற்றை அடைவதில் மிகுந்த செல்வாக்குடையதாக உள்ளன. சமூகத் தொகுதி மாதிரிகள் உள்ளடக்கும் மாதிரிகளும் அவற்றை விருத்தி செய்தவர்களும் மீள் விருத்தி செய்தவர்களையும் (அட்டவணையில் அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளோர்) அட்டவணை 1 இல் காணலாம்.

## 4.2 தகவல் ஒழுங்குபடுத்துகை மாதிரிகள்

தரவுகளைப் பெறல், அவற்றை ஒழுங்கமைத்தல், வினாக்களை உருவாக்கி அவற்றுக்கு விடைகளை உருவாக்குதல், எண்ணக்கருக்களை உருவாக்கி அவற்றை கடத்துவதற்கான ஊடகங்களை ஏற்படுத்தும் வகையில் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு தகவல் ஒழுங்கு-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்துகை மாதிரித் தொகுதி ஆசிரியர்களுக்கு வழிகாட்டுகின்றன. இத்தொகுதிக்குள் உள்ளடங்கும் வெவ்வேறு மாதிரிகள் பின்வரும் அனுகூலங்களைக் கொண்டுள்ளன.

- தகவல்கள், எண்ணக்கருக்கள் கற்போரை இலகுவாக சென்றடைய உதவுகின்றன.
- கருதுகோள் பரிசோதனைக்கும் எண்ணக்கரு உருவாக்கத்தை மேற்கொள்ளவும் உதவுகின்றன.
- மாணவர்களை ஆக்கபூர்வமான சிந்தனைக்கு இட்டுச் செல்கின்றன.
- மாணவர்களின் அறிவாற்றலை மேலும் விருத்தியடையச் செய்கின்றன.
- மாணவர்களை தனியாகவும் குழுக்களாகவும் கற்பதற்கு உதவுகின்றன.
- கல்வியின் தனிப்பட்ட, சமூக இலக்குகளை இலகுவாக எய்திடச் செய்கின்றன.

அட்டவணை 1 : சமூக மாதிரித் தொகுதி

| | மாதிரிகள் | விருத்தி செய்தவர்கள் (மீள் விருத்தி செய்தோர்) |
|---|---|---|
| 1. | கற்றலில் பங்குதாரர் மாதிரி: (Partners in Learning) | |
| (அ) | உடன்பாடான பரஸ்பர சார்புள்ள மாதிரி(Positive interdependence) | டேவிட் ஜோன்சன்<br>ரோசர் ஜோன்சன்<br>மார்கரிடா கல்டரோன்<br>எலிசபெத் கொஹென் |
| (ஆ) | கட்டமைப்பு விசாரணை (Structured Inquiry) | றொபட் ஸ்லேவின்<br>(அரொன்சன்) |
| 2. | குழுப் பரிசோதனை (Group Investigation) | ஜோன் ரூயி<br>ஹெபேட் திலென்<br>(சுலோமோ சாரன்)<br>(புரூஸ்ஜொய்ஸ்) |
| 3. | வகிபாகமேற்றல் (Role Playing) | பன்னி சாப்டெல் |
| 4. | சட்ட ரீதியான விசாரணை (Jurisprudential Inquiry) | டொனால்ட் ஒலிவர்<br>ஜேம்ஸ் சேவர் |

இவ்வகை மாதிரித் தொகுதிக்குள் ஏழு கற்பித்தல் மாதிரிகள் உள்ளடங்குகின்றன. இவை அட்டவணை 2 இல் தரப்பட்டுள்ளன.

## 4.3 தனிப்பட்ட மாதிரித் தொகுதி

இம்மாதிரித் தொகுதிக்குள் உள்ளடக்கப்படும் மாதிரிகள் தனியாள் புலக்காட்சிகளிலிருந்து கற்பித்தல் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு உதவுகின்றன. தனியாள் அனுபவங்களில் இருந்தும் சுயநிலைப்பாடுகளில் இருந்தும் பெற்றுக் கொள்ளப்படும் புலக்காட்சிகளே ஒருவரது ஆளுமையையும் உலகினைக் காணும் தன்மையினையும் தீர்மானிக்கின்றது. இதனைக் கருத்திற் கொண்ட வகையில் தனிப்பட்ட மாதிரிகள் மாணவர்களிடையே கற்றலை ஏற்படுத்துவதற்கு வழிகோலுகின்றது. இதில் இருவகையான மாதிரிகள் உள்ளடங்குகின்றன.

## 4.4 நடத்தை சார் மாதிரி தொகுதிகள்

இவ்வகைக்குள் அடங்கும் மாதிரிகள் சமூகக் கற்றல் கோட்பாடு, நடத்தை சீர்ப்படுத்தல் போன்ற கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டவையாகும். மனிதர்கள் தமது நடவடிக்கைகளின் ஊடாக தமக்குள் சுய திருத்தங்களை மேற்கொள்ளும் ஆற்றல் உடையவர்கள். பணி ஒன்றினை மேற்கொள்ளும் போது ஏற்படும் அனுபவங்கள் தொடர்பாடல்கள் ஊடாக தமது நடத்தைகளை சரி செய்யக்கூடிய நிலையிலையே மனிதர்கள் காணப்படுகின்றனர். அறிவுரீதியாக எவ்வாறு மக்கள் பல்வேறு நடவடிக்கைகளுக்கும் பின்னூட்டல்களுக்கும் துலங்குகின்றனர் என்பதை அடிப்படையாகக் கொண்டு உளவியலாளர்கள் மனிதனின் சுய திருத்த தொழிற்பாட்டினை இலகுவாக்குவதற்காக எவ்வாறு நடவடிக்கைகளையும் பின்னூட்டல்களையும் ஒழுங்குபடுத்துவது என்பது தொடர்பாக ஆழமாக ஆராய்ந்துள்ளனர். இதன் பயனாக கிடைக்கப்பெற்ற பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டு கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளில்

- பீதிகளைக் குறைத்தல்
- வாசிக்கவும் கணக்கிடவும் கற்கச் செய்தல்
- சமூக, மெய்வல்லுனர் திறன்களை விருத்தி செய்தல்
- பதகளிப்பினை குறைத்து நிதானத்தன்மையினை மேம்படுத்துதல்
- சிக்கல் வாய்ந்த அறிவு சார்ந்த விடயங்களைக் கற்றல்

போன்றவற்றுக்கான நிகழ்ச்சித் திட்டங்களை உருவாக்க உதவுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| அட்டவணை 2 : தகவல் — ஒழுங்குபடுத்துகை மாதிரித் தொகுதி | | |
|---|---|---|
| | மாதிரிகள் | உருவாக்கியோர் (மீள் உருவாக்கியோர்) |
| 1. | உய்த்தறி சிந்தனை மாதிரி Inductive Thinking (வகைப்படுத்தல் சார்பானது) | ஹில்டா தாபா (புரூஸ் ஜொய்ஸ்) |
| 2. | எண்ணக்கரு அடைதல் மாதிரி (Concept attainment) | ஜெரோம் புரூனர் (பிரெட் லைட்தால்) (டென்னிசன்) (கொக்சியெரல்லா) (புரூஸ்ஜொய்ஸ்) |
| 3. | நினைவுக்குறிப்பு மாதிரி (ஞாபக உதவி) (Mnemonics) | மைக்கல் பிரஸ்லீ ஜொய்ஸ் லிவின் ரிச்சட் அன்டர்சன் |
| 4. | முன்னேற்றகரமான ஒழுங்குபடுத்துதல் மாதிரி (Advance organizers) | டேவிட் ஒஸ்பெல் (லவீடன் மற்றும் வன்ஸ்கா) |
| 5. | விஞ்ஞான ரீதியான விசாரனை மாதிரி (Scientific Inquiry) | ஜோசப் ஸ்வாப் |
| 6. | விசாரணைப் பயிற்சி மாதிரி (Inquiry training) | ரிச்சட் சஜ்மன் (ஹொவார்ட் ஜோன்ஸ்) |
| 7. | கூட்டு வலிமை Synectics | பில் கோர்டன் |

எனவே கற்றல் கற்பித்தல் செயன்முறையினை வெற்றிகரமாகவும் வினைத்திறன் மிகுந்ததாகவும் முன்னெடுத்துச் செல்வதற்கு கற்றல் கற்பித்தல் மாதிரிகள் பல வகைகளில் ஆசிரியர்களுக்கும் கலைத்திட்ட வடிவமைப்பாளர்களுக்கும் உதவுகின்றன. ஆசிரியர்கள் தமது வாண்மைவிருத்தியினை மேலும் உறுதிப்படுத்திக் கொள்வதற்கு இவற்றை அறிந்து பிரயோகிக்க முற்படுவது இன்றியமையாததாகும். இக்கட்டுரையில் குறிப்பிட்ட ஒவ்வொரு கற்பித்தல் மாதிரிகளின் தன்மை, அவற்றின் பிரயோகம் என்பவற்றை பிரிதொரு கட்டுரையில் ஆராய்வோம்.

### உசாத்துணைகள்


1. Bruce Joyce and Marsha Weil, (2000), *Models of Teaching*, Sixth edition, Allyn and Bacon, Boston.

2. Dewey.J (1916). *Demorgracy and education*, New York: Macmillan

3. McNeil D.J. (1996). *Curriculum- A Comprehensive Indroduction,* Haper collings


இம்மாதிரிகள் அவதானிக்கக் கூடிய நடத்தைகளில் அதிக அக்கறை கொள்வதுடன் மாணவர்களிடம் தொடர்பாடல் செயன்முறைக்கான பணிகளையும் முறைகளையும் தெளிவாக வரையறை செய்கின்றன. இத்தொகுதிக்கற்றல் மாதிரிகள் உறுதியான ஆய்வுகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளதனால் சகல வயது மட்டத்திலுமுள்ள மாணவர்களில் பிரயோகிக்கக் கூடியதாக உள்ளன. இம்மாதிரித் தொகுதி அட்டவணை 4 இல் காட்டப்பட்டுள்ளவாறு பல மாதிரிகளை உள்ளடக்கியுள்ளது.

| அட்டவணை 3 : தனிப்பட்ட மாதிரித் தொகுதி | |
|---|---|
| மாதிரிகள் | விருத்தியாளர்கள் (மீள்விருத்தியாளர்) |
| 1. நேரிடையில் கற்றல் மாதிரி (Nondirective teaching) | கார்ல் றொஜர்ஸ் |
| 2. சுயமரியாதையை மேம்படுத்தும் மாதிரி (Enchaining self-esteem) | ஏப்ரகாம் மாஸ்லோ (புரூஸ்ஜொய்ஸ்) |

| அட்டவணை 4 : நடத்தை சார் மாதிரி தொகுதிகள் | |
|---|---|
| மாதிரிகள் | உருவாக்கியோர் (மீள் உருவாக்கியோர்) |
| 1. பாண்டித்திய கற்றல் மாதிரி (Mastery learning) | பென்ஜமீன் புளும் ஜேம்ஸ் புளொக் |
| 2. நேரிடையான போதனை மாதிரி (Direct instruction) | டொம் குட் ஜெரி புரோபி கார்ல் கிரீடர் சிக்கி என்லர்மன் வெஸ் பெக்கர் |
| 3. போலச் செய்தல் மாதிரி (Simulation) | கார்ல் சிமித் மேரி சிமித் |
| 4. சமூகக் கற்றல் மாதிரி (Social learning) | அல்பேர்ட் பந்துரா கார்ல் தொரிசன் வெஸ் பெக்கர் |
| 5. திட்டமிட்ட நிகழ்ச்சி மாதிரி (Programmed schedule) | பீ.எப். ஸ்கின்னர் |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியத் தொழில் ஒரு முழுமையற்ற வாண்மை உடையதா? ஒரு விமர்சன நோக்கு

வாண்மை என்பது தொழில் என்ற எண்ணக்கருவில் நின்றும் வேறுபட்டது. தனிச்சிறப்பு வாய்ந்த நுண்மதிச் சேவையை வழங்குதல் வாண்மைக்குரிய தனித்துவம் ஆகும். சமூகமக்களின் மகிழ்ச்சியான வாழ்விற்கு அடிப்படையாக அமையும் சேவை ஒன்றினை தொழில்களை வாண்மை தொழில் எனக்குறிப்பிடலாம்.


கேந்திரேஸ்வரி இராதாகிருஷ்ணன்.

ஆசிரியர். தி/ ஸ்ரீ சண்முகா இந்துமகளிர் கல்லூரி


மனித குலத்துக்கே உரிய மகத்தான தொழில், கண்ணியமான தொழில், அப்பழுக்கற்ற புனிதமான சேவை என பலவாறாக ஆசிரியத் தொழில் மதியுரை செய்யப்படுவது ஆசிரியப் பணியாளர்களின் செவிகளில் ஒலித்துக் கொண்டே இருக்கின்றது.

சொற்களிலும் பார்க்க செயல்களே உரத்த குரலில் ஒலிக்கும் என்ற வளமொழிக்கு இணங்க வாண்மை மிக்க ஆசிரியப் பெருந்தகைகளையே இன்றைய உலகம் நாடி நிற்கின்றது. ஆசிரியர்கள் ஒரு சமூகத் தொழிற்பாடுகளின் வேகம், தன்மை, போக்கு என்பவற்றை நிர்ணயிப்பவர்கள். ஒவ்வொரு தனிமனித இயல்புக்கும் ஏற்ப முன்னேற்றங்களை உருவாக்க வழிகாட்டுபவர் உதவுபவர் வரலாற்றுக் காலங்களில் ஏற்பட்ட சமூக மாற்றத்துக்கும் வேகத்துக்கும் ஈடு கொடுக்கக்கூடிய வகையில் கல்விச் சேவையை அர்ப்பணிப்புடன் வழங்கிவருபவர்கள்.

சிலர் ஆசிரியத்தொழில் வைத்தியம் பொறியியல், சட்டம், முகாமை போன்று ஒரு முழு நிறைவானது அல்ல எனவும் இத் தொழில் அரைகுறையான (முழுமையற்ற) வாண்மைத் தொழில் எனவும் விளக்குகின்றனர்.இதனை ஆசிரிய பணியாளர்களின் செயலமைப்பு அணுகுமுறை முகாமைத்துவ நோக்கில் அல்லது அதன் பின்புலத்தில் நின்று விமர்சன ரீதியில் நியாயங்களை முன்வைப்பதே இவ் ஆய்வுரையின் பரிசீலனையாக உள்ளது.

## வாண்மையும், தொழிற்பண்பும்

வாண்மை என்பது தொழில் என்ற எண்ணக்கருவில் நின்றும் வேறுபட்டது. தனிச்சிறப்பு வாய்ந்த நுண்மதிச் சேவையை வழங்குதல் வாண்மைக்குரிய தனித்துவம் ஆகும். சமூகமக்களின் மகிழ்ச்சியான வாழ்விற்கு அடிப்படையாக அமையும் சேவை ஒன்றினை தொழில்களை வாண்மை தொழில் எனக்குறிப்பிடலாம். வாடிக்கையாளர்களை விடவும் உயர்ந்த அறிவு கொண்டவர்களாக விளங்குவோர் வாண்மையினர் என்று 1963 இல் விளக்கியதாக ஆசிரியரும் வாண்மைத் தகைமையும் என்ற கல்வியாளன் ஆய்வுரையில் குறிப்பிடப்பட்டமையும் இங்கு மனங்கொள்ளத்தக்கது. இதற்கு சிறந்த உதாரண புருஷர்களாக மதப்போதகர்களை குறிப்பிடலாம். சாதாரணமான தொழில்கள் போல் அன்றி குறித்த துறைபற்றி மேலான அறிவும் திறன்களும் கொண்டிருப்பதன் காரணமாக மிக அந்தஸ்து உடைய தொழில்களை வாண்மைத் தொழில் என அர்த்தம் கொள்ளப்படுகின்றது. வாண்மையை மேற்கொள்வோரின் நிரம்பலை உடனடியாக அதிகரிக்க முடியாது இருப்பதும் வாண்மையின் தனிச்சிறப்பு என ஆசிரியரினால் குறிப்பிடப்பட்டிருப்பதும் இங்கு நோக்கற்பாலது

பல சமூக உளவியல் அறிஞர்கள் வாண்மைப் பண்புபற்றி சிறப்பித்துக் கூறும் அம்சங்கள் பின் வருமாறு.

- ❖ சிறப்பான மதிநுட்பம் மிக்க கல்வியையும், பயிற்சியையும் அடிப்படையாககக் கொண்ட தொழில்
- ❖ திறன் மிக்க சேவையை அல்லது மதியுரையை பொதுமக்களுக்கு வழங்கும் தொழில்
- ❖ தீர்க்கமான கட்டணம் அல்லது சம்பளம் நேரடியாக பெற உரித்துடைய தொழில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ❖ கோட்பாட்டு கட்டமைப்பு பற்றிய அறிவின் அடிப்படையில் அன்றாட வாழ்வில் மேற்கொள்ளப்படும் தொழில்.
- ❖ நடைமுறைமுறையில் அறிவைப் பிரயோகிக்கும் தன்மையுடையது.

கல்வியறிவியல் அசுர வேகத்தில் மாற்றமடைந்துவரும் துறையாகும். இத்துறையின் பிரதான பங்காளிகள் ஆசிரியர்களும் மாணவர்களுமே. இதனால் எமது நாட்டின் கல்வி அனுபவங்களுக்கான வரலாற்றில் ஆசிரிய வாண்மை பற்றிய முன்னாய்வுகள் விரிந்து பரந்து செல்கின்றன.

## எமது நாடும் ஆசிரியமும்

வளர்முக நாடுகளுள் ஒன்றான இலங்கையில் எழுத்தறிவு வீதம்90% மாக அமைந்துள்ளது. அரச துறையின் சகலருக்கும் இலவசக்கல்வி என்ற கொள்கையானது இவ்வுயர் மட்டத்திற்கு எமது கல்வித்தளத்தை தரத்தை உயர்த்தியுள்ளது எனக் கூறல் மிகையாகாது. கல்வியறிவியல் அசுர வேகத்தில் மாற்றமடைந்துவரும் துறையாகும். இத்துறையின் பிரதான பங்காளிகள் ஆசிரியர்களும் மாணவர்களுமே. இதனால் எமது நாட்டின் கல்வி அனுபவங்களுக்கான வரலாற்றில் ஆசிரிய வாண்மை பற்றிய முன்னாய்வுகள் விரிந்து பரந்து செல்கின்றன.

இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் முறைசார்ந்த கல்வி நிறுவன அமைப்பினுள் 10,000க்கு மேற்பட்ட பாடசாலைகள் தீவளாவிய ரீதியில் AB, 1C வகை 2, வகை 3 மூன்று பாடசாலை மீள தரப்படுத்தலின் கீழ் இப்பாடசாலைகள் கனிஷ்ட பாடசாலைகள், சிரேஷ்ட பாடசாலைகள் என பூகோள ரீதியில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. ஏறத்தாழ 43 லட்சம் மாணவர்கள் இப்பாடசாலைகளில் கல்விபயின்று வருகின்றனர். 1,90,000க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் இலங்கையில் முறைசார் அமைப்பினுள் கடமையாற்றுகின்றனர்.

இவர்கள் பல்வேறு தரங்களில் உள்வாங்கப்பட்டுள்ளனர்.பட்டதாரிகள், பட்டப்பின் பட்டதாரிகள், பயிலுநர்கள் பயிற்றப்பட்ட, பயிற்றப்படாத ஆசிரியர்கள் என கற்பித்தலி ஈடுபடுகின்றனர். இவர்கள் அனைவரும், சமமான வகுப்பறைகளில் கருமம் ஆற்றுகின்றனர்.

இலங்கையில் 1994ஆம் ஆண்டில் இலங்கை ஆசிரியர் சேவை உருவாக்கப்பட்டது.இதன் பின்னரே ஆசிரியர் தொழில் வாண்மைத் தொழில் என்ற படிமுறையான நிலைமையனை பெற்றுவருகின்றது. இத்தொழிலில் புதிதாக சேர்பவர்களும் வாண்மையை கூர்ப்படையக் கூடிய வகையில் உயர்வான வளர்ச்சிகளில் இணைய வழிகாட்டப்படல் வேண்டும்.

இலங்கையில் உள்ள பாடசாலை அமைப்பானது ஆசிரியர்களுக்கு போதியளவு வாண்மை சார் தெரிவுகளை அமைக்கவில்லை. புதிய கல்விச் சீர்திருத்தத்தில் முன் மொழியப்பட்ட பாடசாலை மட்ட முகாமைத்துவம் School based management நடைமுறைக்கு வரும்போது ஆசிரியர்களுக்குரிய வாண்மை பற்றி பாடசாலைகளிலேயே வழங்கப்படலாம். என எதிர்பார்க்கப்படுகின்றது.

தற்போது எமது நாட்டிலுள்ள பாடசாலைகளில் ஆசிரியர்களுக்கு வாண்மை சார் பதவி நிலை வழங்கப்பட்டுவருகின்றது. அதாவது பகுதித் தலைவர் பாட இணைப்பாளர் தர இணைப்பாளர், சீர்மியர், செயலாற்றுகை தரங்கணிப்பிடுநர், சேவைக்கால ஆலோசகர் ஆசிரிய நூலகர் விளையாட்டுப் பொறுப்பாளர் என்பனவாகும்.

இதனால் எமது நாட்டின் அரச பொதுத்துறை வழங்கும் சேவைகளில் 16% மான தொழில் வாய்ப்பு ஆசிரியர்களுக்கு வழங்கப்படுவது எமது நாட்டின் தொழிற் சந்தையில் ஆசிரியர்களுக்குள்ள கேள்வியையும், வினையாற்றலையும் எடுத்துக் காட்டுகின்றது. துரித செயலளிக் குழுவினரால் முன்வைக்கப்பட்ட ஒட்டு மொத்தமான மனித வள அபிவிருத்தி என்ற முழுமையான அபிவிருத்திக்கு அடிக்கட்டுமான தளம் ஆசிரியர்களே என்பது வெளிப்படையாகவுள்ளது.

எமது நாட்டில் ஆசிரியத் தொழில் அரசாங்கத் துறையை சேர்ந்ததாக இருப்பதனால் (Job security) வேலைப்பாதுகாப்பு, (Pension) ஓய்வூதியம் போன்றன பலரை ஆசிரியத் தொழிலை வாழ்நாள் முழுவதற்குமான தொழிலாக தேர்ந்தெடுப்பதற்குரிய உணர்வையும், எதிர்பார்ப்பையும் தொழில் தொடர்பான முன்னரே உணர்ந்த பெறுபேறுகளையும் வழங்குகின்றது. அதாவது வேலைத் தெரிவுத் தீர்மானத்தில் பங்கு கொள்கின்றது.

இலங்கையில் உள்ள ஆசிரிய ஆளணியினருள் 55% பெண்கள் ஆரம்பத்தரத்தில் கற்பிக்கும் ஆசிரியர்களிலும் பெண்கள் வீதமே உயர்வாகவுள்ளது. கனிஷ்ட, சிரேஷ்ட பள்ளிகளிலும் ஆண் ஆசிரியர்களது வீதம் பெண்களைவிட உயர்வாகவுள்ளது.

இலங்கையில் ஆசிரியத் தொழில் முன்னெடுப்பவர்கள் சுயாதிக்கநிலை (Autonomy) உடையவர்களாகவும் வேலையில் உறுதிப்பாடும், தெளிவான இலக்குகளும் சமூக ஒத்துழைப்பும், நன்மதிப்பும் பெறுபவர்களாகவும் எதிர்பார்க்கப்படுகின்றனர். நடைமுறையில் பொதுமைப்பட்ட அம்சங்களாக இவை இருப்பினும் எமது நாட்டின் மனிதவள விருத்தியை முன்னெடுக்க ஒவ்வொரு ஆசிரியரும் சுயவுணர்வுடனும் கண்ணியத்துடனும் கட்டுப்பாட்டுடனும் கற்பித்தல் தொழிலை வாண்மை சார்ந்ததாக முன் எடுக்க வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21ஆம் நூற்றாண்டுக்கான கல்வி பற்றிய சர்வதேச ஆணைக்குழுவினால் UNESCO விடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கற்றல் உங்களுடைய வளம் என்ற அறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு அசிரிய கல்வியின் பால் மீள்கவனம் செலுத்தும்படி குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் கருத்து யாதெனில் கற்பித்தத் செயற்பாட்டிற்கு புதுத்திருப்பத்தை ஏற்படுத்துவதற்கும் எதிகால ஆசிரியர்களிடையே கூடுதலான மானிட அறிவு சார் பண்புகளை ஏற்படுத்தி புதிய ஆசிரியர் என்றவாறான நிலையை உருவாக்க வேண்டும் என்பதாகும்.

எனவே எமது நாட்டின் கண்ணியமான தொழில் புரியும் ஆசிரியர்கள் தமது வாண்மை தகைமையை முன்னெடுக்கக் கூடிய அரிய பல வாய்ப்புக்களை ஆசிரிய கல்வி நிகழ்ச்சி திட்டங்கள் முன்மொழிந்துள்ளன. கல்வித்துறை மாற்றங்களில் மிக முக்கியமான இடத்தில் நின்று செயற்படுவதனால் வாண்மையிலும், வகிபங்கிலும் மாற்றங்கள் நிகழ்ந்த வண்ணமே இருக்கும் என்பது உறுதி.

## ஆசிரியரின் பாங்கு :

### (அரச சமூக பொருளாதாரம்)

இலங்கை வரலாற்றில் கல்வி அமைப்பின் ஒழுங்கு முறைக்கூடாக மேம்பட்ட நிலையை அடைவோர் ஆசிரியர்களே. ஆனால் ஐரோப்பியர் ஆட்சிக் காலத்தில் இந்த நிலமை நிலைகுலையத் தொடங்கியது. ஆங்கில மொழியை சிறிதளவு அறிந்திருந்தோரும் ஆசிரியராக வரக்கூடிய வாய்ப்பு ஆங்கிலேயர் காலத்தில் காணப்பட்டது. 1869ல் பொதுப் போதனைத் திணைக்களம் உருவாகியமையைத் தொடர்ந்து. பாடசாலை எண்ணிக்கை உயர்வடையத்தொடங்கியது. ஆசிரியர்களது எண்ணிக்கை உடனடியாக அதிகரிக்க முடியாமையால் மாணவர் தலைவர்கள் ஆசிரியர்களாக பதவி பெற்றனர். இதுவே சட்டாம்பிள்ளை முறை என கூறப்பட்டது. இது தரமான கல்வியை சமூகத்துக்கு வழங்கவில்லை.

கல்வி முயற்சிகளில் தீவிரமாக ஈடுபட்ட சமய நிறுவனங்கள் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளை 1880ல் ஆரம்பித்தன. 1931இல் டொனமூர் யாப்புத் திட்டமானது சிங்கள, தமிழ் ஆசிரியக் கல்லூரிகளை திறந்தன. 1927இல் இணைப்பாற்றுச் சம்பளத்திட்டம் உருவாகியமை ஆசிரியப் பணியாளர்களின் தொழில் விருப்பிற்கும், தெரிவுக்கும் அடிப்படையாக அமைந்தது.

> **இலங்கையில் 1994ஆம் ஆண்டில் இலங்கை ஆசிரியர் சேவை உருவாக்கப்பட்டது. இதன் பின்னரே ஆசிரியர் தொழில் வாண்மைத் தொழில் என்ற படிமுறையான நிலைமையனை பெற்றுவருகின்றது. இத்தொழிலில் புதிதாக சேர்பவர்களும் வாண்மையை கூர்ப்படையக் கூடிய வகையில் உயர்வான வளர்ச்சிகளில் இணைய வழிகாட்டப்படல் வேண்டும்.**

1943இல் கல்வி பற்றிய சமூகக் குழுவினர் வெளியிட்ட அறிக்கையில் ஆசிரியர் பயிற்சியில் அதிக ஊக்கம் காட்டியமை ஆசிரியர் கல்வியை மேம்படுத்தல் வாயிலாக நாட்டின் கல்வித்தரத்தை உயர்த்தலாம் என்பதால் பெரும் நம்பிக்கையை ஊட்டியது.

ஆசிரியர் கல்லூரிகளின் கலைத்திட்ட விருத்தியிலும் கவனம் செலுத்தப்படலாயிற்று. இலங்கைப் பல்கலைக்கழகம் பேராசிரியர் கிறீன் தலைமையில் கல்வித்துறையை ஆரம்பித்து பட்டதாரி ஆசிரியர்களுக்கு பட்டப்பின் கல்வித்தகைமையை கற்கை நெறிகளை வழங்கியது. கொழும்பு தொழில்நுட்பக் கல்லூரி, மகரகம ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிக் கல்லூரி, பேராதனை, குண்டசாலை ஆகியவற்றிலும் சிரேஷ்ட நிலைகளில் கற்பிப்பதற்கான சிறப்பு பயிற்சிகள் வழங்கின. விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம் முதலிய மையப்பாடங்களில் சிறப்புப் பயிற்சி வழங்கும் பொருட்டு மகரகமையிலும், பலாலியிலும் ஆசிரிய கல்லூரிகள் விருத்தி செய்யப்பட்டன.

1958இல் இருந்து முழுச்சம்பளத்துடன் பயிற்சி பெறும் வசதிகள் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டன. 1960ல் நன்கொடை பெறும் ஆசிரியக்கல்லூரிகள் பலவற்றை அரசு கையேற்றதை தொடர்ந்து தமிழ் ஆசிரிய மாணவர்களுக்குரிய பயிற்சிகள் வறிதாகின. இதன் பின்பு 1971 இல் கலைத்திட்ட மாற்றங்களும், புதுன்மகளும் புகுத்தப்பட்ட வேளையில் அவற்றுக்கு தமது அறிவை ஈடு கொடுக்கும் வகையில் ஆசிரியர்களுக்கான பணியிடைப்பயிற்சி ஆசிரிய சேவைக்கு முந்திய பயிற்சி என்பன விருத்தி பெறத் தொடங்கின.

திறந்த பல்கலைக்கழகம், கல்விக்கல்லூரிகள், தேசிய கல்வி நிறுவகம், தேசிய ஆசிரிய கல்வி அதிகார சபையின் தொடருறு கல்வி நிகழ்ச்சி திட்டங்கள் ஆசிரிய வாண்மை பயிற்சியை நீண்டதூர நோக்குடன் ஆரம்பித்து நடைமுறைப்படுத்தி வருகின்றன. இதனால் ஒவ்வொரு சமூகத்திலும் ஆசிரியர்களுக்கென உரிய சிறப்பான நெறிமுறைகளையும் ஒழுங்கு கட்டுப்பாடுகளையும் மனோபாவங்களையும், விழுமியங்களையும், வேலைக்கலாசாரத்தையும் (Work culture) கட்டியெழுப்ப வேண்டிய தேவை உருவாகியது. ஆசிரியர் ஒருவர் நமது சமூகப்பாத்திரத்தை எவ்வாறு நிறைவேற்றுகின்றார் என்பதிலிருந்து அவரது ஆளுமையில் சமூக அந்தஸ்தும், வாண்மையும் இனங்காணப்பட்டது.

இந்த வகையில் ஆசிரியரின் சமூக பொருளாதார பாங்கு ஆசிரி-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யப்பண்பு நலன்களாக அமைந்தன. கற்பித்தல் என்பது மாணவனை மையமாகக் கொண்ட செயற்பாடாக இருப்பதனால் சுய வெளிப்பாடுகளுக்கும் வாய்ப்புத்தருவதாக இருப்பதனால் ஆசிரியர்கள் நேர்முகமான பாத்திரத்திரங்களை ஏற்பது தவிர்க்கமுடியாததாயிற்று.

ஆசிரியர் கல்லூரிகளின் கலைத்திட்ட விருத்தியிலும் கவனம் செலுத்தப்படலாயிற்று. இலங்கைப் பல்கலைக் கழகம் பேராசிரியர் கிறீன் தலைமையில் கல்வித்துறையை ஆரம்பித்து பட்டதாரி ஆசிரியர்களுக்கு பட்டப்பின் கல்வித்தகைமையை கற்கை நெறிகளை வழங்கியது. கொழும்பு தொழில்நுட்பக் கல்லூரி, மகரகம ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிக் கல்லூரி, பேராதனை, குண்டசாலை ஆகிய வற்றிலும் சிரேஷ்ட நிலைகளில் கற்பிப்பதற்கான சிறப்பு பயிற்சிகள் வழங்கின.

ஆசிரியர்கள் ஏற்கும் பாத்திரப்பாங்கு கால அளவிலும், பண்பளவிலும் வேறுபட்டுக்கொண்டே இருக்கும். கற்றலை நெறிப்படுத்துபவர், மதிப்பிடுபவர், ஒழுக்க நெறிப்படுத்துநர், அறங்காவலர், தலைமை தாங்குபவர், பண்பாட்டாளர், முகாமையாளர், முகவர், கலைஞர், கழக உறுப்பினர், ஆராய்ச்சியாளர், தொழிலாளி, நடிகர், நூலகர் என அறுபதுக்கு மேற்பட்ட பாத்திரங்களை இவர் மேற்கொள்ள வேண்டியுள்ளது. வேறு எந்த ஒரு தொழிலும் இத்துணை அதிக பாத்திரங்களை ஏற்கும் பாங்கு இல்லை. ஆசிரியர் பெறும் கல்வி அவர் வாழும் சமூகத்தின் இயல்பு, குடும்பத்தின் புலம், பெறும் வருமானம் தொழில் புரியும் பிரதேசம், பாடசாலையின் இயல்வு, கலைத்திட்ட இயல்பு, சமூக, அரச, தொழில்சார் செல்வாக்கு என்பன ஆசிரியரது பாத்திரப் பாங்கில் செல்வாக்கு செலுத்துகின்றன. இது தவிர சமூகமயமாக்கற் செயன்முறையிலும் தகவல் நிரற்படுத்தத் துறையிலும் ஆசிரிய பாங்கு அளவிட முடியாத பங்களிப்பை அல்லது செம்மைப்படுத்தலைச் செய்து வருகின்றன.

இவ்வாறு ஆசிரியரின் சமூக பொருளாதாரப் பாங்கு வாண்மையிலும், கால அளவிலும், சமூக அசைவியக்கத்தின் தன்மையிலும் தங்கியிருப்பதனால் ஆசிரிய வாண்மை தொடர்ந்து இயங்கியல் தன்மையுடையதாக அதாவது முழுமை அடைய முடியாது காணப்படுகின்றது. ஒரு வைத்தியருக்கு திட்டமிட்ட பாத்திரப்பாங்கு வரையறைக்குட்பட்டிருக்கும். ஆனால் ஒரு ஆசிரியரது பாத்திரப்பாங்கு வரையறைக்குட்பட்டதாக இருக்க முடியாது. இது சமூக, அரச, பொருளாதார தள மாற்றங்களுக்கு அமைய விரிவடைந்து செல்லும் என்பது வெளிப்படையான உண்மை ஆகும். அதாவது பல்பரிமாணமுடைய பணிநிலைகளில் ஆசிரியர்கள் ஈடுபடுவதாக இனங்காணப்பட்டுள்ளனர். அதாவது

- ❖ அறிவையும், திறன்களையும், மனப்பாங்கையும் தன் மாணவரிடம் விருத்தி செய்வர்.
- ❖ சமூகம் பற்றிய தெளிவான கண்ணோட்டத்தை விருத்தி செய்வர்.
- ❖ கலாசாரம் தேசப்பற்றை விருத்தி செய்வர்
- ❖ அரசியல் சமூகமயமாக்கலுக்கு உதவுபவர்
- ❖ அமைதி நல்லிணக்கம் என்பவற்றை விருத்தி செய்வதில் தனியாகவும், நிறுவன ரீதியாகவும் பங்காற்றுபவர்.
- ❖ வாழ்வுக்கும், தொழிலுக்கும் வழிகாட்டி உவவுபவர்.
- ❖ நம்பிக்கைக்குரிய வழிகாட்டி உதவுபவர்.
- ❖ நம்பிக்கைக்குரிய வழிகாட்டி
- ❖ புதிய தொழில்நுட்ப மாற்றங்களை நெறிப்படுத்தி கற்பிப்பவர்.
- ❖ மனிதவள விருத்திக்கு வாழ்நாள் முடிவிலும் பல வழிகளில் பங்களிப்பு செய்பவர்

## இலங்கைக் கல்வியில் ஆசிரிய வாண்மையின் பலம் பலவீனம்

இலங்கைக்கல்வியில் ஆசிரிய வாண்மையின் பலம் பலவீனம் பற்றி விபரிப்பதற்கு கல்வித் துறையில் எல்லா மட்டங்களிலும் கல்வித்தரத்தை புள்ளிவிபர அணுகுமுறையிலும், பண்பறிமுறையிலும் (Guanitative) ஆய்வு செய்து அதன் பெறுபேறுகளை முன் வைப்பதே சாலச்சிறந்ததாகும். கடந்தகால கல்விச் சமூக யதார்த்தம் கல்வி மதிப்பளவிலும், தர அடிப்படையிலும் பாரிய வீழ்ச்சிப் போக்கை காட்டியுள்ளது. இது தொடர்பான புள்ளி விபரங்களும் வருந்தத்தக்க நிலையையே காண்பிக்கின்றன.

கட்டாயக்கல்வி பெறக்கூடிய வயதினை உடைய (5-14) பிள்ளைகளில் ஏறத்தாழ 14% ஆனோர் பாடசாலைக்குச் செல்வதில்லை. ஐந்தாம் தரத்தில் உள்ள பிள்ளைகளில் ஐந்தில் ஒரு பங்கினரே எழுத்தில் அடைய வேண்டிய தேர்ச்சியை பெற்றுள்ளனர். 1995இல் நடைபெற்ற க.பொ.த சாதாரண தரத்தில் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுள் பத்தில் ஒரு பங்கினர் எட்டுப்பாடங்களிலும் சித்தியடையவில்லை க.பொ.த உயர்தரப் பரீட்சையில் பதினொன்றில் ஒரு பங்கினர் நான்கு பாடங்களில் சித்தி அடையவில்லை.

சிறந்த வாழ்க்கையை நடாத்துவதற்கு வேண்டிய அறிவு, திறன், மனப்பாங்கு கொண்ட மாணவர்களை எமது கல்வி முறை வழங்கத் தவறிவிட்டது. ஆக்கத்திறன் சுயதூண்டல், ஒழுக்கம், மற்றவர்களுக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிப்பளித்தல், சகிப்புத்தன்மை என்பனவும் மற்றும் ஏனைய பண்பாட்டு விழுமியங்களையும் கொண்ட முழுமையான ஆளுமை விருத்தியை மாணவர்களில் ஏற்படுத்தவில்லை.

இந்த நிலையில் இலங்கை ஆசிரியர்களின் வாண்மை மீது அறைகூவல்கள் பல விடுக்கப்பட்டமை இங்கு நினைவு கொள்ள வேண்டியுள்ளது. உடனடியாக கல்வி முறையிலும், ஆசிரிய கல்வி பயிற்சி தேவைகளில் மறுசீரமைப்பு உடனடித் தேவையாக (Task Force) துரித செயலணிக் குழுவினரால் முன்மொழியப்பட்டது.

ஆசிரியர்கள் பாடசாலை மட்டத்தில் செயற்படும்போது பல்வேறு மனத்தாங்கலகளுக்குள்ளாக்கப்படுகின்றனர். இவையும் ஆசிரிய வாண்மையில் நடைமுறைப் பிரச்சினைகளை தோற்றுவித்து வருகின்றது.

- ❖ நேரப்பிரச்சினை, மாணவர்களின் பாட மதிப்பீடுகளை நாளாந்த வேலைகளை பார்வையிடல்
- ❖ மாணவர்களின் ஒழுக்கப் பிரச்சினை, மாணவர்களது வரவு இடைவிலகல் பிரச்சினை.
- ❖ நிர்வாக ரீதியாக போதியளவு, உதவியின்மை, பலவீனமான நிர்வாகமும், வழிகாட்டலும்.
- ❖ சகபாடிகளது பிழையான மனப்பாங்கு, திருப்தியற்ற ஆசிரிய அணுகு முறைகள், கற்பித்தல் முறைகள்.
- ❖ பாதுகாப்பின்மையும், குறைந்து செல்லும் மாணவர் சேர்வு.
- ❖ அதிகளவு மாணவர்களைக் கொண்ட வகுப்பறை
- ❖ அடிக்கடி மாற்றமுறும், கலைத்திட்டம் கணிப்பீட்டு வகைகள் பாட உள்ளடக்கம்.
- ❖ பெற்றோர் பொதுமக்கள் ஆதரவு இன்மை, கல்வி தொடர்பான எதிர்மறை மனப்பாங்குகள்.
- ❖ அதிகரித்துவிட்ட தனியார் சிட்டை வகுப்புக்கள்
- ❖ ஆசிரியர்கள் தமது கல்வி தொடர்பான புதிய சிந்தனைகளை காலத்துக்கு காலம் புதுப்பித்து செயற்படாமை.
- ❖ தொடர் தொழில்சார் நிகழ்வுகள் காலத்துக்கு காலம் மீளாய்வு செய்யப்படாமை.
- ❖ சரியான தொழில் வழிகாட்டல் இன்மை.
- ❖ ஆசிரியர்களது செயலாற்றுகைகளை சரியான தரங்கணிப்பிடும் திட்டமின்மை.
- ❖ ஆசிரியர்கள் நிறைவு செய்யும் பணிகள் பண்புசார் அடிப்படையில் மதிப்பிட்டு வெகுமதிகள் வழங்கப்படாமை.

இவை மட்டுமன்றி கற்றலின் வெற்றி பாடசாலையின் வெற்றிக்கு வழியமைக்க வேண்டும். ஆசிரியர்களை நியமித்தல் அவர்களுக்கு பொருத்தமான பயிற்சி வழங்கல் அவர்களது வேலையை உயர்த்தல் என்பன கல்வியில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

இலங்கையில் காலத்துக்கு காலம் ஆசிரியர் நியமனம் தொடர்பாக முன்வைக்கப்படும் முறைகள் ஆசிரியர்களில் பலவீனத்தை தோற்றுவித்துள்ளன. ஆசிரியர் தரத்தை பேணுவதில் பல சவால்களை எதிர் கொள்ள வேண்டியநிலை உருவாகியது. அரசியல் காரணங்களுக்காக ஆசிரிய நியமனம் வழங்கல் ஏனைய தரமான ஆசிரியர் மத்தியிலும், பொதுமக்கள், பெற்றோர் மத்தியிலும் உளவியல் ரீதியான தாக்கத்தை, பெரும் இடைவெளியை தோற்றுவித்து விட்டன. ஆசிரியர்களது வகிபங்கிலும் ஏற்றத்தாழ்வுகள் தோன்றியுள்ளன.

இத்தகைய இலங்கை ஆசிரியர்களது வாண்மைப் பலவீனத்தை போக்க தொழில் வாண்மைத் திறன்கள் பல்மட்டங்களிலும் உடனடியாக வேண்டப்பட்டது உண்மை. இவ்வகையில் தேசிய கல்விக் கல்லூரிகள் ஆசிரியர் தொடக்கநிலை தொழில் வாண்மை திறன்கள் வழங்கும் நிறுவனங்களாக மாறியுள்ளன. இவற்றைவிட பல்கலைக் கழகங்களும், வாண்மை சார் பயிற்சி முகாமையாளர்களாகிய தேசிய கல்வி நிறுவகமும் ஆசிரியர்கள் தரத்தை பேணுவதில் பங்களிப்பு செய்ய முனைகின்றன.

இவ் அமைப்புக்கள் ஆசிரியர்களது வாண்மைப் பலத்தை பேணுவதில் பின்வருவன தொடர்பாக கருத்திற் கொள்ளல் மிக அவசியமாகும்.

- ❖ கற்பித்தலும் வகுப்பறை முகாமைத்துவமும்
- ❖ தம்மிடம் கற்கும் மாணவனின் தனியார் இயல்புகள்
- ❖ தமது கற்பித்தல் தொடர்பான சுயமதிப்பீடு.
- ❖ சகபாடிகளுடனான இணைப்பு
- ❖ ஆசிரியர் நடத்தையும், வகுப்பறை சனநாயகம் தொடர்பான செயற்பாடும் ஆசிரியர்களின் தொழில்சார் அர்ப்பணிப்பும்.
- ❖ கல்வி தொடர்பான தூர நோக்கும் பணிக்கூற்றும்
- ❖ பிரச்சினை விடுத்தலும், சீர்மியமும்.

**சிறந்த வாழ்க்கையை நடாத்துவதற்கு வேண்டிய அறிவு, திறன், மனப்பாங்கு கொண்ட மாணவர்களை எமது கல்வி முறை வழங்கத் தவறிவிட்டது. ஆக்கத்திறன் சுயதூண்டல், ஒழுக்கம், மற்றவர்களுக்கு மதிப்பளித்தல், சகிப்புத்தன்மை என்பனவும் மற்றும் ஏனைய பண்பாட்டு விழுமியங்களையும் கொண்ட முழுமையான ஆளுமை விருத்தியை மாணவர்களில் ஏற்படுத்தவில்லை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மாணவரின் வினைத்திறன் கற்றல் தொடர்பான மேற்பார்வையும், தேடல்களும்
- அகல்விரி பண்புடைய கற்றல் சமூகத்தின் அங்கத்தவராக இருத்தல்.

மேற்கூறப்பட்ட பிரேரணைகளை பல்வேறு ஆசிரிய கல்வி நிகழ்ச்சித்திட்டங்களினூடாக முன்னெடுத்தல் மூலம் ஆசிரிய வாண்மையின் பலவீனத்தை குறைத்து முழுமையான வாண்மையை ஏற்படுத்த முடியும்

> இலங்கையில் காலத்துக்கு காலம் ஆசிரியர் நியமனம் தொடர்பாக முன்வைக்கப்படும் முறைகள் ஆசிரியர்களில் பலவீனத்தை தோற்றுவித்துள்ளன. ஆசிரியர் தரத்தை பேணுவதில் பல சவால்களை எதிர் கொள்ள வேண்டியநிலை உருவாகியது. அரசியல் காரணங்களுக்காக ஆசிரிய நியமனம் வழங்கல் ஏனைய தரமான ஆசிரியர் மத்தியிலும். பொதுமக்கள். பெற்றோர் மத்தியிலும் உளவியல் ரீதியான தாக்கத்தை. பெரும் இடைவெளியை தோற்றுவித்து விட்டன. ஆசிரியர்களது வகிபங்கிலும் ஏற்றத்தாழ்வுகள் தோன்றியுள்ளன.

## ஆசிரிய வாண்மையில் ஆராய்ச்சியின் பங்கு

ஆசிரிய வாண்மையில் ஆராய்ச்சி என்பது எதைக் குறிக்கின்றது எனில் தற்போது உள்ள நிலையில் ஆசிரிய வாண்மையை கிரகித்து அவற்றை யதார்த்த பூர்வமாக திறனாய்வு செய்து அதன் வாயிலாக தோன்றும் புதிய கருத்துக்களை நடைமுறையில் அல்லது எதிர்கால ஆசிரிய சமூகத்துக்கும் பயன்படுத்துவதாகும். ஆசிரிய ஆராய்ச்சியானது தன்னை உருவாக்கிய சூழற்காரணிகளையும், தனது கல்விப் பின்னனியை தான் செயற்படும் சமூகத்தை தான் வளர்க்கின்ற அறிவினை காலத்திற்கூடாக தோன்றும் பாரம்பரியத்தை அதன் வழியில் உருவாகும் நாகரீகம் பண்பாட்டை ஆராய்வதாகும்.

விருத்தி அடைந்த பல நாடுகளில் ஆசிரிய வாண்மையினருகான செயல்நிலை ஆய்வுகள் தொழில் வாண்மையில் பூரண வெற்றியை அளித்து வருகின்றன. இலங்கை, ஜேர்மனி ஆகிய நாடுகளுக்கிடையில் கைச்சாத்தான இருபக்க உடன்படிக்கை மூலம் இலங்கையில் ஆசிரிய வாண்மை விருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு ஆதரவு வழங்கி வருகின்றது. ஜேர்மன் தொழில்நுட்ப ஒத்துழைப்பு, ஆதாரக்கல்வி நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் ஆசிரியர்களுக்கு முன் சேவைப்பயிற்சியையும் வழங்குவதில் தீவிரமா ஈடுபட்டு வருகின்றது. நாம் அறிந்தவரையில் வடக்கு கிழக்கு மாகாண ஆசிரிய சேவைக்கால செயல்திட்டமும் மத்திய மாகாண ஆசிரியர் சேவைக்கால செயல்திட்டமும் வாண்மைப்பயிற்சியில் பல செயற்றிட்டங்களை நிறைவு செய்துள்ளன.

இன்று ஜீரிஇசட் நிறுவனத்தால் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்ட செயல்நிலை ஆய்வு சில ஆய்வாளர்களுக்கு திகிலூட்டும் ஒரு வியாக்கியானமாக அமையலாம். இலங்கையில் கல்வித்தர விருத்தியை மேம்பாடடையச் செய்தல் வளர்ந்து வரும் தேவையாகும். இவ் ஆய்வு வைத்தியர் ஒருவர் தாம் கற்றவற்றைக் கொண்டு நோயாளியில் பரீட்சித்து பார்த்து வெற்றிபெறுவது போன்றதாகும். ஆசிரியரும் தமது அறிவு, திறன் பயிற்சி என்பவற்றைக் கொண்டு தனது அன்றாட வகுப்பு நிகழ்வுகளில் தனிப்பட்ட முறையில் கவனம் செலுத்தி கற்றல் கற்பித்தலில் உள்ள யதார்த்தமான பிரச்சினைகளை தீர்ப்பதற்காக வடிவமைக்கப்பட்ட ஒன்றாகும். மாணவர் ஆசிரியர் வகுப்பு, பாடசாலை ஆகிய ஒவ்வொன்றும் தனித்துவமானவை என்ற விளக்கத்தை தழுவியது.

இத்தகைய ஆசிரிய ஆய்வு வகுப்பறை செயற்பாடுகள் தொடர்பாக எழும் சிக்கலான சாதகமற்ற வினாக்களுக்கு தீர்வு கூற வேண்டிய அறிவுசார் விசாரணை முறை ஒன்றாகும். இது ஆசிரியர் தமது வகுப்பறை பற்றிக் கற்றுக் கொள்ளும் ஆர்வத்தையும் தம்மை வாண்மையுள்ளவராக விருத்தி செய்யும் ஆவலை கோருகின்றது. ஆசிரியர் தமது பணியில் தரவுகளை ஆவணப்படுத்துவது மட்டுமல்ல பிரதிபலிப்புச் செய்து நிலைமைகளில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இவை தவிர ஐக்கிய நாடுகள் சிறுவர் பாதுகாப்பு நிதியமானது கண்ணிவெடிப்பாதுகாப்பு தொடர்பான வாண்மைப் பயிற்சிகளை குறிப்பாக இலங்கையில் பல மாகாணங்களிலும் நடாத்தி வருகின்றது. இதுகூட இன்றைய யுத்த சூழ்நிலையை அவலமான உயிராபத்து நிறைந்த வாழ்வை இளம் சிறார்கள் எதிர் கொள்ளக்கூடிய பயிற்சியாக அமைகின்றது. இவ் ஆராய்ச்சிப் பாங்கு இன்று எமது நாட்டில் ஆசிரியர் மட்டத்தில் சிறந்த வாண்மை பயிற்சியாக ஆய்வாக முன்வைக்கப்படுகின்றது. மேற்குறிப்பிட்டவற்றில் இருந்து இலங்கை ஆசிரியர்களது வாண்மையில் ஆராய்ச்சியின் பங்கு, பணி ஆழமான பிரதிபலிப்புக்களை வழங்கும் என்பதில் ஐயம் இல்லை.

## ஆசிரிய வாண்மையின் தள மாற்றம்

இருபத்தோராம் நூற்றாண்டின் புதிய கல்விச் சீர்திருத்தப் புலத்தினுள் அகலக்கால் பதித்துவிட்ட நாம் மாறிவரும் அறிவியல் தொழில்நுட்ப மாற்றங்-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கு ஈடுகொடுக்கக்கூடிய வகையில் கற்பித்தல் தொழிலை வாண்மைத் தொழில் பண்புடையதாக அதாவது முழுமையான வாண்மை உடையதாக்கு-வதற்கு பின்வரும் அசுர வேகமாக மாற்றங்களை கவனத்தில் கொள்ள வேண்டும்.

❖ அறிவு எண் மயமாக்கப்படுதல்

❖ ஆசிரியர், மாணவர்க்கிடையில் தொழில்நுட்ப மின்னியல் வலுவுடன் தொழிற்படல்.

❖ தொழில் நிறுவனங்களும்,தகவல் தொடர்பு நிறுவனங்களும் பாடசாலைகளும் கூட்டாக இணைந்து தொழிற்படல்.

❖ அறிவின் உற்பத்தி அறிவின் பரவலாக்கம் அறிவின் முகாமைத்துவம் என்ற மூன்றும் ஒன்றிணைதல்.

❖ தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பங்களினால் ஒரு நிகழ்ச்சியை பல்கலைக்கழகம் பல நாடுகளின் மாணவர்களுக்கு சம காலத்தில் கற்பித்தல்.

❖ புதிய அறிவு மின்னியல் நுட்பத்தினால் தாமதம் ஏதும் இன்றி மிக விரைவில் மாணவரையும், ஆசிரியர்களையும் சென்றடைதல்.

இவ்வாறான பல வழிமுறைகளில் ஆசிரியர் மற்றும் கற்பித்தல் நோக்கு, போக்கு என்பன பெருமள-வில் மாற்றம் அடையும் என யாழ்பல்கலைக்கழக கல்வியில் துறைத்தலைவர் மா. சின்னத்தம்பி (2003) தனது கல்வியியலாளன் ஆய்வுரையில் குறிப்பிட்டமை இங்கு கால்கொள்ளத்தக்க விடயமாகும்.

இவ்வாறான ஆசிரியத் தொழிலின் தளமாற்றங்-களை சிறப்பாக முன்னெடுப்பதற்கு சர்வதேச ஆசிரிய ஒன்றியம் (WTO) ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் கல்வி விஞ்ஞான கலாசார நிறுவனம் (UNESCO) ஆசிரியர் சங்கங்கள் (Teachers Union) திட்டமிடல் பிரிவு (IEP) என்பன Teacher Plan என்ற ரீதியில் பல நிலைகளிலும் முயன்று வருகின்றன.

இந்நிறுவனங்கள் தொலைநோக்குடனும் (Vision) ஆசிரியப் பணிக்கூற்றினையும் (Mision) கல்வி முறையின் கட்டுக்கோப்பினையும் ஒருங்கிணைக்கும் நோக்குடன் ஆசிரியர்களின் வாண்மைத் தகுதியை மேலுயர்த்துவதற்குரிய முயற்சிகளை எடுத்துவருகின்றன.

புதிய சட்டங்களை தயாரிப்பதும், புதிய ஒழுங்கமைப்புடன் ஆசிரியர் கல்வி நிறுவனங்களை முகாமை செய்வதும் ஆசிரியர் தொடர்கல்வியில் ஈடுபாடுகாட்டகூடியதான பொருளாதார நலன்களை முன்னேற்றுவதற்கு ஆசிரிய திட்டம் தயாரிக்கப்பட்டுவருகின்றது.

கல்வித்துறையில் பரந்துபட்ட மையவிசையான ஆசிரிய வாண்மையை உயர்த்த செயல்நிலை ஆய்வுகள் ஊக்குவிக்கப்படல் வேண்டும். உலக ஆசிரிய தினத்தில் ஆசிரியர்களது வாண்மையை கௌரவித்து வெகுமதிகள், பாராட்டுகள், வெளியீடுகள் என்பன நடாத்தப்படல் வேண்டும். இந்நடவடிக்கைகள் எதிர்காலவியலில் முழுமையான ஒரு ஆசிரிய தொழில் வாண்மையை நிச்சயமாக உருவாக்கும் என்பதில் ஐயம் இல்லை.

## நிறைவுரை

புதிய தகவல் தொழில்புரட்சி உலகமயமாக்க-லின் பின்புலம் இன்று மாணவ சமூகத்திற்கும், ஆசிரிய வாண்மையாளர்களுக்கும் புதிய சவால்களைத் தோற்-றுவித்து வருகின்றது. உலகளாவிய ரீதியில் இன்று கல்விக்கான முதலீடுகள் மனித வளமுதலீடுகளாக பல மில்லியன் ரூபாய்கள் செலவிடப்பட்டுவருகின்றது. வணிக மயமாகும். கல்வியானது ஆசிரியர்களதும், மாணவ மணிகளினதும் சுயத்துவத்தை அழிக்காது பாதுகாக்க வேண்டிய அவலமான நிலை உருவாகி-யுள்ளது. கல்வித்தொழில் நுட்பமும், சர்வதேச ரீதியில் பரியளவில் துரித வேகத்தில் பரிமாற்றப்பட்டுவரு-கின்றது. இதற்கு சிறந்த மாற்றுமுகவர்கள் (Change Agent) ஆசிரியர்களே மாற்றத்திற்கு உட்படும் கல்வித் தொழிலின் வினைத்திறனையும், விளைதிறனையும் தீர்மானிப்பதாக ஆசிரிய வாண்மைத் தன்மையே அமையும்.

புதிய அறிவாற்றலும், வலுவான நடிபங்கும், ஈடுபாடும் தொழில் கலாசாரமும் உடையதாக முன்-னோக்கி நகர்த்த வேண்டும் முழுநிறைவான வாண்மையாக இத் தொழிலை கரினமிப்பு செய்வதற்கு ஆசிரிய கல்வியும், ஆசிரிய வாண்மை தொடர்பான ஆராய்ச்சிகளும், ஆசிரிய ஆய்வு நிறுவனங்களும், நிகழ்ச்சித்திட்டங்களும் வெறும் பிரேரணைகளாக அல்லாது நிச்சயிக்கப்பட்ட செய்திட்டங்களாக அமைய வேண்டும்.

மேற்குறிப்பிட்டவற்றை தொகுத்து நோக்கு-மிடத்து வாண்மைத் தொழிலுக்குரிய பண்பு நலன்கள் நிச்சயிக்கப்பட்டதாக கோட்பாட்டு ரீதியாக இருப்பினும் ஆசிரியர்களுக்குரிய நியமங்களும், ஒழுக்கக் கோவையும் வேறு எந்த வாண்மைத் தொழிலுடனும் ஒப்பு நோக்கப்படலாகாது. ஏது எவ்வாறாக இருப்பினும் ஆசிரியத் தொழில் வாண்மையானது. வாண்மைசார் பண்புகளை அதிகரித்துக் கொண்டு செல்வதை காணமுடிகின்றது. எனவே ஆசிரியர் தொழில் ஒரு முழுமையான வாண்மை உடையது அன்று என்பதை நியாயப்படுத்திக் கொண்டு 'வாண்மை ஓங்க மாநிலம் சிறக்கும்' என்பதை இறுதியாக நினைவில் நிறுத்துவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரிய கல்வியும் முகாமைத்துவச் சூழல் பிரச்சினைகளும்

தமிழ் தலைவர்கள் பாடுபட்டு உருவாக்கிய இலங்கைப் பல்கலை அமைப்பில் தமிழ் மாணவர்கள் தமது இனவீதாசாரத்துக்கு அதிகமாக அனுமதி பெறுவதைத் தவிர்க்க 1970 முதல் எவ்வாறு புதிய புதிய அனுமதிக் கொள்கைகள் உருவாக்கப்பட்டன. அக்கொள்கைகளினால் பாதிக்கப்பட்ட தமிழ் மாணவர்கள் தமக்குக் காட்டப்பட்ட அரச முறையான பாரபட்சங்கள். எவ்வாறு தமிழ் இளைஞர்கள் மத்தியில் தீவிரவாத போக்கைச் கிளர்ந்தெளச் செய்தன இவை யாவும் இலங்கையின் பல் கலைக்கழக மற்றும் சமூக வரலாற்றில் கறை படிந்த ஏடுகள் என்பதைப் பல பெரும்பான்மை இன ஆய்வாளர்களும் பின்னர் ஏற்றுக் கொண்டனர்.

கி.புண்ணியமூர்த்தி
விரிவுரையாளர்.
மட்டக்களப்பு தேசிய கல்விக் கல்லூரி

ஆசிரிய கல்வி தொடர்பான முகாமைத்துவச் சூழலை இரு முகாமைத்துவத் தள மட்டங்களில் பார்க்கலாம்.

1. ஆசிரிய கல்வியில் பேரண்ட முகாமைத்துவத் தள மட்டம் (Macro Level)
2. ஆசிரிய கல்வியில் நுண்பாக முகாமைத்துவத் தள மட்டம் (Micro Level)

இவற்றில் பேரண்ட முகாமைத்துவத்தினை தேசிய மட்டமாகக் கொள்ளலாம். அதாவது உபாயங்கள் தீர்மானிக்கப்பட்டு ஒரு நாட்டுக்காகவும் இனத்துக்காகவும் செய்யப்படும் திட்டங்கள் பேரண்ட முகாமைத்துவத் தள மட்டத்தில் அடங்கும். ஒரு வரையறுக்கப்பட்ட பூகோளப் பிரதேசத்திற்காகச் செய்யப்படும் திட்டங்கள் நுண்பாக முகாமைத்துவத் தள மட்டத்தில் அடங்கும். இதன்படி திட்டம் தயாரிப்போர், திட்டதைச் செயற்படுத்துவோர், திட்டங்களிலிருந்து பயன் பெறுவோர் ஆகியோரை ஒன்று திரட்டி அவர்களுக்கிடையில் இடைத் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டு தேசிய மட்டத்தில் எடுக்கப்படும் உபாய வழியைக் கொண்ட தீர்மானங்களைச் செயற்படுத்து-வதற்காகத் தயாரிக்கப்படும் திட்டம் நுண்பாக முகாமைத்துவத் தள மட்டத்தில் அடங்கும்.

அந்த வகையில் ஆசிரிய கல்வியில் பேரண்ட முகாமைத்துவத் தள மட்டத்தினுள்

1. கல்வி உயர் கல்வி அமைச்சு
2. தேசிய கல்வி நிறுவகம்
3. பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு போன்றவை அடங்கும்.

ஆசிரிய கல்வியில் நுண்பாக முகாமைத்துவத் தள மட்டதினுள்

1. தேசிய கல்விக் கல்லூரிகள்
2. ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகள்
3. ஆசிரிய மத்திய நிலையங்கள்
4. பல்கலைக்கழகங்கள் போன்றவை அடங்கும்.

இவற்றுக்கிடையிலான இடைத் தொடர்புகளில் பல்வேறு பிரச்சினைகள் காணப்படுகின்றன. இவ்வாறான பிரச்சினைகளை விளங்கிக் கொண்டு அவற்றுக்குத் தீர்வுகளை முன்வைக்கும் போது ஆசிரிய கல்வி முகாமைத்துவம் வினைத்திறனுள்ளதாக அமையும்.

அண்மையில் வெளியிடப்பட்ட யுனெஸ்கோ அல்லது யுனிசெவ் (UNESCO or UNICEF) வெளியீடான கற்போனின் கற்றல் (Learning of those who teach) ஆசிரியர் கல்விக்கான புதிய மாதிரிகை ஒன்றினை நோக்கி (Towards a new prpardigm of teacher education) என்பதில், ஆசிரியர் கல்வி, குறிப்பாக ஒரு புறக்கணிக்கப்பட்ட விடயமாக வந்துவிட்டது என்றும், எல்லோருக்கும் ஆரம்பக் கல்வி வழங்கப்பட வேண்டும் என்பதுடன் அதன் தரம் மேம்படுத்தப்பட வேண்டுமென உலகெங்கணும் குரல் எழுப்பப்பட்டு வரும் வேளையில் உலகளாவிய நிலையில் கற்பித்தலும், ஆசிரியர்களின் நிலமைகளும் தாழ் நிலைக்குச் சென்று கொண்டிருக்கின்றன என்றும் குறிப்பிட்டுள்ளமை நோக்கற்பாலது.

21ம் நூற்றாண்டுக்கான கல்வி மீதான சர்வதேச ஆணைக்குழு,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுனெஸ்கோவிடம் சமர்ப்பித்த அதன் அறிக்கையில் பின்வரும் குறிப்புரைகளை இடம்பெறச் செய்துள்ளது. "எல்லா அரசாங்கங்களும் , ஆரம்பக் கல்வியில் ஆசிரியர்களின் முக்கியத்துவத்தையும், ஆசிரியர்களின் தகைமைகள் மேம்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தும் பணிகளில் ஈடுபாடு கொள்ள வேண்டுமென ஆணைக்குழு உணர்கின்றது.

திறமைமிக்க மாணவர்களிடையேயிருந்து எதிர்கால ஆசிரியர்களை ஆட்சேபுச் செய்தல், அவர்களைப் பயிற்றுவித்தல், அவர்களுள் மிகத் திறமையாளர்களை ஆசிரியப் பணியை ஏற்க ஊக்குவித்தல் என்பன போன்ற நடவடிக்கைகள் அந்தந்த நாட்டில் நிலவும் விசேட சூழ்நிலைகளைக் கருத்திற் கொண்டு தீர்மானிக்கப்பட வேண்டும். அத்தகைய நடவடிக்கைகள் கட்டாயமாக எடுக்கப்பட வேண்டும். ஏனெனில் கற்பித்தற் தரம் உயர்த்தப்படுதல் , அவையின்றி ஏற்படுவதென்பது சாத்தியமில்லை. எனவே தரத்தை மேம்படுத்தல் மற்றும் ஆசிரியர்களை ஊக்குவித்தல் என்பவற்றிற்கு, எல்லா நாடுகளும் முன்னுரிமை அளிக்க வேண்டும்" எனக் கூறப்பட்டுள்ளது.

அண்மைக் காலங்களில் கொண்டு வரப்பட்ட மாற்றங்களை வெற்றி கரமாக நடைமுறைப்படுத்தும் நோக்கில். ஆசிரியரின் தர மேம்பாடு முக்கியமானது எனக் கருதப்படும் போது ஆசிரியர் கல்வியும் ஆசிரியர் பயிற்சியும் முக்கியத்துவம் பெறு கின்றன. இத்தகைய முயற்சியிலே பல்வேறு நிறுவனங்கள் ஈடுபட்டு வருகின்றன. ஆயினும் ஆசிரியர் களுக்கு வழங்கப்படும் கல்வியும் பயிற்சியும் வகுப்பறைச் செயற்பாடு களின்போது வினைத்திறனுடன் பயன்படுகிறதா? என்ற விடயம் மாண வர். பெற்றோர் மற்றும் சமூகத்தின் மத்தியில் ஐயத்தினைத் தோற்றுவித் துள்ளது.

இலங்கையில் முன்னெடுத்துச் செல்லப்படுகின்ற கல்விச் சீர்திருத்தங்கள் தொடர்பான நிகழ்ச்சித் திட்டம், குறித்த இந்த முக்கியத்துவம் வாய்ந்த அம்சத்தை அங்கீகரித்து ஆசிரியர் கல்வியின் தர மேம்பாட்டிற்கு உயர் முன்னுரிமை வழங்கியுள்ளது. தற்போது நடைமுறையிலுள்ள ஆசிரிய கல்வி முறையின் பயனுறுதி மற்றும் வினைத்திறன் பற்றிச் சென்ற தசாப்த காலத்தில் வினா எழுப்பப்பட்டது. அதன் விளைவாகப் பல ஆய்வுகள் மேற் கொள்ளப்பட்டுச் சமர்ப்பிக்கப்பட்ட காத்திரமான அறிக்கைகள், ஆசிரிய கல்வி தொடர்பாக ஒரு விரிவான தேசியக் கொள்கையை உருவாக்குதல் மற்றும் அக்கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கான வழிவகைகளை வகுத்தல் என்பன இடம்பெறலாயின.

அண்மைக் காலங்களில் ஏற்படுத்தப்பட்ட சட்டங்களின்படி ஏற்படுத்தப்பட்ட பல்வேறு நிறுவனங்களின் வகிபங்குகளும் அதிகாரங்களும் காரணமாகப் பல குழப்பங்களும் பிணக்குகளும் ஏற்பட்டுள்ளன. அவையாவன தேசிய கல்வி நிறுவகச் சட்டம், கல்வியியற் கல்லூரிச் சபைச் சட்டம், தேசிய கல்வி ஆணைக்குழுச் சட்டம் ஆசிரிய கல்வித் தேசிய அதிகார சபைச் சட்டம், பல்கலைக்கழகச் சட்டம், என்பன போன்ற சட்டங்கள் ஒவ்வொன்றுக்குமிடையே பல முரண்பாடுகளைத் தோற்றுவித்துள்ளன. ஒரே விடயத்தைப் பல நிறுவனங்கள் மேற்கொள்ள முயற்சிக்கும் போது இம் முரண்பாடுகள் அதிகரிக்கின்றன.

மேலும் இலங்கையில் அண்மைக்காலங்களில் கொண்டு வரப்பட்ட மாற்றங்ளை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தும் நோக்கில், ஆசிரியரின் தர மேம்பாடு முக்கியமானது எனக் கருதப்படும்போது ஆசிரியர் கல்வியும் ஆசிரியர் பயிற்சியும் முக்கியத்துவம் பெறுகின்றன. இத்தகைய முயற்சியிலே பல்வேறு நிறுவனங்கள் ஈடுபட்டு வருகின்றன. ஆயினும் ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் கல்வியும் பயிற்சியும் வகுப்பறைச் செயற்பாடுகளின்போது வினைத்திறனுடன் பயன்படுகிறதா? என்ற விடயம் மாணவர், பெற்றோர், மற்றும் சமூகத்தின் மத்தியில் ஐயத்தினைத் தோற்றுவித்துள்ளது. எனவே ஆசிரிய கல்வியினை வழங்கும், நடைமுறைப்படுத்தும் நிறுவனங்களின் முகாமைத்துவச் சூழல் பிரச்சினைகளை விளங்கிக் கொள்வதன் மூலமே இவ்வினாவுக்கு விடை காணமுடியும்.

## கல்வி உயர் கல்வி அமைச்சு

கல்வி உயர் கல்வி அமைச்சை எடுத்துக் கொண்டால் இதிலும் காலத்துக்குக் காலம் பல மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. உதாரணமாக 1977 ல் கல்வி அமைச்சு, உயர் கல்வி அமைச்சு, கல்விச் சேவைகள் அமைச்சு என உருவாக்கப்பட்டு அதன்கீழ் மூன்று குழுக்களை மூன்று செயலாளர்களின் கீழ் அமைத்தனர். 1994ல் இம் மூன்று அமைச்சர்களின் கீழ் இருந்த கல்வி அமைச்சு ஓர் தனி அமைச்சாக மாறியது. கடந்த அரசாங்க காலத்தில் கல்வி உயர் கல்வி அமைச்சுக்கு மேலதிகமாக மூன்றாம் நிலைக்கல்வி அமைச்சு தோற்றுவிக்கப்பட்டது. இதன் கீழ் பல்கலைக்கழகங்கள், உயர் தொழில்நுட்பக் கல்லூரிகள், பல்தொழில்நுட்பக் கல்லூரிகள், திறந்த பல்கலைக்கழகம், தேசிய கல்விக் கல்லூரிகள்? ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகள் போன்றவை உள்ளடங்கியிருந்தன. இவ்வாறு காலத்துக்குக் காலம் அரசாங்கங்கள் மாற்றம் பெறும்போது கல்வி அமைச்சின் கட்டமைப்பிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றம் ஏற்படுகின்றது. இது ஆசிரிய கல்வியிலும் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையில் ஆசிரிய கல்வியைப் பொறுத்த வரையில் கல்வி உயர் கல்வி அமைச்சினது பொறுப்புக்களையும் ஒழுங்கமைப்பையும் பார்ப்போமானால் கல்வி உயர் கல்வி அமைச்சு ஆசிரியர்களை நியமித்தல் ஆசிரிய கல்வி நிகழ்ச்சித் திட்டங்களைத் திட்டமிடல், அமுலாக்கல், பராமரித்தல் போன்ற செயற்பாடுகளை மேற்கொள்கின்றது. அதன்படி பிரதான செயலாளரின் கீழ் ஆசிரிய கல்விக்காக ஒரு பிரதம ஆணையாளர் உள்ளார். இவருக்குக் கீழ் தேசிய கல்விக் கல்லூரிகள், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகள், ஆசிரிய மத்திய நிலையங்கள் போன்றவை ஒழுங்கமைக்கப்பட்டுப் பராமரிக்கப்படுகின்றன.

1990களின் தொடக்கத்தில் ஆசிரியர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான குறைந்தபட்ச தகைமையாக க.பொத (உ/த ) இருத்தல் வேண்டும் என்ற தீர்மானத்தை கல்வி அமைச்சு எடுத்திருந்தது. ஆனால் 40000 க.பொ.த (சா/த)சான்றிதழ்களுடனான ஆசிரியர்கள் நியமனம் பெற்ற போது இத்தீர்மானம் கைவிடப்பட்டது. இதன் பின் 1991ம் ஆண்டின் 19ம் இலக்கச் சட்டப்படி உருவாக்கப்பட்ட தேசிய கல்வி ஆணைக்குழு ஆசிரிய கல்வி பற்றிய கொள்கைகளை உருவாக்குவதை தன் முதல் பணியாகக் கொண்டது. இவ் ஆணைக் குழு "ஆசிரிய கல்வி பற்றிய அடிப்படை அறிவு இன்றி எவரையும் ஆசிரியராகப் பாடசாலையில் நியமிக்கக் கூடாது" எனப் பரிந்துரை செய்தது. ஆயினும் இத்தகைய அடிப்படைகள் நிறைவேற்றப்படாமலேயே பலர் கல்வி உயர் கல்வி அமைச்சினால் ஆசிரியர்களாக நியமிக்கப்படுகின்றனர்.

ஆசிரிய கல்விக்கென தனியொரு சபை இல்லாமை மிகப் பெரும் பிரச்சினையாகவுள்ளது. இதனால் ஆணையாளரினால் எடுக்கப்படும் தீர்மானங்கள் தன்னிச்சையானதாகக் காணப்பட வாய்ப்புள்ளது. மேலும் பேரண்ட முகாமைத்துவ மட்டத்திலேயே நடைமுறைகளுக்கிடையில் முரண்பாடுகள் காணப்படுகின்றன. உதாரணமாக ஆசிரிய கல்விக்கான ஆட்சேர்ப்பில் கல்வி உயர் கல்வி அமைச்சினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளுக்கிடையில் பல்வேறு முரண்பாடுகள் காணப்படுகின்றன.

கல்வி உயர் கல்வி அமைச்சினால் நடைமுறைப்படுத்தும் ஆசிரிய கல்வி, பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களாவன

1. சேவையிலுள்ள பட்டதாரி ஆசிரியர்களுக்கென வழங்கப்படும் பட்டப் பின் கல்வி டிப்ளோமாவிற்கு (முழு நேரம், தொலைக்கல்வி) இட்டுச் செல்லும் ஆரம்பப் பயிற்சி

2. சேவையிலுள்ள பட்டதாரி ஆசிரியர்களல்லாதவர்களுக்கு வழங்கப்படும் பயிற்றப்பட்ட ஆசிரியர் சான்றிதழ் (முழு நேர வதிவு, தொலைக்கல்வி) பெறுவதற்கு இட்டுச் செல்லும் ஆரம்பப் பயிற்சி

3. கல்விச் சேவையில் இன்னமும் இடம்பெறாத (பட்டதாரி அல்லாதோர்) வர்களுக்கு வழங்கப்படும் கற்பித்தலில் தேசிய டிப்ளோமாவிற்கு (முழு நேர வதிவு) இட்டுச் செல்லும் ஆரம்பப் பயிற்சி

4. பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்குக் கல்விமாணிப் பட்டத்திற்கு (பகுதி நேர, நேருக்கு நேரான, தொலைக்கல்வி) இட்டுச் செல்லும் பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கான (பட்டதாரி அல்லாதோர்) தொழில்சார் விருத்தி

5. சேவையிலிருக்கும் ஆசிரியர்களுக்கான புத்தூக்கப் பயிற்சி (சேவைக் காலப் பயிற்சி) என்பனவாகும்

மேலும் அதிகாரப் பரவலாக்கம் காரணமாக ஆசிரியர்களைப் பணிக்குச் சேர்த்தல், அவர்களை மேற்பார்வை செய்தல் போன்ற பணிகளை மாகாணக் கல்வி அமைச்சு செய்து வருகிறது. இதனால் பல புதிய சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. ஆசிரியர்கள் படிப்பதற்காக விடுமுறையைப் பெற்றுக் கொள்வது கூடக் கடினமாகிவிட்டது. இவ் விடயத்தில் மாகாண சபைகளின் விதிமுறைகள் மத்திய அரசின் விதிமுறைகளிலிருந்து வேறுபட்டுக் காணப்படுகின்றன.

> **1994ல் இம் மூன்று அமைச்சர்களின் கீழ் இருந்த கல்வி அமைச்சு ஓர் தனி அமைச்சாக மாறியது. கடந்த அரசாங்க காலத்தில் கல்வி உயர் கல்வி அமைச்சுக்கு மேலதிகமாக மூன்றாம் நிலைக் கல்வி அமைச்சு தோற்றுவிக்கப்பட்டது. இதன் கீழ் பல்கலைக் கழகங்கள், உயர் தொழில் நுட்பக் கல்லூரிகள், பல்தொழில் நுட்பக் கல்லூரிகள், திறந்த பல்கலைக் கழகம் தேசிய கல்விக் கல்லூரிகள் ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகள் போன்றவை உள்ளடங்கியிருந்தன. இவ்வாறு காலத்துக்குக் காலம் அரசாங்கங்கள் மாற்றம் பெறும்போது கல்வி அமைச்சின் கட்டமைப்பிலும் மாற்றம் ஏற்படுகின்றது. இது ஆசிரிய கல்வியிலும் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது.**

## தேசிய கல்வி நிறுவகம்.

1985ம் ஆண்டு தேசிய கல்வி நிறுவகச் சட்டத்தின் கீழ் தேசிய கல்வி நிறுவகம் ஸ்தாபிக்கப்பட்டது. கல்வி உயர் கல்வி அமைச்சின் செயலாளரின் கீழ் தேசிய கல்வி நிறுவகச் சபை அமைந்துள்ளது, இதற்கென நிறைவேற்று அதிகாரமுள்ள பணிப்பாளர் நாயகம் உள்ளார். அவரின் கீழ் பிரதிப் பணிப்பாளர் நாயகம் உள்ளார். இவர்களின் கீழ் 06 உதவிப் பணிப்பாளர் நாயகங்கள் உள்ளனர். இவர்களின் கீழ் 06


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறைகள் காணப்படுகின்றன. தேசிய கல்வி நிறுவகம் ஆசிரிய கல்வியில் அளப்பரிய சேவையாற்றுகிறது. குறிப்பாக ஆசிரிய கல்விக் கலைத்திட்ட விருத்தியில் முக்கிய பங்காற்றுகிறது. அது தவிர முன் சேவை ஆசிரிய கல்வி, சேவைக் கால ஆசிரிய கல்வி ஆகிய இரு நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றது.

முன் சேவை ஆசிரிய கல்வியை வழங்குவதில் தேசிய கல்விக் கல்லூரிகள் முதலிடம் வகிக்கின்றன. இதன்படி முன்னர் எவ்வித வாண்மைத்துவத் தகைமைகளையும் பெறாதவர்கள் தேசிய கல்விக் கல்லூரியில் சேர்க்கப்பட்டு அவர்களுக்கு ஆசிரிய கல்வி வழங்கப்படுகின்றது. இவர்களுக்கான கலைத்திட்ட உருவாக்கம், மேற்பார்வை, கல்வியியலாளர்களுக்கான பயிற்சி, கற்றல் உபகரணங்களைத் தயாரித்து வழங்கல் போன்ற பலவற்றையும் தேசிய கல்வி நிறுவகம் மேற்கொள்கிறது. இதற்காகப் பல கோடி ரூபாய்கள் செலவிடப்படுகின்றது. ஆனால் இவ்வாறு வழங்கப்படும் ஆசிரிய கல்வி வினைத்திறனுள்ளதாக அமைந்துள்ளதா? என்பது பிரச்சினைக்குரிய விடயமாக உள்ளது. ஏனெனில் தேசிய கல்வி நிறுவகம் இதனை நடைமுறைப்படுத்தினாலும் கல்வி உயர் கல்வி அமைச்சின் நிகழ்ச்சித் திட்டங்களுக்கும் தேசிய கல்வி நிறுவகத்தின் நிகழ்ச்சித் திட்டங்களுக்கும் இடையில் பல முரண்பாடுகள் காணப்படுகின்றன.

**ஆசிரிய கல்விக்கென தனியொரு சபை இல்லாமை மிகப் பெரும் பிரச்சினையாகவுள்ளது. இதனால் ஆணையாளரினால் எடுக்கப்படும் தீர்மானங்கள் தன்னிச்சையானதாகக் காணப்பட வாய்ப்புள்ளது. மேலும் பேரண்ட முகாமைத்துவ மட்டத்திலேயே நடைமுறைகளுக்கிடையில் முரண்பாடுகள் காணப்படுகின்றன. உதாரணமாக ஆசிரிய கல்விக்கான ஆட்சேர்ப்பில் கல்வி உயர் கல்வி அமைச்சினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளுக்கிடையில் பல்வேறு முரண்பாடுகள் காணப்படுகின்றன.**

தேசிய கல்வி நிறுவகம் ஐந்து வகையான ஆசிரியர் கல்வி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துகிறது. அவையாவன:

1. தற்பொழுது சேவையிலுள்ள பயிற்றப்படாத, பட்டதாரி ஆசிரியர்களல்லாத ஆசிரியர்களுக்குத் தொலைக்கல்வி மூலமான பயிற்சி
2. பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்குப் பட்டப்பின் படிப்புக் கல்வி டிப்ளோமா
3. கல்வியில் பட்டப் பின் படிப்புக் கல்வி டிப்ளோமா
4. கல்வியில் பட்டப் பின் பட்டங்கள் (கல்வி முதுமாணி)
5. ஆசிரியர்களுக்கான குறுகிய கால சேவைக் காலப் பயிற்சி மாகாணத் திணைக்களங்கள், வலயக் கல்வி அலுவலகங்கள் என்பவற்றின் உதவியுடன் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களினூடாக இவை நடாத்தப்படுகின்றன.

## தொலைக்கல்வி

1990களில் சேர்த்துக் கொள்ளப்பட்ட 40000 ஆசிரியர்களில் பெரும்பகுதி ஆசிரியர்களைத் தேசிய கல்வி நிறுவகம் தொலைக்கல்வி முறையில் பயிற்றுவித்துள்ளது அதாவது மொத்த ஆசிரியர்களில் 18.7 வீதமானவர்கள் சான்றிதழ் அற்ற ஆசிரியர்கள் என அழைக்கப்பட்டனர். இவர்களை வைத்துக் கொண்டு கல்வித் தராதரங்களை மேம்படுத்திக் கொள்ள முடியாதென்ற காரணத்தால் தேசிய கல்வி நிறுவகம் துரிதமான பயிற்சிகளை தொலைக்கல்வி மூலம் வழங்கி இந்தத் தொகையை 18000 (2001ம் ஆண்டில்) ஆகக் குறைத்தது. எனினும் புதிய நூற்றாண்டில் கல்வி இலக்குகளை அடைவதற்கு இத்தகைய ஆசிரியர் குழாம் பொருத்தமற்றது என்பது தெளிவான விடயமாகும். தொலைக்கல்வி முறையிலமைந்த ஆசிரியர் கல்வித் திட்டம் பின்வரும் வசதிக் குறைவுகளைக் கொண்டுள்ளது.

1. வதிவிடப் பயிற்சியில் காணப்படுவது போல் ஆசிரிய பயிலுனர்களிடையே ஊடாட்டக் கற்றலைக் காண்பது பெரிதும் அரிது
2. ஆசிரிய மாணவரின் முன்னேற்றம், கற்பித்தற் தொழிற்பாடுகள், விழுமியங்கள் என்பன நுணுக்கமான மேற்பார்வைக்கு உட்படுத்தப்படுவதில்லை.
3. பயிற்சி, அமர்வுகளுக்கான கற்றல் கற்பித்தல் வசதிகள் குறைவாகவே உள்ளன. (உதாரணமாக மனையியல், தொழிநுட்பப் பாடங்கள்)
4. புறப் பாடவிதானச் செயற்பாடுகள் ஊடாகச் சமூக ஊடாட்டங்கள் கிடைப்பதில்லை.

தொலைக்கல்வித் துறையில் ஆசிரியர் கல்வி பெறுவோர் முழு நேர வேலையில் இருந்து கொண்டு கற்றதனால் புதிய வாய்ப்புக்களை நன்கு பயன்படுத்த முடியவில்லை. மேலும் தொலைக்கல்விப் பயிற்சி நெறி நீண்ட காலமாக இடை நிறுத்தப்பட்டுள்ளது இதனால் க.பொ.த சாதாரண தரத்துடன் நியமனம் பெற்ற பல மலையக ஆசிரியர்கள் நீண்ட காலமாக ஆசிரிய பயிற்சியைப் பூர்த்தி செய்யாததால் நிரந்தரமாகாமல் உள்ளனர்.

தேசிய கல்வி நிறுவகமானது கல்விச் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதில் பிரதான பங்கினை ஆற்றியிருந்த போதும் அந்நிறுவனத்தில் பல


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைப்பு ரீதியான பலவீனங்களும் நிதிப் பிரச்சினைகளும் காணப்பட்டதை டி. சில்வா (2003) தமது ஆய்வறிக்கையில் சுட்டிக் காட்டியுள்ளார். இவ்வாய்வின்படி தேசிய கல்வி நிறுவகச்சட்டம் திருத்தப்பட வேண்டிய தேவை ஒன்றுள்ளது. தேசிய கல்வி நிறுவகத்தின் பிரதான பணி கலைத்திட்ட விருத்தி இந்நிறுவனம் பட்ட, பட்டப் பின்படிப்புக் கற்கை நெறிகளை நடாத்துவது இப்பிரதான பணிக்கு இசைவானதாக இருக்கவில்லை அத்துடன் இது சட்டத்தில் குறிப்பிடப்பட்ட குறிக்கோள்களில் ஒன்றாக இருக்கவில்லை என இவ்வாய்வாளர் குறிப்பிட்டுள்ளார். இது மிகப் பெரியதொரு விமர்சனமாகும் ஏனெனில் தேசிய கல்வி நிறுவகத்தினால் பட்ட, பட்டப் பின்படிப்புக் கற்கை நெறிகளை நடாத்த முடியும். அதற்கு 1985ம் ஆண்டு தேசிய கல்வி நிறுவகச் சட்டத்தின் 28ம் பிரிவு இடமளிப்பதாக தேசிய கல்வி நிறுவகம் வாதிடுகிறது. அது வழங்கும் பட்டச்சான்றிதழ் அனைத்து மட்டங்களிலும் ஏற்றுக் கொள்ளப்படுவதாக தனது கருத்துக்குத் தேசிய கல்வி நிறுவகம் சான்று பகர்கின்றது.

மேலும் தேசிய கல்வி நிறுவகத்தில் குறைந்த வேதனம் வழங்கப்படுவதால் ஆளணிப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக குறை கூறப்படுகிறது. அது தவிர தேசிய கல்வி நிறுவகத்தினால் எடுக்கப்படும் தீர்மானங்கள் பிரதேச நிலையங்களினால் முறையாகப் பின்பற்றப்படுவதில்லை எனப் பல முரண்பாடுகள் முன்வைக்கப்படுகின்றன. மேலும் தேசிய கல்வி நிறுவகத்தால் வழங்கப்படும் கல்விமாணி, கல்வி முதுமாணிப்பட்டச் சான்றிதழ்களை அடிப்படையாகக் கொண்டு இலங்கைப் பல்கலைக்கழகங்களில் மேலதிகப் பட்டப்படிப்புகளைத் தொடரமுடியாதுள்ளது. அவர்கள் அவற்றை ஏற்றுக் கொள்வதில்லை, அது தவிர கல்விமாணிப் பட்ட நெறிகள் வாண்மைத்துவமுள்ள கல்வியியலாளர்களால் போதிக்கப்படுவதில்லை என்றும் அவற்றின் கலைத்திட்டம் தற்கால சூழ்நிலைக்குப் பொருத்தமற்றுள்ளதாகவும் (புதிய மீளமைப்புக்கு முன்) விமர்சிக்கப்படுகின்றன.

கடந்த காலங்களில் சான்றிதழ் கிளையில் பல குளறுபடிகள், இடம்பெற்றன. தொலைக்கல்விச் சான்றிதழ்களில், கல்விமாணிச் சான்றிதழ்களில் நம்பகத் தன்மை இல்லாமல் போய் இருந்தது. இது தவிர பரீட்சை முடிவுகள் வெளிவர நீண்ட காலம் செல்கின்றமை தேசிய கல்வி நிறுவகத்தில் கல்விசார் பாடநெறிகளைப் பின்பற்ற விண்ணப்பிப்பவர்களின் தொகையை வெகுவாகக் குறைத்துள்ளது உதாரணமாக பட்டப் பின்படிப்புக் கற்கை நெறியைக் குறிப்பிடலாம் இக்கற்கை நெறியை நடாத்திவரும் பல நிலையங்கள் மூடப்பட்டுள்ளமையைச் சுட்டிக் காட்டலாம். இது திறந்த பல்கலைக்கழகத்துக்கு அதிக வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது. பாடநெறி வினைத்தினுள்ளதாக இல்லை என்ற காரணமும் இதற்கு முன்வைக்கப்படுகிறது. அத்துடன் தேசிய கல்வி நிறுவகத்தில் தமிழ் மொழி அதிகாரிகளின் பற்றாக்குறை காரணமாக தமிழ் மொழி ஆசிரியர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய சூழ்நிலை தோன்றியுள்ளது. செயலமர்வுகள், கற்றல் உபகரணங்கள் மொழிபெயர்க்கப்படுவதால் பல்வேறு சிக்கல்கள் ஏற்படுகின்றன. சமமான வளப் பங்கீடும் காணப்படுவதில்லை.

> **முன் சேவை ஆசிரிய கல்வியை வழங்குவதில் தேசிய கல்விக் கல்லூரிகள் முதலிடம் வகிக்கின்றன. இதன்படி முன்னர் எவ்வித வாண் மைத்துவத் தகைமைகளையும் பெறாதவர்கள் தேசிய கல்விக் கல்லூரியில் சேர்க்கப்பட்டு அவர் களுக்கு ஆசிரிய கல்வி வழங்கப்படு கின்றது. இவர்களுக்கான கலைத் திட்ட உருவாக்கம், மேற்பார்வை, கல்வியியலாளர்களுக்கான பயிற்சி, கற்றல் உபகரணங்களைத் தயாரித்து வழங்கல் போன்ற பலவற்றையும் தேசிய கல்வி நிறுவகம் மேற் கொள்கிறது. இதற்காகப் பல கோடி ரூபாய்கள் செலவிடப்படுகின்றது.**

## தேசிய கல்வியியல் கல்லூரிகள்

தேசிய கற்பித்தல் டிப்ளோமா என்ற மூன்று வருட சேவை முன் ஆசிரியர் கல்வி நிகழ்ச்சித் திட்டத்தை தேசிய கல்வியியல் கல்லூரிகள் வழங்குகின்றன. 1993 இன் பரிந்துரைகளில் சொல்லப்பட்டவாறு க/பொ/த உயர்தரத்தில் மூன்று பாடங்களில் சித்தியடைதல் தேசிய கல்வியியல் கல்லூரி அனுமதிக்கான குறைந்தபட்ச நிபந்தனையாக உள்ளது. இதன்படி 1990களின் ஆரம்பத்தில் இருந்தது போல் பொருத்தமற்ற தகைமைகளுடன் நியமனம் செய்யும் நடைமுறை ஓரளவு குறைவடைந்துள்ளது. ஆனால் பயிலுனர்களைச் சேர்க்கும் புள்ளிகளின் அடிப்படையில் மாகாணத்துக்கு மாகாணம் வேறுபாடு காணப்படுகின்றது. அதாவது கல்வியில் பின்தங்கிய மாகாணங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது. இதனால் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர்களுக்கும் அனுமதி கிடைக்காத சூழ்நிலை ஏற்படும் பாடத்துறைகளுக்கிடையேயும் இவ்வாறான வேறுபாடுகள் காணப்படுகின்றன.

ஆசிரியர்களுக்கான அதிகரித்த கேள்வியைப் பூர்த்தி செய்யும் பொருட்டு 17 தேசிய கல்வியியல் கல்லூரிகள் நாடு பூராவும் ஸ்தாபிக்கப்பட்டன. ஆனால் தற்போது சில துறைகளுக்கான கேள்வி குறைந்து வருவதால் அத் துறைகள் மூடப்படுகின்றன. சில


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறைகள் புதிதாக ஆரம்பிக்கப்படுகின்றன. இதன் காரணமாகப் பல விரிவுரையாளர்கள், உரிய பாடத்துறைகள் இல்லாமையால் சிக்கல்களை எதிர்நோக்கும் நிலை தோன்றும் வாய்ப்புள்ளது. அதே வேளை தகவல் தொழினுட்பம் போன்ற பாடங்கள் ஆங்கில மொழி மூலத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் அவர்களுக்கு ஆங்கில மொழியில் கற்பிக்க விரிவுரையாளர்கள் பற்றாக்குறையாகவுள்ளனர். இணையத் தொடர்புகள் ஏற்படுத்தப்படாமலேயே தகவல் தொழினுட்பம் சில கல்லூரிகளில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

எனவே வளங்கள் இல்லாமல் பாடநெறியை ஆரம்பித்துள்ளமை கல்வி உயர் கல்வி அமைச்சு மேற் கொண்ட மிகப் பெரிய முகாமைத்துவப் பிரச்சினையாகவுள்ளது. மாணவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகவேயுள்ளது. குறிப்பாக தமிழ் மொழி மூலக் கல்லூரிகளிலேயே இந்நிலை அதிகம் காணப்படுகின்றது. மேலும் கட்டுறு பயில்வில் ஈடுபடும் ஆசிரிய பயிலுனர்கள் ஓர் இறுக்கமான பாடசாலை முறைமைக்குள் தனித்து விடப்பட்டு தமது வேலைகளை வேறொருவர் உதவியுமின்றி ஆற்ற நிர்ப்பந்திக்கப்படுகின்ற நிலைமைக் குள்ளாக்கப்படுகின்றனர். இவர்களுக்கு விரிவுரையாளர்கள் முறையான வழிகாட்டல் ஆலோசனைகளை வழங்குவதில்லை என ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

கல்வி உயர் கல்வி அமைச்சினால் தொடர்ச்சியான மேற்பார்வைகள் இடம்பெறுவதில்லை இதன் காரணமாக அனேகமான கல்வியியல் கல்லூரிகளின் முகாமைத்துவ, நிர்வாகச் செயன்முறைகளில் பல்வேறு சீர்குலைவுகள் காணப்படுகின்றன. ஒவ்வொரு கல்விக் கல்லூரியும் மற்றைய கல்லூரியில் என்ன நடக்கின்றது என்பதை அவதானித்து அதனை அவ்வாறே பின்பற்றுவது போன்றே தெரிகிறது. இதற்கு கல்விக் கல்லூரிகள் தொடர்பாக ஒரு நிரந்தரமான ஒழுங்குமுறைகள் செயற்படுத்தப்படாமையே காரணமாகும். கல்விக் கல்லூரிகளின் பொது விதிகளுக்கும் நடைமுறைகளுக்கும் இடையில் பல்வேறு முரண்பாடுகள் காணப்படுகின்றன. தலைமைத்துவத்தின் தன்னிச்சையான போக்குகளும் உட்கட்டமைப்பில் பல்வேறு முரண்பாடுகளைத் தோற்றுவிக்கக் காரணமாக உள்ளன.

**கல்வி உயர் கல்வி அமைச்சினால் தொடர்ச்சியான மேற்பார்வைகள் இடம்பெறுவதில்லை இதன் காரணமாக அனேகமான கல்வியியல் கல்லூரிகளின் முகாமைத்துவ, நிர்வாகச் செயன்முறைகளில் பல்வேறு சீர்குலைவுகள் காணப்படுகின்றன. ஒவ்வொரு கல்விக் கல்லூரியும் மற்றைய கல்லூரியில் என்ன நடக்கின்றது என்பதை அவதானித்து அதனை அவ்வாறே பின்பற்றுவது போன்றே தெரிகிறது. இதற்கு கல்விக் கல்லூரிகள் தொடர்பாக ஒரு நிரந்தரமான ஒழுங்குமுறைகள் செயற்படுத்தப்படாமையே காரணமாகும்.**

## ஆசிரிய கல்வியியலாளர்கள்

ஆசிரிய கல்வியியலாளர்களை ஆட்சேர்ப்பதிலும் பயிற்சி வழங்குவதிலும் பல்வேறு குறைபாடுகள் காணப்படுகின்றன. உதாரணமாக உடற்கல்வி, ஆங்கிலம் போன்ற பாடங்களுக்குப் பயிற்சி ஆசிரியர்களே சேர்க்கப்பட்டனர். ஆசிரிய கல்வியியலாளர்களில் சிலர் பல்கலைக்கழகங்களில் உள்ள கல்விப் பீடங்களில் கல்வியியல் பயிற்சியைப் பெற்றவர்களாவர். சிலர் பொதுக் கலைமாணிப் பட்டத்துடன் பட்டப் பின்படிப்புக் கல்வி டிப்ளோமாவில் திறமைச் சித்தி பெற்றவர்களாவர். அதிலும் தேசிய கல்வி நிறுவகம், பல்கலைக்கழகம், திறந்த பல்கலைக்கழகம் ஆகிய பலவற்றில் பயிற்சி பெற்றவர்களாக இவர்கள் உள்ளனர். இதிலும் நிறுவன ரீதியான வேறுபாடுகள் பற்றிய விமர்சனங்கள் உள்ளன.

ஆசிரிய கல்வியியலாளர்களாகத் தெரிவு செய்யப்பட்டவர்கள் பாடசாலைகளில் தமது வகுப்பறைக் கற்பித்தல் பணியைச் சிறப்புறச் செய்யும் நோக்கினை முதன்மையாகக் கொண்டதாகவே இவர்கள் பெற்ற பயிற்சி உள்ளது. அதாவது இவர்கள் தொழில் தகைமை உள்ள பள்ளி ஆசிரியர்களாக உருவாவதை நோக்கமாகக் கொண்டதே இவர்களது கல்வியியல் பயிற்சியின் நோக்கமாகும். ஆனால் ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகளிலும் கல்விக் கல்லூரிகளிலும் ஆசிரிய கல்வியை வழங்க இவர்களே தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு வழங்கப்பட்ட பயிற்சி பாடசாலை மாணவர்களை அடிப்படையாகக் கொண்டதே தவிர ஆசிரிய கல்வியைப் பெறும் முகிழ்நிலை ஆசிரிய மாணவர்களை அடிப்படையாகக் கொண்டதல்ல. இவர்கள் தமது பட்டப் பின்படிப்பு டிப்ளோமாவுக்கு மேலதிகமாகவும் கல்வியியலில் உயர் பட்டங்களைப் பெற்றிருத்தல் வேண்டும் என்ற நியதி உள்ளது. ஆனால் இவை யாவும் சிறந்த ஆசிரிய கல்வியியலாளர்களை உருவாக்கப் போதுமானதல்ல என்ற விமர்சனமும் உள்ளது.

ஆசிரிய கல்வியியலாளர்களில் ஒரு சிலருக்கு வெளிநாட்டுக் கல்வி வாய்ப்புக்கள் கிடைக்கின்றன. ஆனால் அவற்றில் ஒரு வரையறை இல்லாமல் இருப்பது பலரது விமர்சனத்துக்குட்பட்டுள்ளது. உதாரணமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரே சமமான தகுதியுள்ள ஆசிரிய கல்வியியலாளர்களில் ஒரு சிலர் ஒரு சில ஐரோப்பிய நாடுகளுக்கும் மற்றொரு சிலர் ஆசிய நாடுகளுக்கும் அனுப்பப்படுகின்றனர். அது தவிர அவர்கள் பெற்ற கல்வி தொடர்பான நடைமுறைப் பயன்பாடு பற்றி எவ்வித ஆய்வும் மேற்கொள்ளப்படுவதில்லை. செலவிடப்படும் உள்ளீட்டிற்கேற்ற வெளியீடு காணப்படுவதில்லை. எல்லோரையும் வெளிநாட்டுக்கு அனுப்ப வேண்டும் என்ற நோக்கில் அனுப்பப்படுவதாகவே தெரிகிறது. கல்வியியலாளர்களுக்கு ஆங்கில மொழித்தேர்ச்சி முக்கிய பிரச்சினையாகவுள்ளது. ஏனெனில் ஆங்கிலம் தெரியாத ஆசிரிய கல்வியியலாளர்களை ஆங்கிலேய நாடுகளுக்கு அனுப்புவதால் எவ்விதமான வினைத்திறனை எதிர்பார்க்க முடியுமென்ற விமர்சனமும் எழுப்பப்படுகிறது

நிறுவனங்களிடையே ஆசிரிய கல்வி என்னும் விடயத்தில் ஒருமைப்பாடு இல்லை ஆசிரிய கல்வி விரிவுரையாளர்கள் புதிதாக பணிக்கு நியமனம் செய்வது நீண்ட காலத்துக்கொரு தடவையே இடம்பெறுகிறது. ஏற்கனவேயுள்ள விரிவுரையாளர்கள் மத்தியிலும் பல தர வேறுபாடுகள் உள்ளன. கல்வித் தகைமை குறைந்த பலர் சேவை மூப்பு, வயது மூப்பு காரணமாக உயர் தரங்களிலுள்ளனர்.இவர்களது குறைந்த நிர்வாக முகாமைத்துவ, தலைமைத்துவத் திறன்கள் காரணமாக அமைப்பினுள் பல்வேறு சிக்கல்களும் முரண்பாடுகளும் வேரூன்றிக் காணப்படுகின்றன. தவிர இவர்களது வேலைகொள்ளும் செயற்பாடும் வலிதற்றதாகவேயுள்ளது. உயர் தரங்களையுடைய பல விரிவுரையாளர்கள் 10 வருடங்களுக்கு மேல் எவ்வித பதவியுயர்வுமின்றி ஒரே தரத்தில் (தரம் III) இருந்து கொண்டு போராடிக் கொண்டிருக்கின்றனர். இதனால் இவர்களில் பலர் கற்பித்தலில் ஊக்கமின்றிச் செயற்படுகின்றனர். தற்போது இவர்களது போராட்டத்துக்குப் பலன் கிடைப்பது போல் தெரிகிறது. அனேகமான விரிவுரையாளர்களின் கற்பித்தல் முறைகள் பெருமளவு மரபு வழிவந்தவையாகவேயுள்ளன. உயர் கல்வித்தகைமையுள்ளவர்களுக்கும் அற்றவர்களுக்கும் பெரிதும் வேறுபாடிருப்பதாகத் தெரியவில்லை. அதாவது அனேகமான விரிவுரையாளர்களின் கற்பித்தல் முறைகள் கரும்பலகையையும் சில வரைபடங்களையும் சார்ந்துள்ளன எனப் பல ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

**ஆசிரிய கல்வியியலாளர்களில் ஒரு சிலருக்கு வெளிநாட்டுக் கல்வி வாய்ப்புக்கள் கிடைக்கின்றன. ஆனால் அவற்றில் ஒரு வரையறை இல்லாமல் இருப்பது பலரது விமர்சனத்துக்குட்பட்டுள்ளது. உதாரணமாக ஒரே சமமான தகுதியுள்ள ஆசிரிய கல்வியியலாளர்களில் ஒரு சிலர் ஒரு சில ஐரோப்பிய நாடுகளுக்கும் மற்றொரு சிலர் ஆசிய நாடுகளுக்கும் அனுப்பப்படுகின்றனர். அது தவிர அவர்கள் பெற்ற கல்வி தொடர்பான நடைமுறைப் பயன்பாடு பற்றி எவ்வித ஆய்வும் மேற்கொள்ளப்படுவதில்லை. செலவிடப்படும் உள்ளீட்டிற்கேற்ற வெளியீடு காணப்படுவதில்லை. எல்லோரையும் வெளிநாட்டுக்கு அனுப்ப வேண்டும் என்ற நோக்கில் அனுப்பப்படுவதாகவே தெரிகிறது.**

தேசிய கல்விக் கல்லூரிகள் மத்திய அதிகார பீடம் (பேரண்ட முகாமைத்துவ மட்டம்) மாகாண, வலய நிர்வாகங்கள் என்பவற்றால் கட்டுப்படுத்தப்பட்ட நிலையில் சுய முயற்சியோ சுதந்திரமோ அதிகமின்றி உள்ளன.

மேலும் வெற்றிடங்கள் இன்னும் நிரப்பப்படாததால் பீடாதிபதிகள் தமக்கு விருப்பமான விரிவுரையாளர்களைத் தற்காலிக விரிவுரையாளர்களாக நியமித்துள்ளனர். அவர்களில் சிலர் ஆசிரியத் தொழிலே செய்யாதவர்கள் (தொழில்நுட்பப் பாடங்கள்) சில விரிவுரையாளர்கள் க.பொ.த (உ/த) மாத்திரமே சித்தியடைந்துள்ளனர். ஆனால் இவர்கள் கற்பிக்கும் மாணவர்கள் இவர்களை விட க.பொ.த (உ/த)த்தில் நல்ல பெறபேறுகளைப். பெற்றவர்களாவர். இவர்களால் கற்பிக்கப்படும் ஆசிரிய மாணவர்கள் பரீட்சையில் பாரிய நெருக்கடிகளை எதிர்நோக்குகின்றனர் உதாரணமாக சில தொழில்நுட்பப் பாடங்களில் 100% சித்தியடையாத நிலை காணப்பட்டுள்ளது.

பகுதி நேர விரிவுரையாளர்களின் தெரிவிலும் இணைக்கப்பட்ட விரிவுரையாளர்களின் தெரிவிலும் பல்வேறு பக்கச்சார்புகள் காணப்படுவதாகவும் குறை கூறப்படுகிறது. அத்துடன் தெரிவு செய்யப்படுபவர்கள் விரிவுரையாளர்களுக்கான பயிற்சி நெறிகளில் கலந்து கொள்வதில்லை. அத்துடன் இவர்களது கற்பித்தல் மேற்பார்வைக்குட்படுவதுமில்லை. இவ்வகை விரிவுரையாளர்கள் சிலருக்கு நிரந்தர விரிவுரையாளர்களைவிட அதிக இடமளிக்கப்படுவதாகவும் விமர்சிக்கப்படுகிறது.

கல்விக் கல்லூரிகளைப் பொறுத்த வரையில் கலைத்திட்டத்தைத் தயாரிப்பது தேசிய கல்வி நிறுவகம். ஆனால் மதிப்பீடு செய்வது பரீட்சைத் திணைக்களம். அதிலும் கணிப்பீட்டுச் செயன்முறை நடைமுறையிலிருப்பதால் ஒவ்வொரு பிள்ளையும் கட்டாயம் 60 புள்ளிகளுக்குமேல் சராசரி பெறுதல் வேண்டும். ஆனால் நடைமுறையில் பல்வேறு நிர்ப்பந்தங்கள் காரணமாக விரிவுரையாளர்கள் 60ற்கு மேல் புள்ளிகளை வழங்க வேண்டியுள்ளது. இதனால் அனைத்து மாணவர்களும் திறமைச் சித்திகளைப் பெற்றுச் சித்தியடையும் நிலை காணப்படுகிறது. இது உண்மையாகவே திறமையுள்ள மாணவனைப் பாதிப்பதாக உள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் சில பாடநெறிகள் தனியொரு கல்விக் கல்லூரியிலேயே உள்ளது உதாரணமாக இஸ்லாம், இந்து சமயம், விவசாயம் போன்ற பாடங்களைக் குறிப்பிடலாம். இப்பாடங்களைக் கற்பிக்கும் விரிவுரையாளர்களே பரீட்சை வினாத்தாள்களைத் தயாரிக்கிறார்கள். அத்துடன் அவர்களே மதிப்பீட்டுப் பணிகளிலும் ஈடுபடுகிறார்கள். அனேகமான பாடங்களைப் பொறுத்தவரை தமது கல்லூரி விடைத் தாள்களைத் தாமே மதிப்பீடு செய்யும் நிலை காணப்படுகிறது. இது பரீட்சை தொடர்பான நம்பகத் தன்மையினைக் கேள்விக்குறியாக்கியுள்ளது.

**கல்விக் கல்லூரிகளைப் பொறுத்த வரையில் கலைத்திட்டத்தைத் தயாரிப்பது தேசிய கல்வி நிறுவகம் ஆனால் மதிப்பீடு செய்வது பரீட்சைத் திணைக்களம். அதிலும் கணிப்பீட்டுச் செயன்முறை நடைமுறையிலிருப்பதால் ஒவ்வொரு பிள்ளையும் கட்டாயம் 60 புள்ளிகளுக்குமேல் சராசரி பெறுதல் வேண்டும்**

## ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகள்

கடந்த காலங்களில் ஆசிரிய கல்வி நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் பெரும் பங்காற்றியவை ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகளாகும். ஆனால் அவை இன்று செல்வாக்கிழந்துள்ளன. அவற்றின் இருப்பு கேள்விக்குறியாகியுள்ளது. தேசிய கல்வி ஆணைக்குழு "ஆசிரிய கல்வி பற்றிய அடிப்படை அறிவு இன்றிப் பாடசாலைகளில் நியமிக்கப்படுதல் கூடாது" எனப் பரிந்துரை செய்ததன் பின் இந்நிலை தோன்றியுள்ளது. ஆனால் தொடர்ந்தும் ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படுவதனால் ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. இக் கல்லூரிகள் மொத்தம் 17 பாடநெறிகளை வழங்குகின்றன. அவை தரம் 01முதல் 11 வரையிலான வகுப்புகளுக்குரிய பாடசாலைக் கலைத்திட்டத்திற்கு அமைவாக நடாத்தப்படுகின்றன. இங்குள்ள இலங்கை கல்வி நிர்வாக சேவைத் தரம் பெற்ற விரிவுரையாளர்களின் எதிர்கால நிலை கேள்விக்குறியாகியுள்ளது. கல்வியில் அரசியல் தலையிடும் வரை இந்நிலை தொடர்ந்து கொண்டேயிருக்கும். மேலும் ஆசிரிய கல்லூரிகளில் நவீன ஆசிரியர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யுமளவிற்கு ஆசிரிய கல்லூரிகளின் செயற்பாடுகள் விருத்தியடையவில்லை என்றே கூறலாம். அது தவிர அவற்றில் மிகப் பெருமளவு வளப் பற்றாக்குறை காணப்படுவதும் கண்கூடு. ஒன்றில் அரசாங்கம் ஆசிரிய கல்லூரிகளை மூடிவிடுதல் வேண்டும் அல்லது போதிய வளங்களையும் ஆளணிகளையும் வழங்கி அவற்றைச் சிறப்பாக இயக்குதல் வேண்டும். இவ் இழுத்தடிக்கும் போக்கு தொடர்ச்சியாகச் சாத்தியப்படாததாகவேயிருக்கும்.

## பல்கலைக்கழகங்கள்

இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களில் 04 மட்டுமே ஆசிரிய கல்வி நிகழ்ச்சித் திட்டங்களை வழங்குகின்றன. அவை கொழும்பு, பேராதனை, யாழ்ப்பாணப் பல்கலைகழகங்களும் திறந்த பல்கலைக்கழகமுமாகும். இப்பல்கலைக்கழகங்கள் மூன்று நிகழ்ச்சித் திட்டங்களை வழங்குகின்றன. அவையாவன

1.பட்டப்பின் கல்வி டிப்ளோமா

2.கல்வியில் பட்டப்பின் பட்டங்கள்

3.கல்விமாணிப் பட்டம்

என்பனவாகும். தேசிய கல்வி ஆணைக்குழுவின் அனுசரணையுடன் செய்யப்பட்ட ஆய்வொன்றின்படி (கொத்தலாவல,2003) பல்கலைகழகப் போதனாபீடங்களும் கல்வித் துறைகளும் பல பிரச்சினைகளையும் பலவீனங்களையும் கொண்டிருந்தன. சீர்திருத்தங்களைப் பொறுத்தவரையில் இவை தாமாக முயற்சிகளை மேற்கொள்ளவில்லை என்று கொத்தலாவல சுட்டிக்காட்டினார்.

மனித வளங்களைப் பொறுத்த வரையில் பல்கலைக்கழகக் கல்வியியல் துறைகள் பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளன. பல்கலைக்கழக விரிவுரையாளர்களில் பெரும்பாலானவர்கள் கலாநிதிப் பட்டம் பெறாதவர்கள். அத்துடன் பல கல்வித்துறை விரிவுரையாளர்கள் தமது கற்கை நெறியில் ஈடுபாடு காட்டாது பல இலக்கிய சமூகப் பணிகளில் அதிக அக்கறை காட்டி வருகின்றனர். ஓரிரு சிரேஷ்ட விரிவுரையாளர்களே ஆய்வுப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். ஆராய்ச்சி மாணவர்களுக்கு வழிகாட்டுவதற்குத் தகுதியுடைய போதிய விரிவுரையாளர்கள் இல்லை எனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

கொத்தலாவல தமது ஆய்விலும் பல்கலைக்கழகக் கல்வித்துறை பற்றிய மீளாய்வுகளிலும் 2005-2007 காலப் பகுதியில் கணிசமான சிரேஷ்ட ஆசிரியர்கள் ஓய்வு பெற உள்ளனர் என்றும் இதனால் ஏற்படுகின்ற இடைவெளியை நிரப்ப வெளிநாடுகளில் பயிற்சி பெற்றவர்கள் இல்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். மேலும் புதிய நியமனங்கள் எதுவும் செய்யப்படவுமில்லை. பல்கலைக்கழகங்கள் தமது ஆசிரியர்களின் தராதரங்களை மேம்படுத்திக் கொள்ள முடியவுமில்லை என்றும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிட்டுள்ளார். இப்பின்புலத்தில் சில பாடங்களை விசேட தேர்ச்சி பெறாத சாதாரண விரிவுரையாளர்களே கற்பிக்கிறார்கள்.அத்துடன் வெளிநாட்டுப் புலமைப் பரிசில்களை வழங்கும் விடயத்தில் பல்கலைக்கழகங்களிடையே பாரபட்சங்களும் காணப்படுவதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

## ஆசிரிய கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள்.

கல்வி நிறுவனங்கள் ஆசிரியர்களுக்கான தொடர் கல்விக்கும் வாய்ப்புகளை வழங்குகின்றன. கொழும்பு, பேராதனை மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகங்கள் விசேட துறைகளில் ஆசிரியர்களின் அறிவைப் பெருக்குதற் பொருட்டு உயர் பட்டக் கற்கை நெறிகளை ஒழுங்குசெய்து நடாத்துகின்றன. முதுமாணி, தத்துவ கலாநிதி நெறிகள் இப்பல்கலைக்கழகங்களில் காணப்படுகின்றன. கல்வியியில் முதுகலைமாணிப் பட்டம் (M.A), கல்வி முதுமாணி(M.Ed), விஞ்ஞானக் கல்வியில் முது விஞ்ஞானமாணி (MSc Sc Ed) மற்றும் கல்வியில் தத்துவ முதுமாணி (M.phil) என்பன போன்ற முதுமாணிப் பட்டப் படிப்புகள் அடங்குகின்றன. கல்வியில் தத்துவ கலாநிதிப்பட்ட நெறிகளும் நடத்தப்படுகின்றன. திறந்த பல்கலைக்கழகம் ஆசிரிய கல்வியில் முதுகலைமாணிப்பட்ட நெறியையும் நடத்துவது குறிப்பிடத்தக்கது. அதே வேளை தேசிய கல்வி நிறுவகம் கல்வியியலில் முதுமாணிப்பட்ட நெறியை நடாத்துகிறது.

ஆனால் இவற்றுக்கான நுழை தகைமைகளில் பிரச்சினைகள் காணப்படுகின்றன. உதாரணமாக Med க்கு கொழும்புப் பல்கலைக்கழகத்திற்குப் பட்டப் பின் கல்வி டிப்ளோமாவில் 06 Bக்கள் பெற்றிருத்தல் வேண்டும். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் முதற் பட்டத்துடன் பட்டப்பின் கல்வி டிப்ளோமாவில் திறமைச் (Merit) சித்தி அல்லது முதற் பட்டத்துடன் பட்டப்பின் கல்வி டிப்ளோமாவும் , கலைமாணி ஆரம்ப நிலைப் பரீட்சையில் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும், திறந்த பல்கலைக்கழகத்தின் பட்டப் பின் கல்வி டிப்ளோமா என்றால் 7Bக்கள் பெற்றிருத்தல் வேண்டும். தேசிய கல்வி நிறுவகம் என்றால் முதற் பட்டத்தில் முதல், இரண்டாம் வகுப்பில் சித்திகளுடன் பட்டப்பின் கல்வி டிப்ளோமா என்பன பெற்றிருத்தல் வேண்டும். அல்லது முதற் பட்டத்துடன் பட்டப்பின் கல்வி டிப்ளோமாவில் அதி விசேட (Distinction) அல்லது திறமை சித்தியைப் பெற்றிருத்தல் வேண்டும்.

> மனித வளங்களைப் பொறுத்த வரையில் பல்கலைக்கழகக் கல்வியியல் துறைகள் பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளன. பல்கலைக்கழக விரிவுரையாளர்களில் பெரும்பாலானவர்கள் கலாநிதிப் பட்டம் பெறாதவர்கள் அத்துடன் பல கல்வித்துறை விரிவுரையாளர்கள் தமது கற்கை நெறியில் ஈடுபாடு காட்டாது பல இலக்கிய சமூகப் பணிகளில் அதிக அக்கறை காட்டி வருகின்றனர்.

இவற்றில் தேசிய கல்வி நிறுவகத்தின் சான்றிதழை திறந்த பல்கலைககழகமும், திறந்த பல்கலைக்கழகத்தின் சான்றிதழை தேசிய கல்வி நிறுவகமும் ஏற்றுக் கொள்ளாத சில சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றன. கொழும்புப் பல்கலைக்கழகத்தின் சான்றிதழை இரு நிறுவனங்களும் ஏற்றுக் கொள்கின்றன. அதே வேளை திறந்த பல்கலைககழகம் நடாத்தும் ஆசிரிய கல்வியில் முதுகலைமாணிப்பட்ட நெறிக்கு இது போன்ற எந்த வரையறைகளும் காணப்படுவதாகத் தெரியவில்லை.

ஆசிரிய கல்வி நிறுவனங்களில் பயிற்சி பெறும் காலங்களிலே ஆசிரியர்கள் கல்விக் கோட்பாடுகள், கல்வி உளவியல், கற்பித்தல் முறைகள், மற்றும் மாணவர் மதிப்பீடு போன்ற விடயங்களைக் கற்றுக் கொள்கின்றனர். உள்ளகப் பயிற்சி பெறும் காலத்தில் இவ்வாறான விடயங்கள் வகுப்பறைக் கற்பித்தலின் போது வினைத்திறனுடன் பயன்படுத்தப்படுதல் வேண்டும் என்ற எதிர்பார்ப்புடனேயே கற்பிக்கப்படுகின்றன. இவ் ஆசிரியர்களும் மாணவர்களை அறிந்து கொள்ளும் உளவியல் மற்றும் சமூகவியல் கொள்கைகளைப் பிரயோகிக்கின்றனர். இவ் உத்வேகம் பயிற்சிக் காலம் முடிந்த பின் குறைவடைந்து செல்கிறது. பாடசாலையிலிருக்கும் பழைய ஆசிரியர்களும் புதியவர்களுக்கு முரண்பாடான தொழில் மனப்பாங்கை உருவாக்கக்கூடிய ஆலோசனைகளை வழங்குகின்றனர். இது, பெற்ற ஆசிரிய கல்வியை வினைத்திறனுடன் பிரயோகிப்பதில் பாரிய சிக்கல்களைத் தோற்றுவித்துள்ளது. மேலும் ஆசிரிய பயிற்சி நிறுவனங்கள் அவற்றைச் சூழவுள்ள சமுதாயங்களிலிருந்து தனிமைப்படுத்தப்பட்ட நிலையில் காணப்படுகின்றன.

எனவே ஆசிரிய கல்வியில் பேரண்ட முகாமைத்துவத் தளமட்டம், நுண்பாக முகாமைத்துவத் தளமட்டம் ஆகியவற்றுக்கிடையிலான இடைத் தொடர்புகள், பிரச்சினைகள், ஒன்றிலொன்று தங்கியுள்ள தன்மை ஒன்றிலொன்று ஆதிக்கம் செலுத்தும் தன்மை போன்ற முகாமைத்துவச் சூழல் பிரச்சினைகளை விளங்கிக் கொள்வதிலேயே வினைத்திறனுள்ள ஆசிரியர் கல்வி முகாமைத்துவம் தங்கியுள்ளது" எனலாம்.

## ஆசிரிய கல்வியில் புதிய மீளமைப்பு

ஆசிரிய கல்வியினைப் புதிதாக மீளமைப்புச் செய்ய வேண்டிய அவசியத் தேவை ஏற்பட்டதன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமாக 1991 இன் 19ம் இலக்கச் சட்டப்படி உருவாக்கப்பட்ட தேசிய கல்வி ஆணைக்குழு பல விதந்துரைகளைச் செய்தது. அதன்படி கல்வி அமைச்சில் பல மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. ஆசிரிய கல்வியில் பல சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன. அவற்றில் சில வருமாறு

1. கொள்கை அளவில் சகல ஆசிரியர்களும் பட்டதாரிகள் ஆதல் வேண்டும்.
2. ஆசிரிய கல்வி பெறாதவர்கள் ஆசிரியர்களாக நியமிக்கப்படுதல் கூடாது
3. தேசிய கல்விக் கல்லூரிகளில் கற்றுப் பெறப்படும் தேசிய டிப்ளோமா சான்றிதழை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்படும் ஆசிரிய நியமனமே ஆசிரியராவதற்கான முறையான வழிமுறையாகும்.

**ஆசிரிய கல்வி நிறுவனங்களில் பயிற்சி பெறும் காலங்களிலே ஆசிரியர்கள் கல்விக் கோட்பாடுகள், கல்வி உளவியல், கற்பித்தல் முறைகள் மற்றும் மாணவர் மதிப்பீடு போன்ற விடயங்களைக் கற்றுக் கொள்கின்றனர். உள்ளகப் பயிற்சி பெறும் காலத்தில் இவ்வாறான விடயங்கள் வகுப்பறைக் கற்பித்தலின் போது வினைத்திறனுடன் பயன்படுத்தப்படுதல் வேண்டும் என்ற எதிர்பார்ப்புடனேயே கற்பிக்கப்படுகின்றன. இவ் ஆசிரியர்களும் மாணவர்களை அறிந்து கொள்ளும் உளவியல் மற்றும் சமூகவியல் கொள்கைகளைப் பிரயோகிக்கின்றனர். இவ் உத்வேகம் பயிற்சிக் காலம் முடிந்த பின் குறைவடைந்து செல்கிறது.**

ஆனால் புதிய மீளமைப்பின் பின்னும் ஆசிரிய நியமனம் அரசியல் செல்வாக்குக்குட்பட்டதாக உள்ளது. சாகும் வரை உண்ணாவிரதம் இருந்தால் நியமனம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் இன்றும் பலர் கல்வி உயர் கல்வி அமைச்சின் முன்னும் கல்விக் காரியாலயங்களின் முன்னும் உண்ணாவிரதமிருக்கின்றனர். அதில் வெற்றியும் பெறுகின்றனர். அவர்களுக்கு நியமனம் பெற்றுத் தருவதாக உயர் அரசியல்வாதிகளும் உறுதியளிக்கின்றனர். இது போல பல சந்தர்ப்பங்களில் ஆசிரிய நியமனம் பற்றிய கொள்கைகள் மீறப்பட்டுள்ளன.அது மட்டுமன்றி ஆசிரியர் தொழில் ஒரு பிரதான வேலை வழங்கும் துறையாகவும் சமூகத்தால் கருதப்படும் நிலையும் தோன்றியுள்ளது. இவ்வாறு நியமனம் பெறும் ஆசிரியர்களுக்கு தேசிய கல்வி நிறுவகம் ஒரு குறுங்கால பயிற்சி நெறியினை வழங்குகின்றது. மேலும் சேவையிலுள்ள ஆசிரியர்களில் 15 சத வீத ஆசிரியர்கள் இன்னும் எவ்வித பயிற்சியுமின்றி வகுப்பறைக் கற்பித்தலில் ஈடுபடுகின்றனர்.

அது தவிர அண்மையில் வழங்கப்பட்ட 42000 பட்டதாரி நியமனங்களில் 20000 க்கு மேற்பட்டவர்களுக்கு ஆசிரிய நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இவர்கள் பயிலுனர்களாகச் சேர்க்கப்பட்டாலும் கற்பித்தல் தொடர்பான எவ்வித முன்னறிவுமில்லாத இவர்களிடம் பாடசாலைகளில் வகுப்புகளும், பாடங்களும் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இது மேலும் பல சிக்கல்களைத் தோற்றுவிக்கும். ஆனால் பல்கலைக்கழகங்களிலிருந்து வெளியேறும் கல்விமாணிப் பட்டதாரிகளுக்கும் ஆசிரியர் பதவிகள் தற்போது வழங்கப்பட்டு வருகிறது. இது வரவேற்கப்பட வேண்டிய விடயம் ஆனால் இதுவும் சரியாக ஒழுங்குபடுத்தப்படவில்லை.

புதிய மீளமைப்பின் பின் ஆசிரிய கல்வி நிறுவனங்களில் கல்வியியல் கற்கை நெறிகளை ஆங்கிலத்தில் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சில ஆசிரிய கல்வி நிறுவனங்களில் கணிதம்,கணினிக் கல்வி என்பன கட்டாய கற்கை நெறிகளாக்கப்பட்டுள்ளன. ஆசிரிய கல்விக்கான தேசிய அதிகார சபை (NATE) பல்கலைக்கழகங்கள், ஆசிரிய கல்வி நிறுவனங்கள் வழங்கும் கல்வியியல் சார் பட்டங்களும் பயிற்சிகளும் தனிப்பட்ட முறையில் ஆசிரியர்களின் தகைமைகளை அதிகரிக்கவும் பதவியுயர்வுகளுக்கும், சம்பள உயர்ச்சிக்கும் பயன்படுகின்றனவே தவிர மாணவர் மேம்பாடு குறித்துப் பயன்படுத்தப்படுவது மிகவும் குறைவு எனத் தெரிவித்துள்ளது.

## ஆசிரிய கல்விக்கான தேசிய அதிகார சபை (NATE)

பல வருடங்களாக ஆசிரிய கல்வியில் ஏற்பட்ட அபிவிருத்தியானது இயைபுபடுத்தப்பட்டதாகவும் அவ்வப்போது செய்யப்பட்டதாகவும் இருந்த தன்மையானது ஆசிரிய கல்விக்கான தேசிய அதிகார சபை (NATE) ஒன்றினை அமைக்கும் பரிந்துரை மூலம் நிவர்த்தியாகும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆசிரிய கல்வி நிறுவனங்கள் யாவற்றையும், ஆசிரிய கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள் யாவற்றையும் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதன் மூலம் ஆசிரிய கல்விக்கான தேசிய அதிகாரசபை ஆசிரிய கல்வி சம்பந்தமாக இணைக்கப்பட்ட தேசிய முறைமை ஒன்றை அமைக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. அத்துடன் ஆசிரிய கல்வி தொடர்பான தேசிய முறைமையின் கூட்டு மொத்தமான கொள்கை விருத்திக்கும் ஒன்றிணைப்பிற்கும் இது பொறுப்பாக இருக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. அது தவிர ஆசிரிய கல்வி நிகழ்ச்சித் திட்டங்களைக் கண்காணித்துத் தகுதிச் சான்றிதழ் (Accredit) வழங்கும் எனவும் எதிர்பார்க்கப்பட்டது. இவற்றுக்காக ஆசிரிய கல்விக்கான தேசிய அதிகார சபையானது 1997 இல் உருவாக்கப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரிய கல்விக்கான தேசிய அதிகார சபை செயற்பட சிறிது காலம் எடுத்தது. அதனுடைய தொழிற்பாடுகள் பிற நிறுவனங்களது செயற்பாடுகளுடன் பிணைந்திருந்தது. இதனால் தனது இலக்குகளை அடைவதில் இவ்வதிகார சபை தோல்வியுற்றதோடு 2002இல் தொழிற்பாடுகளை நிறுத்திக் கொண்டது. இவ்வமைப்பு விரிவான அதிகாரங்களைக் கொண்டிருந்தது அமைச்சுக்கு வெளியே இருந்த நிறுவனங்களான பல்கலைக்கழகங்கள், தேசிய கல்வி நிறுவகம், தேசிய கல்வியியல் கல்லூரிகள், ஆசிரிய நிலையங்கள் என்பவற்றுடன் தொடர்புகளை ஏற்படுத்தியிருந்தால் அமைச்சுக்கு வெளியே அது ஒரு தன்னாதிக்கமுள்ள நிறுவனமாக வெற்றி பெற்றிருக்க முடிந்திருக்கும். எனப் பலராலும் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆசிரிய நிலையங்கள்

ஆசிரிய பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் ஏற்கனவே பெற்ற " ஆசிரிய கல்வி / பயிற்சி" புதிய நூற்றாண்டின் கல்வி இலக்குகளை அடைவதற்குப் பொருத்தமற்றது என்ற காரணத்தாலேயே அவர்களது தொழில் தகைமைகளைத் தொடர்ச்சியாக மேம்படுத்திக் கொள்வதற்கான நிறுவன ஏற்பாடுகள் தேவையென்று இன்று நாடெங்கும் 100 ஆசிரிய நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தேசிய கல்வி நிறுவகம் இவற்றுக்கான நிகழ்ச்சித் திட்டங்களை வரைந்துள்ளது. இந்நிலையங்கள் தேசிய கல்வியியல் கல்லூரிகளுடன் இணைக்கப்பட்டு வலயக் கல்வி அலுவலகங்களால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. ஆயினும் அவை சில வேளைகளில் 100 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ளன. உதாரணமாக மட்டக்களப்பு தேசிய கல்வியியல் கல்லூரியுடன் திருகோணமலை ஆசிரிய கல்வி நிலையம் இணைக்கப்பட்டுள்ளது. ஆனால் அவையிரண்டுக்குமிடையில் நடைமுறையில் ஏதாவது தொடர்புகள் இருப்பது போல் தெரியவில்லை. அது தவிர தேசிய கலைத்திட்டத்துக்கும் உள்ளூர் தேவைகளுக்குமிடையில் ஒர் சம நிலையைப் பேணுவதிலும் இந்நிலையங்கள் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றன.

இத்தகைய ஆசிரிய நிலையங்களில் முகாமையாளர்களாக ஆசிரிய கல்வியியலாளர் சேவையைச் சேர்ந்தவர்களே கடமையாற்றுதல் வேண்டும். ஆனால் அனேகமான நிலையங்களில் கல்வித் திணைக்களத்தால் நியமிக்கப்பட்ட ஆசிரியர்களே உள்ளனர். ஆசிரியர்களே ஆசிரியர்களுக்குப் பயிற்சி வழங்குவதா? என்ற வினாக்கள் ஆசிரியர்களாலேயே எழுப்பப்படுவதையும் காணமுடிகிறது. அது தவிர இவ்வகை முகாமையாளர்களின் கீழ் உதவியாளர்களாக ஆசிரிய கல்வியியலாளர்கள் சேவையாற்றுகிறார்கள். என்பதும் குறிப்பிடத்தக்கது.

இன்று ஆசிரிய கல்வி நிலையங்களின் சுமை அதிகரித்து வருகிறது. இதற்குக் காரணம் ஏராளமான ஆசிரியர்கள் பயிற்சி பெற்று வருவதாகும். ஆசிரியர் கல்வியைப் பொறுத்த வரையில் இந் நிலையங்கள் சில நல்ல பெறுபேறுகளைக் காட்டினாலும் நிதி மற்றும் மனித வளம் சார்ந்த பிரச்சினைகள் காரணமாக இந் நிலையங்கள் தம் நிகழ்ச்சித் திட்டங்களைச் சரிவர நடைமுறைப்படுத்த முடியவில்லை. அதே வேளையில் ஆசிரிய கல்வி நிலையங்களில் அல்லது பாடசாலைகளில் கற்றல் கற்பித்தல் நிலைமையில் மாற்றங்களைக் கொண்டு வருவதில் இந் நிலையங்கள் வெற்றி பெறவேயில்லை எனலாம். பாடசாலை மட்ட முகாமைத்துவச் செயற்றிட்டங்களில் இந் நிலையங்களைப் பயன்படுத்த எடுத்துக் கொள்ளும் முயற்சிகளும் தொடர்ந்தும் மந்தமானதாகவே காணப்படுகிறது.

## தொடருறு கல்வி

ஆசிரியர்களின் கற்பித்தல் சார் பண்பு விருத்தியையும், ஆசிரிய வாண்மை விருத்தியையும் ஏற்படுத்துவதற்காகக் கொண்டு வரப்பட்ட புதிய மீளமைப்பே தொடருறு அசிரியர் கல்வியாகும். குறிப்பாக நாட்டின் ஆசிரியர் ஆளணியைத் தரமுயர்த்துவதற்கும், தற்காலக் கல்விப் போக்குகளுடனும், விடய உள்ளடக்கங்களுடனும் ஆசிரியர்கள் பரிச்சியப்படுவற்கும் இவற்றினூடாகக் கற்பித்தலின் தரத்தை மேம்படுத்துவதற்கும் தொடருறு கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. மேலே எடுத்தாராயப்பட்ட அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தொடருறு ஆசிரியர் கல்வி ஒரு தீர்வாக அமையும் எனப் பலராலும் எதிர்பார்க்கப்பட்டது.

புதிய மீளமைப்பின்படி தேசிய கல்விக் கல்லூரிகளும் ஆசிரியர் மத்திய நிலையங்களும், பிராந்திய ஆங்கில உதவி நிலையங்களும் இணைந்தே தொடருறு கல்வி நிகழ்ச்சித் திட்டங்களில் முற்றாக ஈடுபடுதல் வேண்டும். திட்டமிடுவதும், பயிற்சியாளருக்கு பயிற்சியளிப்பதும் தேசிய கல்வி நிறுவகத்தால் நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டும். பிராந்திய மட்டத்தில் கல்வி சார் தலைமைத்துவத்தினை கல்விக்

**அண்மையில் வழங்கப்பட்ட 42000 பட்டதாரி நியமனங்களில் 20000 க்கு மேற்பட்டவர்களுக்கு ஆசிரிய நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இவர்கள் பயிலுனர்களாகச் சேர்க்கப் பட்டாலும் கற்பித்தல் தொடர்பான எவ்வித முன்னறிவுமில்லாத இவர் களிடம் பாடசாலைகளில் வகுப்பு களும், பாடங்களும் ஒப்படைக்கப் பட்டுள்ளன. இது மேலும் பல சிக்கல்களைத் தோற்றுவிக்கும்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லூரி வழங்குதல் வேண்டும். சகல தொடருறு ஆசிரிய கல்விச் செயற்பாடுகளும் பிரதேச மட்டத்திலும், தேசிய மட்டத்திலும் முன்மொழியப்பட்ட குழுக்களினால் (Proposed Committees) தொடர்ச்சியாக ஒருங்கிணைக்கப்படுதல் வேண்டும்.

மேலும் மாகாண இணைப்பு அதிகாரிகளினூடாக வலயக் கல்வி அதிகாரிகளினால் தேசிய கல்விக் கல்லூரிகளும் ஆசிரியர் மத்திய நிலையங்களும் தங்கள் நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் வேண்டும். பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் சகல ஆசிரியர்களும் பங்குபற்றுவது மிகவும் கட்டாயமானது என ஆசிரியர் சேவை அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

**ஆசிரிய பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் ஏற்கனவே பெற்ற "ஆசிரிய கல்வி / பயிற்சி" புதிய நூற்றாண்டின் கல்வி இலக்குகளை அடைவதற்குப் பொருத்தமற்றது என்ற காரணத்தாலேயே அவர்களது தொழில் தகைமைகளைத் தொடர்ச்சியாக மேம்படுத்திக் கொள்வதற்கான நிறுவன ஏற்பாடுகள் தேவையென்று இன்று நாடெங்கும் 100 ஆசிரிய நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தேசிய கல்வி நிறுவகம் இவற்றுக்கான நிகழ்ச்சித் திட்டங்களை வரைந்துள்ளது. இந்நிலையங்கள் தேசிய கல்வியியல் கல்லூரிகளுடன் இணைக்கப்பட்டு வலயக் கல்வி அலுவலகங்களால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன.**

இது பதவியுயர்வைப் பெறுவதற்கும், உள்நாட்டு, வெளிநாட்டுப் புலமைப் பரிசில்களைப் பெறுவதற்கும், விசேட தகைமையாகக் கணிக்கப்படுகிறது. (கூற்று 1 இல் 11.1-7 பந்தியிலும் பகுதி II இல் 2ம் பக்கத்தில் 3ம் பந்தியிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. மீண்டும் 30 . 09 . 1999 ம் திகதியிடப்பட்ட 1/99ம் இலக்க சுற்றுநிருபத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது.) ஒவ்வொரு வலயத்திலுமுள்ள சகல ஆசிரியர்களையும் நிகழ்ச்சித் திட்டங்களில் பங்குபற்றச் செய்யும் பொறுப்பு வலயக் கல்விக் காரியாலயத்தைச் சார்ந்ததாகும்..

## தொடருறு ஆசிரியர் கல்வியின் நோக்கங்கள்

1. ஆசிரியர்கள் வகுப்பறைகளில் கற்பிக்கும் சிறந்த முறைளை அறிந்து கொள்ளுதல்
2. கற்றல், கற்பித்தல் துணைச் சாதனங்களைத் தெரிவு செய்யக் கற்றுக் கொள்ளுதல்
3. வகுப்பறைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணக் கற்றுக் கொள்ளுதல்
4. நல்ல வினைத்திறனுள்ள கற்பித்தலை வகுப்பறையில் மேற்கொள்ளக் கற்றுக் கொள்ளுதல்
5. பயனுறுதி வாய்ந்த கற்றல், கற்பித்தலை மேற்கொள்ளுதல்
6. ஆசிரியர்களிடம் இயற்கையாக அமைந்திருக்கக்கூடிய அறிவு, திறன்கள், ஆற்றல்கள், என்பனவற்றை பூரணமாக விருத்தி செய்யக் கற்றுக் கொள்ளல்.
7. வகுப்பறைகளில் மட்டுமல்லாது சமூகத்திலும் தொடர்ச்சியான முன்னேற்றத்தை ஏற்படுத்துதல்
8. கற்றல் கற்பித்தலில் புதுமையான மாற்றங்களை ஏற்படுத்துதல்
9. தேசிய ஒன்றிணைப்பினையும், ஒருமைப்பாட்டினையும் ஏற்படுத்துதல்
10. தமக்குத் தேவையான சேவைக்காலக் கல்வியை ஆசிரியர்கள் இந்த மத்திய நிலையங்களிலேயே கற்றுக் கொள்ளக் கூடியதாக இருத்தல்.
11. குறித்த புலத்தில் உள்ள ஆசிரியர்களை ஒன்று சேரச் செய்தல்
12. இதுவரை தொலைக் கல்வி முறையினூடாக மட்டும் பயிற்சி பெற்றவர்களுக்கு வதிவிட இடைத்தாக்க அனுபவம் பெற வாய்ப்பளித்தல்
13. வேறுபட்ட மட்டங்களிலும், ஆழத்திலும் தொடருறு கல்விக் கற்கை நெறிகளை வழங்குதல்
14. எல்லா மட்டங்களிலுள்ள ஆசிரியர்களுக்கும் தொடருறு கல்வியை வழங்குதல்.

போன்ற சாதக பலன்களைக் குறிப்பிடலாம்.

### 1. தரமேம்பாட்டுக் கற்கை நெறி (Upgrading Courses)

ஆசிரியர்கட்கு அமைக்கப்பட்ட கற்கை நெறியை வழங்குவதன் மூலம் அவர் தம் பாட விடயம் மற்றும் முறையியல் தொடர்பான அறிவை மேம்படுத்தும், தரமுயர்த்தும் நெறிகள் பாட உள்ளடக்கம், கற்பித்தல் முறைகள் என்பவற்றில் காலத்திற்கேற்றவாறான தற்போதைய போக்குகளை ஆசிரியர்கள் அறிய உதவும். ஆசிரியர் சேவைக் குறிப்பின் தேவைகளைக் குறை நிரப்பும் வகையில் இவை கட்டமைப்பு நெறிகளாக வழங்கப்படலாம். அத்துடன் தேவைப்படின் கற்பித்தலில் டிப்ளோமா சான்றிதழை வழங்குவதிலும் முடிவடையலாம்.

இப் பயிற்சி தொலைக்கல்வி முறையில் ஆசிரிய கல்வி நிலையங்களில் அல்லது ஆசிரிய கல்விக் கல்லூரிகளில் நடாத்தப்படும். மூன்று வார வதிவுத் தொடர் அமர்வுகளையும் உள்ளடக்கியதாக அமையும். ஆசிரியர் சேவைக் குறிப்பிற்கமைய அல்லது கற்பித்தல் டிப்ளோமாவில் ஒரு பகுதியைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூர்த்தி செய்யும் விதத்திற்கமைய, தரமுயர்த்தும் பயிற்சிக்காக தேசிய கல்விக் கல்லூரிகளும் மூன்று வாரத் தொடர் கல்வி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்தும்

2. **தகைமை விருத்தி கற்கை நெறி** (Broadening Courses)

ஆசிரியர்கள் மேலதிகத் தகைமைகளைப் பெறும் பொருட்டுத் தமது அறிவையும் திறன்களையும் விரிவாக்கிக் கொள்ள இக்கற்கைநெறி ஊக்குவிக்கும். அதற்கு வேண்டிய வசதிகளை விரிவாக்கும் நெறிகள் வழங்கும். அங்கீகரிக்கத் தக்க சான்றிதழ்களைப் பெறக்கூடிய இந் நெறிகளை பல்கலைக்கழகங்களும், தேசிய கல்வி நிறுவகமும் வழங்கும்.

3. **மீள் பயிற்சி கற்கை நெறி** (Re- Training Courses)

இது குறிப்பான பாடத் துறைகளை கற்பிப்பதனை (பிரதானமாக) மேற்கொள்ளும் ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்கும் நோக்கமுடையது. அதாவது மனித வலுத்தேவைகளுக்குத் துலங்கலடைவதான செயலாகும். குறித்த பாடத்தைக் கற்பிப்பதற்கு வேண்டிய விசேட தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் தமது சிறப்புப் பரப்புகளை இயைபுபடுத்திக் கொள்வதற்கு வேண்டிய சந்தர்ப்பங்களை இம் மீள் பயிற்சி நெறிகள் ஆசிரியர்களுக்கு வளங்கும். இந் நெறிகள் எந்தவொரு ஆசிரியர் பயிற்சி நிறுவனத்திலேனும் அல்லது தேசிய கல்விக் கல்லூரிகளிலேனும், ஆசிரிய கல்வி நிலையங்களிலேனும், தேசிய கல்வி நிறுவகத்திலேனும் அல்லது ஒரு பல்கலைக்கழகத்திலேனும் நடாத்தப்படலாம்.

4. **புத்தூக்கச் செயற்பாடு** (Referershing Activites)

உள்ளூர் ஆசிரியர்களது இனங்காணப்பட்ட தேவைகளுக்கு உதவும் மீளமைக்கப்பட்டதும், புதியதுமான நிகழ்ச்சித் திட்டங்களை ஆசிரியர்களுக்கு அறிமுகப்படுத்துதல், ஆசிரியர்களது தொழில் சார் அந்தஸ்தினைப் பலப்படுத்துதல் என்பன இவ்வாறான செயற்பாடுகளுக்கு உதாரணங்களாகும், ஒவ்வோர் ஆசிரியர்களுக்கும் இவ்வாறான பயிற்சியைப் பிரதி வருடமும் பெற்றுக் கொள்ள வழியமைத்துக் கொடுத்தல் இம் மறுசீரமைப்பின் நோக்கமாகும். இனங்காணப்பட்ட பிரதேசத் தேவைகள் கருதி பயிற்சி தேவைப்படும் அசிரியர்களுக்காக புத்தூக்க நெறிகள் நடாத்தப்படும்.

ஆசிரியர் கல்வி, ஆசிரியர் அமர்த்தச் செய் திட்டம் வழங்கும் தொழில் நுட்ப உதவியுடன் முறையானதொரு பயிற்சித் தேவை மதிப்பீட்டை நடாத்துவதனால் அத்தகைய தேவைகள் இனங்காணப்படலாம். பங்குபற்றும் ஆசிரியர்களுக்கு வசதியாய் அமையக்கூடியவாறு இப்பயிற்சி ஆசிரியர் மையங்களில் அல்லது பிரதேசத்திலுள்ள பாடசாலைகளில் அரை நாள் முதல் மூன்று நாட்கள் நீடிக்கக் கூடியவாறு நடாத்தப்படும்.

இந்நெறிகள் பெரும்பாலும் ஆசிரிய மைய ஆளணியின் உதவியுடன் கோட்ட அல்லது வலயக் கல்வி அலுவலகங்களைச் சேர்ந்த சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களால் நடாத்தப்படும் பாடசாலை முறைமையில் புதிய பாடவிதானங்கள் அறிமுகப்படுத்தப்படும் போது இந்நெறிகள் மிக அவசியமாகின்றன.

இந் நான்கு கற்கை நெறிகளும் சமமான முக்கியத்துவம் உடையன எனினும் அவை இறுதியாக அடையப்பட வேண்டும். என எதிர்பார்க்கப்படும் பட்டத்திலும் (பட்டம், டிப்ளோமா) கற்கையின் இயல்பிலும் (கிரமமான நேருக்கு நேர் நடைபெறும் தொடர்பாடல் மூலமான கற்கை நெறி, தொடர்பாடல் வகுப்புகளை உள்ளடக்கிய தொலைக் கல்வி , முறையான தனியாள் வேகத்துக்கேற்ற கற்கை நெறி) வேறுபடுகின்றன.

**ஆசிரியர்களின் கற்பித்தல் சார் பண்பு விருத்தியையும், ஆசிரிய வாண்மை விருத்தியையும் ஏற்படுத்துவதற்காகக் கொண்டு வரப்பட்ட புதிய மீளமைப்பே தொடருறு அசிரியர் கல்வியாகும். குறிப்பாக நாட்டின் ஆசிரியர் ஆளணியைத் தரமுயர்த்துவதற்கும் தற்காலக் கல்விப் போக்குகளுடனும், விடய உள்ளடக்கங்களுடனும் ஆசிரியர்கள் பரிச்சியப்படுவற்கும் இவற்றினூடாகக் கற்பித்தலின் தரத்தை மேம்படுத்துவதற்கும் தொடருறு கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள் அறிமுகப் படுத்தப்பட்டன.**

ஆனால் நடைமுறையில் இவை இடம்பெறுவதாகத் தெரியவில்லை அவ்வாறு இடம்பெறும் ஓரிரு பயிற்சி நெறிகளுக்கும் போதிய ஆசிரியர்கள் வருகை தருவதில்லை. அதிலும் தூர இடங்களிலிருந்து வருவதேயில்லை. எனலாம். விரிவுரையாளர்களுக்கும் செயலமர்வுகள் தொடர்பாகப் போதிய பயிற்சிகள் வழங்கப்படுவதுமில்லை. வழங்கப்படும் பயிற்சிகளும் சிங்கள மொழியில் வழங்கப்படுவதால் தமிழ்ப் பகுதிகளில் உரிய முறையில் அவை நடாத்தப்படுவதில்லை. பயிற்சியளிக்கும் விரிவுரையாளர்களிலும் பலர் கல்வி ரீதியாகவோ, தொழில் ரீதியாகவோ வாண்மையற்றவர்களாக உள்ளனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிற்சி பெறுபவர்களுக்கும் பாரம்பரியமான கற்பித்தல் முறைகளும் நுட்பங்களுமே அனேகமாக வழங்கப்படுவதைக் காண முடிகிறது.

ஒவ்வொரு ஆரியருக்கும் தொழில்சார் அபிவிருதிக்கான வாய்ப்பை வழங்குவதற்குத் தொடருறு கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள் தவறியுள்ளன. என்பது 2000 ஆம் ஆண்டு தொடக்கம் 2004 ஆம் ஆண்டு வரையில் நடைமுறைப்படுத்தப்பட்ட ஆசிரியர் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பாகச் செய்யப்பட்ட ஆய்வுகளின் போது தெரிய வந்துள்ளது. மரபு ரீதியான சேவைக்கால அமர்வுகளின் தன்மை உள்ளடக்கம் ஆகியவற்றிலிருந்து முற்றிலும் வேறுபட்ட வகையில் ஆசிரியர் மைய வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட போதிலும் "நேரடியாக ஆசிரியரையே அடைதல்" எனும் அறைகூவலை வெற்றி கொள்ள இவை தவறியுள்ளன. அத்துடன் தொடருறு கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள் அதிபர்களின் தொடர் தொழில்சார் விருத்தியில் பெருமளவு பங்களிப்புச் செய்வதில்லை. அதிபர்களை ஒதுக்கி வைத்துவிட்டு ஆசிரியர்களிடத்தே வாண்மை விருத்தியை ஏற்படுத்துவதென்பது சாத்தியமானதல்ல. அதிபர் தொடர்ந்தும் விருத்தியடைவாரானால் அதன் பெறுபேறு ஆசிரியருக்கு மிகத் துரிதமாகக் கிடைக்குமென்பதில் ஐயமில்லை.

**ஆசிரியர்கட்கு அமைக்கப்பட்ட கற்கை நெறியை வழங்குவதன் மூலம் அவர் தம் பாட விடயம் மற்றும் முறையியல் தொடர்பான அறிவை மேம்படுத்தும், தரமுயர்த்தும் நெறிகள் பாட உள்ளடக்கம், கற்பித்தல் முறைகள் என்பவற்றில் காலத்திற் கேற்றவாறான தற்போதைய போக்கு களை ஆசிரியர்கள் அறிய உதவும்.**

பாடசாலையை அடிப்படையாகக் கொண்டு தொடருறு கல்விச் செயற்பாடுகளை மேற்கொள்வதானால் முதலில் பாடசாலையின் தேவைகளை இனங்காணுதல் வேண்டும். தேவைகளை இனங்காணுவதானால் பாடசாலைக்குள்ளேயே அது இடம்பெறுவது சிறப்பானதாகும். எனவே பாடசாலையினுள்ளேயே தேவைகள் முன்னுரிமைப்படுத்தப்பட்டு பாடசாலையிலேயே ஆசிரியர்களுக்கான வாண்மை விருத்திச் செயற்பாடுகள் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

அதாவது ஆசிரியர் அபிவிருத்திக்காகப் பாடசாலையே தலைமைத்துவமேற்க வேண்டும். இதற்கு ஆசிரியர் மத்திய நிலையங்கள், கல்விக் கல்லூரிகள், ஆசிரியர் கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், ஏனைய அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் ஒத்துழைப்பு வழங்க முடியும். இதன்படி ஒரு பாடசாலையிலுள்ள அனைத்துப் பணியணியினரையும் பயிற்றுவிக்க முடியும். அத்துடன் புறவாரியான ஒரு நிறுவனத்தில் வழங்கும் பயிற்சியை விட நிறுவனத்தின் பணியணியினர் அனைவரையும் ஒன்று சேர்த்து வழங்கும் பயிற்சி யதார்த்த பூர்வமானதாக இருக்கும்.

மேலும் புதிய மீளமைப்பின் பின்பும் பல பிரச்சினைகள் தீர்க்கப்படாமலேயே உள்ளன. தோல்விகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. குறிப்பாக ஆசிரியர்களின் செயற்பாட்டு முறையான கற்பித்தல், மாணவர்களின் ஆக்கத் திறனை மேம்படுத்துதல் என்னும் விடயங்கள் தோல்வி கண்டுள்ளன. ஆசிரியர்களின் கற்பித்தல் முறையில் மாற்றங்களை ஏற்படுத்துவது ஆசிரியர் கல்வி நிறுவனங்களின் பிரதான பிரச்சினையாக உள்ளது. ஆசிரியர் கல்வி நிறுவனங்கள் வழங்கும் பாட ஏற்பாட்டிலும் பயிற்சியிலும் பல குறைபாடுகள் காணப்படுகின்றன. சில பயிற்சி நெறிகள் எல்லா மொழிகளிலும் வழங்கப்படுவதில்லை. அத்துடன் ஆசிரியர் கல்வியை வழங்கும் பல்வேறு துறையினருக்குப் போதிய அக்கறையில்லை. பல பயிற்சி நெறிகள் தர்க்க ரீதியாகத் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. சில ஆசிரிய கல்வி நிறுவனங்களே தொடர் மதிப்பீட்டைச் செய்கின்றன. என ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

புதிய கல்விச் சீர்திருத்தத்திற்கேற்ப ஆசிரிய கல்விக் கலைத்திட்டத்தையும் திருத்தியமைக்க வேண்டிய பொறுப்பு தேசிய கல்வி நிறுவகத்திடம் ஒப்படைக்கப்பட்டது. அதற்கேற்ப தேசிய கல்வி நிறுவகம் கல்விக் கல்லூரிகள், ஆசிரியர் நிலையங்கள் என்பவற்றுக்கான கலைத்திட்டங்களை விருத்தி செய்தது. ஆனால் கலைத்திட்டச் சீர்திருத்தங்களை வெற்றிகரமாகச் செயற்படுத்த இருந்த முக்கியமான தடை ஆசிரியர்களின் குறைந்த செயலாற்றலாகும். செயற்பாட்டை அடிப்படையாகக் கொண்ட கற்றல் - கற்பித்தல் செயன்முறையினூடாக அவர்களால் படைப்பாற்றலை மேம்படுத்த முடியவில்லை. ஆசிரியர் கல்வியுடன் தொடர்புடைய சகல நிறுவனங்களாலும் கற்பித்தல் முறையில் குறிப்பிடத்தக்க மாற்றங்களைக் கொண்டு வர முடியவில்லை இதற்குக் காரணம் அவை தமது மனித வளங்களை மேம்படுத்தத் தேவையான நிதி வசதிகளைப் பெற்றிருக்கவில்லை. குறிப்பாக தேசிய கல்வி நிறுவகத்துக்குச் சிறிதளவு சுயாதீனமே இருந்தது. கல்விசார் பதவியாளர் அணியில் காணப்பட்ட 40 சதவீதமான வெற்றிடங்கள் காரணமாக தற்போதைய தேவைகளுக்குப் பொருத்தமான ஆங்கில மொழிமூல, விஞ்ஞான, கணிதப் பட்டப் பின் படிப்புக் கற்கை நெறிகளை நடாத்துவதில் தாமதத்தை ஏற்படுத்தியுள்ளது. ஆட்சேர்ப்பு நடைமுறைகளில் காணப்பட்ட குறைபாடுகள் பதவியாளரின் தராதரங்களைப் பாதித்தன. அதன் காரணமாக நிகழ்ச்சித் திட்டங்களும் பாதிக்கப்பட்டுள்ளன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய மீளமைப்பின் அடிப்படையில் தேசிய கல்வி நிறுவகத்தால் வழங்கப்படும் கல்விமாணிப் பட்டச் சான்றிதழை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு ஏற்றுக் கொண்டுள்ளது. அது தவிர இக் கலைத்-திட்டத்தைப் பல்கலைக்கழக விரிவுரையாளர்களே பல்கலைக்கழகத் தரத்திற்கேற்ப வடிவமைத்துள்ளனர். மேலும் தொழில் வாண்மைப் பாடங்களைக் கற்பிக்கும் விரிவுரையாளர்கள் கல்வி முதுமாணிப் பட்டங்களைப் பெற்றிருத்தல் வேண்டும் என வலியுறுத்தப்படுகிறது. அது தவிர தேசிய கல்வி நிறுவகம் நடாத்தும் கல்வி முதுமாணிப் பாடநெறிகளிலும் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் பங்குபற்றுகிறார்கள் ஆனால் அவர்களாலேயே அது பற்றி விமர்சிக்கப்படுவதையும் குறிப்பிடுதல் வேண்டும்.

இவற்றிலும் சில சிக்கல்கள் உள்ளன உதாரணமாக கடந்த காலங்களில் கல்விமாணிப் பாடநெறியில் (பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு ஏற்றுக் கொள்ளாத ) சிறப்புச் சித்தி பெற்றவர்களும் (பல்கலைக்கழகப் பட்டங்கள் இல்லாதவர்கள்) கல்வி முதுமாணிப் பட்ட நெறியினைப் பின்பற்றுவதையும் காண முடிகிறது. அது தவிர சீர்திருத்தங்களின் அடிப்படையில் தேசிய கல்வி நிறுவகத்தில் பரீட்சை ஒழுங்கமைப்பிற்கும் மதிப்பீட்டிற்குமென தனிப்பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இது கடந்த காலங்களில் சான்றிதழ் கிளையில் ஏற்பட்ட குழறுபடிகளை நிவர்த்தி செய்வதாக உள்ளது. ஆனால் இன்னும் பரீட்சை முடிவுகள் வெளிவர நீண்ட காலமெடுப்பது பெரும் குறைபாடாக உள்ளது அது தவிர பரீட்சைத் திணைக்களத்துடன் ஒப்பிடக்கூடியளவு விருத்தி ஏற்படவில்லை பரீட்சை ஒழுங்கமைப்பிலும் மதிப்பீட்டுச் செயன்முறைகளிலும் பாரிய மாற்றங்களை இப்பிரிவு வேண்டி நிற்கின்றது.

தேசிய கல்வி நிறுவகம் தனது கல்விமாணிப் பாடநெறிகளைப் புது மீளமைப்பச் செய்துள்ளது. போதிய வாண்மைத்துவத் தகைமைகளையும் அனுபவங்களையும் பெற்றுச் சேவையிலுள்ள ஆசிரியர்களே இந் நெறியைப் பின்பற்ற முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் புதிதாகத் தொடங்கப்பட்ட சில கல்விமாணிப் பாடநெறிகளை நடாத்தும் தமிழ் மொழி மூல பிரதேச நிலையங்களில் போதிய கல்வி முதுமாணிப் பட்டம் பெற்ற விரிவுரையாளர்கள் இல்லாமையால் பாடநெறிகளைக் கொண்டு நடாத்துவதில் பல சிக்கல்கள் தோற்றம் பெற்றுள்ளன. சாதாரண பயிற்சி ஆசிரியர்களையும் பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியர்களையும் கொண்டே சில பாடநெறிகள் நடாத்தப்பட வேண்டிய இக்கட்டான நிலை காணப்படுகின்றது. அதே வேளை இவ்வகையான ஆசிரியர்கள் தேசிய கல்வி நிறுவகத்தால் நடாத்தப்படும் இறுதிப் பரீட்சைகளில் தொழில் வாண்மைப் பாட மதிப்பீட்டுப் பணிகளிலும் ஈடுபடுவது குறிப்பிடத்தக்கது.

**ஆசிரியர்கள் மேலதிகத் தகைமைகளைப் பெறும் பொருட்டுத் தமது அறிவையும் திறன்களையும் விரிவாக்கிக் கொள்ள இக் கற்கை நெறி ஊக்குவிக்கும். அதற்கு வேண்டிய வசதிகளை விரிவாக்கும் நெறிகள் வழங்கும். அங்கீகரிக்கத் தக்க சான்றிதழ்களைப் பெறக்கூடிய இந் நெறிகளை பல்கலைக்கழகங்களும் தேசிய கல்வி நிறுவகமும் வழங்கும்.**

இந்நெகிழ்ச்சிப் போக்கு கல்விமாணிப் பட்டத்தின் தரத்தைப் பாதிக்கும் அதேவேளை மதிப்பீட்டின் தரத்தையும் கேள்விக்குள்ளாக்கும். பயிற்சி நிலையங்கள் ஆரம்பிக்கும் போது வளங்கள் பற்றிக் கருத்தில் கொள்ளாமை தேசிய கல்வி நிறுவகத்தின் குறைவான முகாமைத்துவத் திறனையே காட்டுகின்றது. இது இந்நிலையங்களிலுள்ள மாணவர்களை வெகுவாகப் பாதிக்கின்ற செயற்பாடாகும். இந் நிலையங்களில் தொடர்ச்சியாகக் கற்பித்தல், மேற்பார்வை, மதிப்பீடு போன்ற யாவற்றிலும் இவ்வகைச் சிக்கல்கள் தோன்ற இடமுண்டு. எனவே வளங்களைக் கருத்தில் கொள்ளாது முன்யோசனையின்றி தேசிய கல்வி நிறுவகம் மேற்கொள்ளும் செயற்பாடுகள் இன்னும் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றன. இதனால் இதனைப் பற்றிய விமர்சனங்களும் தொடர வாய்ப்புண்டு.

தேசிய கல்வி நிறுவகம் பல புதிய பாடநெறிகளை ஆரம்பித்துள்ளமை சிறப்பம்சமாகும். உதாரணமாக விசேட கல்வியைக் குறிப்பிடலாம் அது தவிர வெளிநாட்டு மாணவர்களும் தேசிய கல்வி நிறுவகத்தில் பல புதிய பாடநெறிகளைப் பின்பற்றும் நிலை தோன்றியுள்ளது. எனினும் தமிழ் அதிகாரிகளின் பங்கு மிகவும் குறைவாகவேயுள்ளது. எனவே போதிய தமிழ் அதிகாரிகள் நியமிக்கப்படுவதுடன் அவர்களுக்குப் போதிய வாய்ப்புகளும் வழங்கப்படுதல் வேண்டும்.

கல்வியியல் கல்லூரிகளில் விரிவுரையாளர்களாகப் பணியாற்றுவோருக்கென ஆசிரிய கல்வியில் முது கலைமாணி என்னும் ஒர் விசேடமான உயர்கல்விப் பயிற்சி நெறியினை 2000 ஆம் ஆண்டில் இலங்கை திறந்த பல்கலைக்கழகம் தொடங்கியது. தேசிய கல்வி அணைக்குழு ஆசிரிய கல்வியியலாளர்களின் தொழிற்றகைமைகளை மேம்படுத்த வேண்டியதன் அவசியத்தை எடுத்துக் காட்டியமையும் இத்தகையதொரு உயர்மட்டக் கற்கை தொடங்கப்பட்டமைக்கு ஒரு காரணமாகும். ஆசிரிய கல்வியியலாளர்களுக்காக முதன்முதலில் தொடங்கப்பட்ட கற்கை நெறி இதுவாகும் இந் நெறிக்கு விண்ணப்பிப்போர் கல்வியியல் கல்லூரிகளில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரிவுரையாளர்களாக இருக்க வேண்டும் என விதிக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்நெறியினை ஆசிரிய கல்வியியலாளர்கள் அல்லா ஆசிரிய நிலைய முகாமையாளர்களும், ஆசிரிய ஆலோசகர்களும் பின்பற்றுகிறார்கள். இவை யாவற்றையும் தொகுத்து நோக்கும் போது ஆசிரிய கல்வி மீண்டும் மீண்டும் மீளமைக்கப்பட வேண்டிய சூழ்நிலை தோற்றம் பெற்றுள்ளது. மேலும் ஆசிரியர் தொகை அதிகரிப்பினால் பதவி நிலை தொடர்பாக எழும் போட்டிகள், தகைமைகளைப் பெற்றுக் கொள்வதில் போட்டி மனப்பான்மையை உருவாக்கியுள்ளன. எனவே ஆசிரிய

**புதிய கல்விச் சீர்திருத்தத்திற்கேற்ப ஆசிரிய கல்விக் கலைத்திட்டத்தையும் திருத்தியமைக்க வேண்டிய பொறுப்பு தேசிய கல்வி நிறுவகத்திடம் ஒப்படைக்கப்பட்டது. அதற்கேற்ப தேசிய கல்வி நிறுவகம் கல்விக் கல்லூரிகள். ஆசிரியர் நிலையங்கள் என்பவற்றுக்கான கலைத்திட்டங்களை விருத்தி செய்தது. ஆனால் கலைத்திட்டச் சீர் திருத்தங்களை வெற்றிகரமாகச் செயற்படுத்த இருந்த முக்கியமான தடை ஆசிரியர்களின் குறைந்த செயலாற்றலாகும்.**

கல்வியில் ஏற்படுத்தப்பட்ட புதிய மீளமைப்பு மேற்படிப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் போதுமானதல்ல எனலாம். அத்துடன் ஆசிரிய கல்வித் துறையில் தெளிவாகத் தெரிகின்ற பல குறைபாடுகள் இருக்கின்றன. இவற்றை இனங்கண்டு அகற்றுவதில்தான் ஆசிரிய கல்வியின் தராதர மேம்பாடுகள் தங்கியுள்ளது. என்பதுடன் தேசிய ரீதியில் ஆசிரிய கல்வியுடன் தொடர்புபட்டவர்களின் மன நிலையில் அடிப்படை மாற்றம் ஏற்படும் வரை எத்தனை மீளமைப்புகள் கொண்டுவரப்படினும் அது பயனற்றதாகவேயிருக்கும்.

---

**இனிய சிந்தனைகளைக் கொண்ட கூண்டுகளாக, உங்களையே கட்டிக் கொள்ளுங்கள். அழகான சிந்தனைகளைக் கொண்டு, துன்பங்களும் தாக்க முடியாத, தேவ மாளிகைகளைக் கட்டிக் கொள்ள முடியும் என்பது நமக்கு இன்னமும் தெரியாது. ஏனென்றால், இளமையில் நம்மில் எவர்க்கும் இது சொல்லித் தரப்படவில்லை.**

-ஜான் ரஸ்க்கின்-

**ஆழ்ந்த சிந்தனையிலிருந்து வரும் நிதான தோற்றம் ஒன்று உண்டு. அது உத்தமமானது, மந்த நிலையிலிருந்தும், மகிழ்ச்சி கொள்ளும் ஆற்றல் இழந்த மன வறட்சி நிலையிலிருந்தும் வரும் நிதானத் தோற்றம் வேறு, அது மிகவும் கீழ்த்தரமானது.**

-ஜான் ரஸ்க்கின்-

---


அகவிழி

**AHAVILI,**
*3, Torrington Avenue, Colombo - 07*
*Tel : 011-2506272*
*E.mail : ahavili@viluthu.org*

## சந்தா விபரம்

காசோலை மூலம் பணம் செலுத்துபவர்கள் **AHAVILI** எனப் பெயரிட்டு அனுப்புக.

காசுக் கட்டளையாயின் **AHAVILI** எனப் பெயரிட்டு **HAVELOCK TOWN** தபால்நிலையத்தில் மாற்றக்கூடியவாறு அனுப்பி வைக்கவும்

*ஏற்கனவே ஆண்டுச் சந்தா செலுத்தி இதழ்களைப் பெற்று வந்து தொடர்ந்து சந்தாவைப் புதுப்பிக்காமல் விட்டவர்கள் இதழ் தொடர சந்தாவைப் புதுப்பிக்கவும்.*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடிதங்கள்

அகவிழியின் ஆரம்பம் முதல் ஒரு அபிமான வாசகராக எல்லாக் கட்டுரைகளையும் வாசித்து வருகின்றேன். இலங்கையில் கல்வியில் ஏதோ ஒரு வகையில் நிபுணத்துவம் வாய்ந்தவர்கள், தாம் பெற்ற கல்வி மூலம் எதையாவது சாதித்துவிடவேண்டுமென்ற அவாவுடனும் அவர்கள் எழுதிவருவதை உண்மையில் பாராட்டியே ஆகவேண்டும்.

அத்துடன் அகவிழி ஆசிரிரும் குறுகிய காலத்தில் கல்விப்புலத்தில் நல்லமாற்றங்களை விரைவுபடுத்தவேண்டுமென்ற அவாவுடன் எழுதும் கருத்துக்கள் மிக வலுவானவையாகக் காணப்படுகின்றன.

எனினும் ஆசிரியரின் நோக்கமும் தற்போது இரு அகவிழி பார்வை 22, பார்வை 23 ஆகிய இரு முகப்பு அட்டைகளில் வந்த (கார்ட்டூன்) படங்களும் ஆசிரியரின் எண்ணத்தை மாற்றிவிடுமோ என்ற சந்தேகம் என்னுள் ஏற்பட்டது. எந்தஒரு செயற்பாட்டிலும் அழுத்தங்களும் தடைகளும், நலிவுகளும் இருப்பது வழமை. அந்தத் தடைகளையும் அழுத்தங்களையும் சுட்டுவதற்கும், குறையாகக் குறிப்பிடுவதற்கும் அதிக சிரத்தை எடுக்கவேண்டிய அவசியமில்லை என்பது எனது தாழ்மையான கருத்தாகும். கடந்த இரு அகவிழி முகப்பு அட்டைகளையும் பார்க்கும் ஒருவருக்கு கல்விபற்றிய எதிர்வகையான எண்ணங்களும் பயமும் ஏற்பட வாய்ப்பு ஏற்படுகின்றது.

சமூக விழிப்புணர்வை ஏற்படுத்த கல்வியே சிறந்த கருவி என்பதற்கு மாற்றுக்கருத்துக்கள் இருக்காது என எண்ணுகின்றேன். எனவே கல்விபற்றிய தெளிவை ஏற்படுத்தக்கூடிய பல்வேறு வகையான கற்றல் சந்தர்ப்பங்களை, கற்றல் சாதனங்களை குறிப்பாக தகவல் தொழில்நுட்ப சாதனங்கள், இணையம், தொலைக்கல்வி, வீடியோ மாகாநாடு (Video Conference), முகப்பில் இடுவதன்மூலம் கல்வி பற்றிய நேர்வகையான சிந்தனையை ஏற்படுத்தலாம் அல்லது கல்வி தொடர்பான விழிப்புணர்வை, அல்லது ஆர்வத்தை ஏற்படுத்தலாம் என எண்ணுகின்றேன்.

அகவிழி பார்வை 23 இன் ஆசிரியர் கருத்தில், "....... சலிப்பூட்டும் நியமமான திட்டங்களின் சட்டகத்திற்குள் மட்டுமே உயிர்ப்பற்ற நிலையில் வாண்மை விருத்தி ஒப்புவிக்கப்படுகிறது....." என்ற வாக்கியம் எந்தளவிற்கு பொருத்தமானது என்பதை ஆராய்வதை விட மாற்றத்தைக் கொண்டுவரக்கூடிய வலுவுள்ளவர்களே அகவிழி ஆலோசகர்குழுவிலும், கட்டுரையாளர்களிலும் அதிகமாக உள்ளனர். இவர்கள் தாம் சார்ந்த நிறுவனங்களில் மாற்றங்களை உள்வாங்கி வாண்மை விருத்தி தொடர்பான புதிய பரிமாணத்தை ஏற்படுத்த தயங்குவதேன். கட்டுரைகளில் புதிய பரிமாணங்களை எழுதுவதுடன் நின்றுவிடாது அவற்றை நடைமுறைப்படுத்தும் உபாயங்களையும் வழிமுறைகளையும் முன்வைப்பது சிறந்தது என்பதும் எனது தாழ்மையான கருத்தாகும்.

தமிழர் கல்வியின் தாயென கருதக்கூடிய நிறுவனங்களில் இன்னமும் Chalk and Talk உடன் அநேகர் வலம் வருவதை இன்றும் காணலாம். நன்றி.

**பரசுராமன்.எஸ்.**

✉ ✉ ✉ ✉ ✉

அகவிழியின் தொடர்ந்த வாசகன் என்ற ரீதியில் சில கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன். பொதுவாக தமிழ்ச் சூழலில் 'வாசிப்பு மட்டம்' 'வாசிப்புக் கலாசாரம்' வெகுவாக தாழ்ந்து கொண்டிருக்கிறது. இத்தன்மைக்கு ஆசிரியர்களும் உட்பட்டிருக்கிறார்கள். ஆகவே ஆசிரியர்கள் தேடல், சுயகற்றல், நவீன உலகுடன் இணைதல்.... போன்ற பண்புகளைக் கொண்டிருப்பவர்களாக இல்லை அகவிழி இதழுடன் பரிச்சயம் கொள்வது கூட ஒரு தொந்தரவு மிக்க செயற்பாடாகவே கருதுகிறார்கள். வகுப்பறைச் செயற்பாட்டில் எப்போதாவது மட்டுமே சில நூல்களைப் புரட்டிப் பார்த்து மேய்ந்து செல்லும் நிலமை சில ஆசிரியர்களுக்கு ஏற்படுவது உண்டு. இத்தன்மை அவர்களது வாழ்முறையில் பொதுவான நடத்தைக் கோலமாக உருப்பெறுவதற்கான சாத்தியங்களை கொண்டிருப்பதற்கான அறிகுறிகள் இல்லை. இந்நிலையில் தான் அகவிழியின் வருகை உள்ளது.

அகவிழி ஆசிரியர்கள் மத்தியில் உடனடி விளைவுத் தன்மையை கொண்டு வந்து விடாது. ஆனால் அதன் தொடர்ந்த வருகை 'தேடல்' 'சுயபிரக்ஞை' 'சுயமரியாதை' உள்ள ஆசிரியர்களிடம் விளைவுகளை நிச்சயம் உருவாகும். இதில் நம்பிக்கை கொண்டால் தான் அகவிழியின் சமூகப் பொறுப்பு எத்தகையது என்பது அகவிழிக்கே புலனாகும். ஆகவே சோர்வடையாது அகவிழி வருவது தான் எதிர்காலத்துக்கான சிறந்த சமிக்ஞையாக இருக்க முடியும்.

அகவிழியின் உள்ளடக்கம் சார்ந்து இன்னும் பல மாற்றங்களைச் கொண்டுவர முடியும். வெறும் போதிப்பது என்ற தன்மைகளைக் கொண்ட கட்டுரைகள் இல்லாமல், சிந்தனை சொல் ஆகியவற்றை கேள்விக்குள்ளாக்கும் செயல்தன்மை கொண்ட கட்டுரைகள் இடம் பெறுவது பொருத்தமாக இருக்கும்.

வாசிப்புச்சூழல் தன்னளவில் கொண்டிருக்கும் தடைகளை அகற்றி முன்னோக்கி நகர்த்தும் பண்புசார் தன்மைகள் விரிந்து செல்ல வேண்டும். ஆசிரியர்களின் மனப்பாங்கு மாற்றத்துக்கும் தேடல் பண்புக்கும் உரிய களங்களைத் தன்னகத்தே கொண்டிருக்க வேண்டும்.

பல கட்டுரைகளில் சலிப்பூட்டுக்கும் ஒற்றைத் தன்மை மிக்க அர்த்தமாக்கல் திணிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக எழுதுபவர்கள் தன்னளவில் கரைந்து பன்முக உரையாடல் விரிவு பெறும் சாத்தியங்களைக் கொண்டிருக்குமானால் "வாசிப்பு அனுபவம்" அவரவருக்குள் கட்டமைக்கும் அனுபவம் முதிர்ச்சியும் செயல் தன்மையும் கொண்டதாக உருமாறும். இதுதான் ஆசிரியர்களிடம் வேண்டும்.

எமது கல்விமுறையில் உள்ள குறைபாடுகள் ஆசிரியர் சமூகத்தையும் மலட்டுத்தன்மை வாய்ந்த சமூகமாக உருமாற்றியுள்ளமையை நாம் மறுக்க முடியாது. இன்று படைப்பாற்றல் மாணவர்களிடம் மட்டுமல்ல ஆசிரியர்களிடமும் இல்லை. ஆசிரியர்களிடமுள்ள படைப்பாற்றல்கள் வெளிக் கொணரப்படக்கூடிய செயன்முறைகள் குறித்து நாம் இனிக் கவனம் செலுத்துவது ஆரோக்கியமாக இருக்கும்.

இனிமேல் அகவிழி மேற்குறிப்பிட்ட சிந்தனைகளையும் உள்வாங்கிச் செயற்பட வேண்டும்.

**கா.இராசநாயகம்**
**கொழும்பு**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Stay @ Home Work @ Office Study at Free Time Get a Degree From

# MADURAI KAMARAJ UNIVERSITY

## DIECTROATE OF DISTANCE EDUCATION

## மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

Estd. 1965

**Study In Sri Lanka**

(University accredited at the 'Four Star Level' by NAAC-India and conferred the University with Potential for Excellence Status by UGC-India) Member of the Association of Indian Universities (AIU) and Member of the Association of Commonwealth Universities (ACU-UK).

## PG COURSES

### (2years T/E Medium)

M.A. (History)
M.A. (Political Science)
M.A. (Economics)
M.A. (English Literature)
M.A. (Gandhian Thought)
M.A. (Public Administration)
M.A. (Philosophy & Religion)
M.A. (Sociology)
M.Com
M.A. Tamil Literature
M.Sc. (Mathematics)

## M.Phil. Courses

### ( 1 Year )

History, Political Science, Public Administration, Economics, Labour Studies, Tamil, English, Education, Commerce, Entrepreneurship, Mathematics, Peace Making & Gandhian Thought, Sociology, Management, Computer Science, Tourism Management, Journalism & Mass Communication

## UG COURSES ( 3 Year )

### In Tamil & English Medium

B.A. (Tamil Literature)
B.A. (English)
B.A. (History)
B.A. (Social Science)
B.A. (Political Science)
B.B.E. (Business Economics)
B.Com.
B.Com. (with Computer Applications)
B.G.L. (General Law)
B.T.M. (Tourism Management) BTHM
B.Sc. (Mathematics)
B.B.A.
B.L.I.Sc. (Library & Information Science)

**Diploma Courses:** Labour and Administrative_Law, Saiva Siddhanta
**Certificate Courses::** French, IT Library and Information Science

## PG DIPLOMA IN

1. Journalism & Mass Communication
2. Public Relations Management
3. Personal Management & Industrial Relations
4. Marketing Management
5. Hospital Management
6. Entrepreneurship Development
7. NGO Management
8. Labour & Administrative Law
9 School Administration

## PROFESSIONAL COURSES ( 2 Year )

M.B.A.
M COM (Banking)
M.L.M. (Labour Management)
M.T.M. (Tourism Management)
M.A.. (Advertisement &- Public Relations)
M.C.J. (Communication & Journalism)
M.Com. (Co-op. Management)

## IT COURSES - Eng

M.C.A. - 3 years
B.C.A. - 3 years
B.Com. (with computer Applications) - 3years
P.G.Diploma in Computer Applications- 1 year

## MBA

## 2 ஆண்டுகள்

**Note: Any degrees awarded by the above university are recognised by UGC, Sri Lanka.**

**1.** பரீட்சைகள் மே / டிசம்பர் மாதங்களில் கொழும்பில் நடைப்பெறும். **2.** 2006 புதிய பதிவுகளுக்கான முடிவுதிகதி 30-4-2006
**3.** A/L/, O/L முடிந்தவர்கள் பட்டநெறிகளை தொடரலாம் **4.** HNDA டிப்ளோமா உள்ளவர்களும் முதுகலைமாமணிக்கு விண்ணப்பிக்கலாம் **5.** மே பரீட்சைக்கான விண்ணப்ப முடிவு திகதி 31-03-2006

மேலதிக விபரங்களுக்கு **AMBIGA HIGHER EDUCATION CENTRE**

No 46, New Chetty Street, Colombo-13, Sri Lanka. 01300
Tel: 2386722, 2433060 Fax: 2433060 / web: www.mkuniversity.org, www.mkudde.com
E-mail: ambigaed@hotmail.com

**இணைப்பாளர்கள்**

New College of Higher Studies
95 Ariyakulam Junction,
Jaffna - 021-2228148

Mr.M.Jamaldeen
419, Ameer Miza Road,
Nintavur
067-2250612

Mr.O.K. Kunanadaan
64 Kathirkama Road,
Batticolo
077-6041503

M.Azard
12, Nedunkulam Road,
Puttalam.
032-2265224

Mr.K.Thavabalachandren
116/C/1, Uda Eriyagama
Peradeniya.
Tel: 081-4470039

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அகவிழி" கிடைக்குமிடங்கள்

**கொழும்பு**
- இஸ்லாமிக் புக் ஹவுஸ்
- லங்கா புத்தகசாலை
- பூபாலசிங்கம் புத்தகசாலை
- ஜெயா புக் சென்ரர்
- Winsor புத்தகசாலை
- VJP இன்டர்நஷனல்
- டானியல் புத்தகசாலை
- கோகுலம் புத்தகசாலை
- பமிலா புத்தகசாலை
- Coradova புக் சொப்
- Avco புத்தகசாலை
- பிற்றபன்
- சாயி புத்தகசாலை
- புக் சென்ரர்

**வத்தளை**
- விஸ்டம் புக் சொப்

**வன்னி**
- கவிதா ஸ்டோர்ஸ்
- KPK புத்தகசாலை
- கஜன் சென்ரர்
- அறிவமுது புத்தகசாலை
- JPK சென்ரர்
- உயர்ச்சி புத்தகசாலை

**யாழ்ப்பாணம்**
- பூபாலசிங்கம் புத்தகசாலை
- துர்க்கா ஸ்ரேசனர்ஸ்
- ஸ்ரீலங்கா புத்தகசாலை
- சிதம்பரப்பிள்ளை புத்தகசாலை - கரவெட்டி
- புக் லாப் -பரமேஸ்வர சந்தி - திருநெல்வேலி

**திருகோணமலை**
- லெஸ்னி ரேடர்ஸ்
- ரசாக்கியா புக் சென்ரர்
- ஈஸ்ட் லிங் கொம்னிகேஷன்

**கல்முனை**
- அன்பு ஸ்ரோர்ஸ்

**மட்டக்களப்பு**
- ராஜாஸ் புக் சென்ரர்
- சக்தி நூல் நிலையம்

**கண்டி**
- லங்கா சென்ரல் புத்தகசாலை
- கலைவாணி புத்தகசாலை தலவாக்கலை
- அபிசா புக் சொப்
- அருள் ரேட் சென்ரர்

**புத்தளம்**
- சாகித்தியா புத்தகசாலை

**ஹற்றன்**
- நியூ கேசவன் புக் சொப்

**நுவரெலியா**
- குமரன்ஸ் ரேட் சென்டர்

**மாத்தளை**
- பேப்பர் கோர்னர்

**அக்கறைப்பற்று**
- நவ்சாட் ரேடீங் சென்டர்

**நாவலப்பிட்டிய**
- வேல்ஸ் கோர்னர்

**டிக்வெல**
- பேப்பர் ஹவுஸ்

**கம்பளை**
- MS புக் சொப்
- ஹம்சாஜ் கொம்னிகேஷன்

**பொலனறுவை**
- ஷீமா கொம்னிகேஷன்

**மன்னார்**
- ஜோதி புக் சென்டர்

ஏகவிநியோகஸ்தர்

## காயத்ரி பப்ளிகேஷன்

1/A றூபன் பீரிஸ் மாவத்தை,
களுபோவில, தெஹிவளை.
தொலைபேசி : 011-2727621 மொபைல் : 071-4326426

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org